UNIVERSITY OF TRAVANCORE
TAMIL SERIES No. 5

# SRI SWATI TIRUNAL

*By*

SOORANAD P. N. KUNJAN PILLAI M. A.

TRANSLATED INTO TAMIL

*By*

P. S. NARAYANASWAMI B. A., L. T.,

MADURAI UNIVERSITY LIBRARY
9 NOV 1972
MADURAI-2.

DEPARTMENT OF PUBLICATIONS
TRIVANDRUM.
UNIVERSITY OF KERALA

UNIVERSITY OF TRAVANCORE
TRIVANDRUM

*1957* *Price Re. 1*

Book supplied by the University
Central Co-op. Stores, Madurai.

Printed & Published by the Superintendent,
Department of Publications, for the
University of Travancore

*RIGHTS RESERVED*

First Impression
Copies, 1000

JANUARY 1957

*Printed at the Alliance Printing Works, Trivandrum,*

# ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

(ஸ்ரீமான் சூரநாட்டு குஞ்சன்பிள்ளையவர்கள் இயற்றிய மலையாள நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு)

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஸங்கீத வித்தியா சாலையின் பிரதான நிர்வாக ஆசிரியர் ஸ்ரீமான் சங்கீத கலாநிதி ராஜ்யஸேவா நிரத வித்வான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யரவர்களுடைய சிறப்புரையுடன்.

மொழிபெயர்ப்பாளர்:

பி. எஸ். நாராயணஸ்வாமி, B. A., L. T.

# முகவுரை

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்களின் பெயரும், அவர் இயற்றிய அரிய சாகித்தியங்களும் வெகுகாலமாக பிரசித்தி பெற்றிருந்தும், அம்மன்னர் பிரானின் வாழ்க்கை விவரங்கள் பொது மக்கட்கு நன்ருகத் தெரிந்திருக்கவில்லை. கேரள நாட்டைப் பொருத்தவரையில், இக்குறையை, ஸ்ரீமான் சூரநாட்டு குஞ்சன்பிள்ளையவர்கள் இயற்றிய மலையாள நூல் போக்கியது. தமிழ் மக்களும் மன்னருடைய வாழ்க்கை விவரங்களின் சிறப்பை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற பேராவலுடன், தமிழ்ப் பயிற்சி சற்றேனும் இல்லாமலிருந்தும், அச்சிறு நூலை மொழி பெயர்க்கத் துணிந்தேன். இதில் மலிந்து காணும் குற்றம் குறைகளை அன்பார்ந்த வாசக நேயர்கள், மன்னித்து நூலை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

இம் முயற்சியில் நான் ஈடுபடும்படி என்னைத்தூண்டிய ஸங்கீதகலாநிதி ஸ்ரீ. செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் அவர்களுக்கும், சதா ஊக்களித்து உதவி புரிந்தவராகிய ஸ்ரீ சூரநாட்டு குஞ்சன்பிள்ளை அவர்களுக்குப், பிரசுரத்திற்குத் தகுதி வாய்ந்ததென்று அங்கீகாரம் நல்கிய திருவிதாங்கூர் சர்வகலாசாலை அங்கத்தினர்க்கும் நான் என்றென்று கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவனந்தபுரம்

துன்முகி வரு ஆனி மீ

பு. ஸ்ரீ. நா.

# முன்னுரை

(மலையாள மூலக்ரந்ததினுடையது)

கொல்ல வருஷம் 11-ம் நூற்றுண்டின் ஆரம் பத்தின் முதற்பகுதியில் கேரள கலைகளுக்கேற்பட்ட புத்துணர்வுக்கும் உயற்சிக்கும் மூலகாரணமாக விருந்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர் களைப்பற்றி அறியாத கலையன்பர்கள் தென்னிந்தி யாவில் இருந்திருக்க முடியாது. அம்மன்னர் கொல்ல மாண்டு 1004-ஆமாண்டிலிருந்து 1022-ஆமாண்டு வரை திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திற்கு அதிபதியாய் அரசு புரிந்து வந்தார். அரசாட்சியில் மாத்திரமல்லாமல், அதற்கும் மேல்படியாய் ஓர் உயரிய கலாநாயகன் என்கிற பதவியையும், அவ்வழியாய் என்றும் அழியா ப்புகழையும் அடைந்த மன்னர் அவர். இராஜ்ஜிய த்தின் தலைவன் என்கிற நிலையில் அவர் கேரள நாட்டின் தெற்குக் கோடியில் ஒரு கேவலம் சிறு பகுதியாகிய திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திற்கு மாத்தி ரம் தலைவனாக இருந்தார். ஆயினும் ஸாகித்தியம், ஸங்கீதம் என்கிற துறைகளில் சிறந்த கலாநாயக னாகவும், கலாபோஷகனாகவும் இருந்து "தக்ஷிண போஜன்" என்கிற பெயர் பெற்று பாரதம் முழுதும் அழியாப் புகழுடன் விளங்கினார். இந்நூலில் அம் மகானுடைய சரித்திரம் கேரள நாட்டினருடைய அன்பார்ந்த வரவேற்புக்காக எழுதப்பட்டுச் சமர்ப் பிக்கப்படுகிறது.

திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தின் சரித்திரம், அரசியல் விவரங்கள், கலைவளர்ச்சி இவ்விஷயங்களிலெல்லாம் அம்மன்னருடைய ஜீவிய வரலாறு, ஆழ்ந்து படிப்பதற்குத் தகுந்தது என்பதும், பாரதம் சுதந்திரம் அடைந்திருக்கும் இக்காலத்திலும் அவருடைய சரித்திரம் ஓர் அரிய மேற்கோளாகவிருக்கிறது என்பதும் இந் நூலால் நன்கு விளங்கும். ராஷ்ட்ரீய விஷயமாய்ப் பார்த்தால், அது வரையில் சுதந்திரமாக வாழ்ந்த ஒரு நாடு பிறருக் கடிமையாகிய ஒரு கதையை நாம் காண்கிறோம். பாலராமவர்ம மகாரராஜாவின் காலம் வரையில் சுதந்திரமாகவிருந்த திருவிதாங்கூர் இராஜ்ஜியம் ஆங்கில அரசாங்கத்திற்கு வேண்டா வெறுப்பாக வேறு வழியில்லாமல் அடிமையாக வேண்டியதாயிற்று. ஸ்ரீஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் ஆண்மையானது எவ்வளவு வெறுப்புடன், பிரிடிஷ் ரெஸிடெண்டினுடைய அநியாயமாகிய கையேற்றங்களைப் பொறுக்க வேண்டியதாயிற்று என்கிற கதையை, பாரதம் சுதந்திரம் பெற்றிருக்கும் இத்தருணத்தில் நாம் ஒரு ஆசுவாசப் பெருமூச்சுடன் நினைக்கவேண்டியதவசியம். அரசியல் துறையிலோ, அம்மகானுடைய ராஜ்ரீகம் மிகவும் உறுதியும் நீதி நியாயங்களும் நிறைந்த ஓர் அரசாட்சியாகவிருக்கிறது. அரசியலமைப்பைத் தூய்மைப் படுத்திச் சீர்படுத்தும் விஷயத்தில் அவர் எடுத்த முயற்சிகளை ஆராய்ந்து பார்த்தால் வெகு சிலரையே அவருக்கு ஒப்பிட்டுக் கூற முடியும். இராஜ்ஜியம் முன்னேறுவதற்குக் கல்வியை அபிவிர்த்தி செய்து வளர்த்ததில் அவருக்கு எவ்வளவு உயர்ந்த

ஸ்தானமிருந்தது என்பதற்கு அவருடைய சரித்திரமே சான்றாகும். அதனால் பல துறைகளிலும் மேன்மை வாய்ந்த ஓர் கதையாகும் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் ஜீவிய சரித்திரம்.

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் விண்ணுலகடைந்து நூறு வருஷங்கள் ஆனபிறகு அதாவது 1122-வருஷத்தில், நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அச்சமயத்தில் வெளிப்படுத்த வேண்டியதென்கிற கட்டளையை அனுசரித்து எழுதப்பட்டது இந்நூல் அரசாட்சி, கலைத்தொண்டு, கலை உபாஸனை என்கிற மூன்று அம்சங்கள் மகாராஜாவின் வாழ்க்கையில் முக்கியமானவை. இம்மூன்று விஷயங்களைப் பற்றிய விவரங்கள் இந்நாலில் அடங்கியுள்ளன. கேரள சரித்திரத்தை விரிவாகப்படித்தறியவும், பழைய ஏட்டுச் சுவடிகளையும், குறிப்புக்களையும் பரிசோதித்துப் பார்க்கவும், இதுவரையில் நான் எடுத்த முயற்சிகள், இந்நூலை இயற்றும் செயலில் மிகவும் உதவியாக விருந்தன. ஸ்ரீ சங்குண்ணி மேனவனுடைய "திருவிதாங்கூர் சரித்திரம்", ஸ்ரீ நாகமய்யா, ஸஹஸ்யதிலகன் ஸ்ரீ டி. கெ. வேலுப்பிள்ளை இவர்களுடைய "திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவல்" என்கிற கிரந்தங்கள், ஸ்ரீ பத்மநாபஸ்வாமி கோயில், அரண்மனை, ஹஜூர் ஆபீஸ் இவைகளில் வைத்திருக்கும் பல குறிப்புக்கள் இவைகளெல்லாம் இந்நூலை இயற்றுவதற்கு உபயோகப்பட்டன. இந்நூலை இயற்றுவதற்கு உத்தரவு தந்து நூலைப் பிரசுரித்து எனக்கு ஊக்கமளித்த கனம் அரசாங்கத்திடனோடு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவனந்தபுரம்.

4—2—1950.

22—6—1125 M. E.

நூலாசிரியன்,

சூரநாட்டு குஞ்சன்பிள்ளை.

# சிறப்புரை

அரசர்களில் ஸங்கீத வித்வானகவும், ஸங்கீத வித்வான்களில் அரசராகவும், வாக்கேயகார ரத்ன மாகவும் விளங்கிய ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மஹா ராஜா அவர்களது ஜீவிய சரித்திரத்திற்கு மதிப்புரை எழுத எனக்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு நான்மிக வும் பெருமைப்படுகிறேன்.

ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் நல்முத்து உண்டாகிறது என்பது எல்லோரும் அறிந்ததே. நல்முத்தைப் போல் ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் கர்ப்ப ஸ்ரீமானக அவ தரித்த ஸ்ரீ ஸ்வாதி மன்னரின் பெயரும் புகழும் வெகுகாலமாகவே இசை உலகில் பரவி பிரஸித்தி யடைந்து வந்திருக்கிறது.

அம்மஹான், இப் பூவுலகில் மிகச் சிறுகாலமே வாழ்ந்திருந்து மறைந்துவிட்டார். அதாவது, தனது 16-வது வயதில் ராஜ்ய பட்டத்தை ஏற்று 34 வயது வரை அரசாக்ஷி புரிந்து, ஸ்ரீ பத்மனபப் பெருமா னின் பாதாரவிந்தங்களில் ஐக்கியமாகிவிட்டார்.

அந்த 18 வருஷகாலத்திற்குள்ளாக, அவர், இசைக்கலைக்கும், நாட்டியம், ஹரிகதா காலக்ஷேபம் முதலிய கிளைக்கலைகளுக்கும், எவ்வளவு தொண்டு செய்துள்ளார் என்பதும், அரசியல், கல்வி வளர்த் தல், குடிமக்களைக் காப்பாற்றுதல், பொதுநலஸேவை முதலிய பல துறைகளிலும் தொண்டாற்றி எவ்வித மான வெற்றியை அடைந்துள்ளார் என்னும் விஷ யங்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டியது மிக வும் அவசியமாகும்.

ஆனல் அன்னாரது ஜீவிய சரித்திரம் தமிழில் இதுவரை வெளிவராமலிருந்தது ஒரு பெரிய குறையாகவே இருந்தது. இந்த விஷயத்தைப்பற்றி, எனது நண்பரும் நல்ல ரஸிகருமான ஸ்ரீ P. S. நாராயணஸ்வாமி அவர்களுடன் நான் பேசியபொழுது ஸ்ரீ. சூரநாட்டு குஞ்சன்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு திருவாங்கூர் கொச்சி ஸர்க்காரால் பிரசுரிக்கப்பட்ட மலையாள மூலகிரந்தம் என்னிடம் இருந்ததைக் காண்பித்து அதைத் தமிழில் மொழிபெயர்த்தால் அச்செயல் ஒரு அரிய தொண்டேயாகும் என்று கூறினேன். ஸ்ரீ P. S. நாராயணஸ்வாமி அவர்கள் மகிழ்ச்சியுடன் அப்பணியை ஏற்று, இந்நூலை உருவாக்கியுள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

இது சிறிய நூலாயினும் ஸ்ரீ ஸ்வாதி மன்னரின் வாழ்க்கையும், அவர் பல துறைகளிலும் புரிந்த அரும் செயல்களும், வெகு அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. கேவலம் 18 வருஷங்களுக்குள் துன்பம் நிறைந்த அரசாக்ஷியின் கடும் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்தும், கலைத்துறையில் அவர் சாதித்திருக்கும் அற்புதங்கள் சொல்லிலடங்காதவை.

ஆதி சங்கரர், இயேசுநாதர், ஸ்வாமி விவேகானந்தர், முதலிய மாஹான்கள் தாங்கள் புவியில் ஜீவித்திருந்த மிகக்குறுகிய கால அளவிற்குள் அற்புதச் செயல்களை உலகம் வியக்குமாறு செய்து விட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். அம்மஹான்களைப்போலவே ஸ்ரீ ஸ்வாதித் திருநாளும் அரும்

தொண்டாற்றிவிட்டுத் தனது 34-வது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார். அவருடைய "வாழ்க்கை வரலாறு" தமிழ் உலகத்திற்கு, அம்மஹாஸின் பெருமையையும் மேன்மையையும் நன்கு விளக்கும்.

கர்னாடக சங்கீதத்தின் மும்மணிகளின் காலத்திலேயே ஜீவித்திருந்தவரும் அவர்களது மதிப்பிற்குப் பாத்திரமான வாக்கேயகாரருமான ஸ்ரீ ஸ்வாதிமன்னரின் ஜீவிய சரித்திரமாகிய இந்நூலைத் தமிழுலகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்று நம்புகிறேன். எனது வேண்டுகோளை நிறைவேற்றி இந்நூலை உருவாக்கிய நண்பர் ஸ்ரீ P. S. நாராயண ஸ்வாமி அவர்களுக்கு எமது நன்றி.

*Trivandrum,*
*26—10—1956.* } செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸய்யர்.

உ

மகாகணபதி துணை

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI-2

# ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ராமவர்ம மகாராஜா அவர்கள்

"குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன
னடிதழீஇ நிற்குமுலகு." (திருக்குறள்)

## 1. பிறப்பும், இளமையும்

பாரத நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் சீரும் சிறப்பும் வாய்ந்து பரம்பரையாய் வாழ்ந்துவந்த பல இராஜ குடும்பங்களிலெல்லாம் முன்னிலையில் இருந்து விளங்கியது வஞ்சிராஜ வம்சம். இந்த ராஜவம்சம் கொல்ல வருஷம் பத்தாம் நூற்றாண்டில் உலகம் வியக்கத்தக்க திறமைவாய்ந்த ஒரு பெரும் வெற்றி வீரனுடைய அவதாரத்தினுல் தனிச் சிறப்புபெற்று உயர்ந்த நிலையையடைந்தது. ஸ்ரீ வீர மார்த்தாண்ட மகாராஜா அவர்கள் வேணட்டின் பரப்பை அதிகரித்து திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தை நிலைநாட்டி கேரளநாடு மாத்திரமல்லாமல் தென்னிந்தியா முழுவதையும் சீர்கெட்ட அரசாட்சியென்னும் இருளினின்று அகற்றி காப்பாற்றிப் போற்றினுர். இவ்வீரரும், இவரைப்போலவே வீரபராக்கிரமத்துடன் விளங்கிய இவருடைய மருமகனுகிய கார்த்திகைத்திருநாள் மகாராஜாவும், முறையே அவரவர்களின் ஆட்சியினுல் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தை பாரதம்

முழுவதும் ஓர் மேற்கோளாக ஆக்கிவிட்டார்கள். தர்மராஜ்ஜியமாகிய திருவிதாங்கூரின் புகழ் பாரதத்தில் மாத்திரமல்லாமல் வெளிநாடுகளிலும் ஒளி வீசியது. இவ்விராஜ்ஜியத்தின் மேன்மை, வெரும் போர்வெற்றியினுல் மாத்திரம் கிடைத்துவிடவில்லை. நீதி, நியாயம், தருமம், அரசியல் சிறப்பு, கொடை, செல்வம் இவைகளிலெல்லாம் இந்நாடு ஒப்புயர்வில்லாததாய் சோபித்தது. சாத்திரங்கள் கலைகள் முதலியவை, மன்னர்களின் அன்பு ஆதரவுகளால் ஓங்கிவளர்ந்தன. புலவர்களும், கவிகளும், கலைஞர்களும், நடன, இசைக்கலை வல்லுனர்களும், பற்பல வித்தைகளில் தேர்ச்சிபெற்ற பெரியோர்களும் தங்களுடைய திறமையைக் காண்பிப்பதற்காக மன்னரை அணுகி, வெகுமதிகளைப்பெற்றதுமல்லாமல், நாட்டின் கலைப்பண்பை மேன் மேலும் வளர்ந்தோங்கும்படிச் செய்தார்கள். இப்படிப்பட்ட கலைச்செல்வத்தின் சிறப்பும் மேன்மையும் கொல்லம் பதினெண்ரும் நூற்ருண்டில் உச்சி நிலையையடைந்தன. கலைகளை உபாஸனை செய்து பயின்றும், என்றும் அழியாப் பெயரும் புகழும் அடைந்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்களின் அரிய செயல்கள் தான் இவ்விராஜ்ஜியம் உயர் நிலைக்கு வருவதற்குக்காரணம். பல விதங்களிலும் சிறப்புற்ற பல மன்னர்களின் நினைவினுல் திகழும் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தின் சரித்திரத்திற்கு என்றும் கண்டும் கேட்டுமிராத அரும் பெரும் புகழையும், ஒளியையும் பெரும் அளவில் சேர்த்த அம் மன்னரின் வரலாற்றை தனி அபிமானத்துடன் நினைக்கவேண்டியதவசியம்.

அவருடைய அன்னை, திருவிதாங்கூர் சிங்காதனத்தில் தனிச்சிறப்புவாய்ந்த ஓர் அணிகலமாய் விளங்கிய "பத்மநாப வல்லபி வஞ்சிதர்ம வர்த்தினி ராஜ ராஜேச்வரி ராணி ஆயில்லியம் திருநாள்" அவர்கள் கொல்லம் 964-ம் ஆண்டு கோலத்து நாட்டிலிருந்து திருவிதாங்கூர் ராஜ்ஜியவம்சத்தில் வளர்பெடுத்த பரணித் திருநாள் மகாராணியினுடைய மூன்று குழந்தைகளில் மூத்தமகள் லக்ஷ்மீபாய் மகாராணி. இவ்வம்மணியைக் காட்டிலும், இவளுடைய உடன் பிறந்தாளாகிய உத்திரட்டாதித் திருநாள் பார்வதீபாயி, அரசியல் துறையில் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திற்குச் செய்து கொடுத்த நன்மைகளை இந்நாட்டினர் என்றென்றைக்கும் மறக்க முடியாது. ஸ்ரீ கார்த்திகைத் திருநாள் ராமவர்ம மகாராஜாவின் அரசாட்சிக்குப் பிறகு பதிமூன்று வருஷகாலம் இராஜ்ஜியத்தில் பலவித துன்பங்களும் குழப்பங்களும் உண்டாயின. இவைகளையெல்லாம் ஒழித்து ராஜ்ஜியத்தை கைதூக்கிக் காப்பாற்றிக்குடிமக்கட்கு பாதுகாப்பையும், செல்வத்தையும் நல்கியது, முதன் முதலில் லக்ஷ்மீபாயி மகாராணியும், பிறகு பார்வதீபாயி மகாராணியும் ஆவார்கள். அச்சமயத்தில் ராணி லக்ஷ்மீபாயின் அரிய அறிவும், செயல் திறமையும் ராஜ்ஜியத்தின் நலனுக்காகக் கிடைக்காமல் போய் விட்டிருந்தால் நாடு எந்த நிலைக்குத் தாழ்ந்துபோயிருக்கக் கூடுமென்பதைக் கூற இயலாது. அரசாட்சியைக் கைப்பற்றி விடவேண்டுமென்று சதி செய்து கொண்டிருந்த கேரளவர்மரெனப்படும் வேறொருவரிடம் மாறிப்போயிருக்கும். இவ்விடையூறிலிருந்து

அவ்வம்மணி நாட்டைக்காப்பாற்றினர். நாட்டுக்குழப்பங்கள் ஒழிந்து, செல்வமும் அமைதியும் நிலவி, திருவிதாங்கூர் பாரதீய ராஜ்ஜியங்களின் முன்னணியில் வந்து நிலைகொண்டது.

இவ்வளவு நற்குணமும் நல்லறிவும் வாய்ந்த மகாராணிக்கு சர்வவிதத்திலும் பொருந்திய ஒரு கணவன் கிடைக்கும் பாக்கியம் உண்டாயிற்று. மகா ராணிக்கு மணாளனாக வரும் பெருமையைப் பெற்றவர் சங்கனாச்சேரி ஸ்ரீ. ராஜராஜவர்ம கோயில்தம்பிரான் அவர்கள். கொல்லம் 964-ஆண்டின் இடையில் டிப்பு சுல்தானுடைய படையெடுப்புக்குப் பயந்து, மலபாரிலிருந்து திருவிதாங்கூரில் அடைக்கலம் புகுந்த பரப்பநாட்டுத் தம்பிரான்கள் தான் சங்கனாச்சேரி வம்சத்தை ஸ்தாபித்தவர்கள். ஸ்ரீ ராஜராஜவர்மா வடமொழியில் அபாரமான பாண்டித்தியமுள்ளவர். தரும சாஸ்திரத்திலும், நீதிசாஸ்திரத்திலும் கேட்போர் வியக்கும் படியான தேர்ச்சியுள்ளவர். அக்காலத்தில் ஆங்கில ரெஸிடெண்டாகவும், திவான்ஜீயாகவும், இரண்டு பதவிகளையும் தாங்கியிருந்த கர்னல் மன்றோ துரைக்குக் கோயில் தம்பிரானுடைய கல்வித்திறமையிலும், புத்தி கூர்மையிலும் விசேஷ மதிப்பிருந்தது. பொருத்தமான அபிப்பிராயங்களினாலும், தவறில்லாத தர்மோபதேசங்களினாலும், மகாராணிக்கு அவர் அரசியல் காரியங்களில் பேருதவி புரிந்து வந்தார். மேன்மை வாய்ந்த அப்பெரியாருக்கும், குணவதியாகிய லக்ஷ்மீபாயி மகாராணிக்கும், பூர்வ புண்ணியத்தின் பயனாய் புதல்வனாக வந்தவதரித்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா, சகல

கலா வல்லபனென்கிற பெரும் புகழைப் பெற்றதில் ஆச்சரியப்பட வேண்டியதொன்றுமில்லை.

லக்ஷ்மீபாயி மகாராணியின் மணி வயற்றில் மூன்று குழைந்தைகள் பிறந்தன. அவைகளில் முதல் குழந்தை ஆயில்லியம் திருநாள் ருக்மணிபாயி இளவரசி. பிற்காலத்தில் திருவிதாங்கூரை ஆண்ட ஆயில்லியம், விசாகம் என்கிற மகான்களாகிய இரு மன்னர்களுள்பட ஏழு குழந்தைகளை இராஜ குடும்பத்திற்கு நல்கியருளிய சீமாட்டி ருக்மணிபாயி இளவரசி. இவளுடைய தம்பிமார்களாகிய ஸ்வாதித் திருநாளும், உத்திரம் திருநாளும் முறையே கொல்லம் 988-ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ம் தேதியிலும், 990-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ம் தேதியிலும் இப்புவியில் அவதரித்தார்கள். மூன்றும் பிரசவத்திற்குப் பிறகு லக்ஷ்மீபாயி மகாராணி ஒரே ஒரு மாதம் தான் உயிர்வாழ்ந்திருந்தார்கள். அவ்வம்மணி திருவிதாங்கூருக்கு நன்கொடையாக நல்கிய தெய்வப் புதல்வர்களின் பிற்காலத்திய சீர், சிறப்பு செல்வப் பெருக்கு இவைகளைத் தன் கண்ணால் கண்டு களிக்கக் கொடுத்து வைக்காது, நாடு முழுவதையும் துயரக்கடலில் ஆழ்த்திவிட்டு தன்னுடைய இருபத்திமூன்றும் வயதில் விண்ணுலகையடைந்துவிட்டாள்.

லக்ஷ்மீபாயி மகாராணி அப்பொழுது அரசு புரிந்தது, பிள்ளைவழியில் ராஜ குடும்பத்தில் யாரும் இல்லாதிருந்ததினால் தான். இக்குறை நீங்கவே, மகாராணி கருத்தரித்து ஓர் இளவரசன் பிறக்க வேண்டுமென்று நாட்டு மக்கள் எல்லோரும் கடவுளை

நாள்தோறும் வேண்டிக் கொண்டிருந்தார்கள். ருக்மணீபாயி இளவரசியின் பிறப்பு நாட்டினர்க்கு அளவிலா மகிழ்ச்சியைத் தந்தது. ஆயினும், பிற்காலத்தில் அரசு புரிய ஒரு இளவரசன் இல்லையே என்கிற ஒரு குறையும் சதா இருந்துகொண்டேயிருந்தது. மகாராணியும், கோயில் தம்பிரானும் குலதெய்வமாகிய ஸ்ரீ பத்மநாபனுடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்காக அல்லும் பகலும் மனதார வேண்டிக்கொண்டவாறு இருந்தார்கள். பற்பல பூஜைகளையும், அர்ச்சனைகளையும், நோன்புகளையும், தானதருமங்களையும் கையாண்டு வந்தார்கள். இவ்வித நற்செயல்களின் பயனாய் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் இளவரசர் அவதரித்தார். அவர் பிறக்கும் முன்பாகவே, நாட்டுமக்கள், தங்களுக்கு ஒரு மன்னர் பிறக்கப்போகிறார் என்கிற பேராவலுடன் இளவரசரின் அவதாரத்தை எதிர்நோக்கி, அவருக்குப் "பிறவிச் செல்வன்" என்கிற அன்புப் பெயரையும் சூட்டிப் புகழ்ந்தார்கள். இதிலிருந்து, நாட்டுப் பிரஜைகளின் விருப்பம் எவ்வளவு உயர்நிலையிலிருந்தது என்பது நன்கு விளங்கும். நாடுமுழுதும் சந்தோஷமும், உற்சாகமும் நிறைந்த திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. பலநாட்களின் வேண்டுதலின் பயனாய் இச்செல்வம் கிடைத்ததற்கு எல்லோரும் அகமகிழ்ந்தார்கள். இளவரசர் அவதரித்த நாளிலேயே, பிற்காலத்தில் வரப்போகும் பாக்கியத்திற்கு அறிகுறியாக ஓர் வெண்ணிற யானை காட்டில் பிடிககப்பட்டது. இச் சம்பவத்தைப்பற்றி கர்னல் மன்றோ துரைக்கு மகாராணி எழுதிய கடிதம் கீழ்வருமாறு.

* "நமுக்கு ஸகோதர துல்லியமாயிரிக்குன்ன மகா ராஜ மான்ய ராஜ ஸ்ரீ கர்னல் மன்ரோ ஸாகிப் அவர்களுக்கு:—

ஏனு நெல்லூர் ப்ரவ்ருத்தியில் சாத்தமட்டம் மலேயில் முல்லன் கட்டெ நீலகண்டன் முதல்பேரு எடுப்பிச்ச குழியில் ஒரு கொம்பனுனெ இறங்கியதினே க்கட்டிக்கேற்றி கொட்டிலில் கொண்டுவந்து அடச்ச ப்ரகாரவும், ஆ ஆனயுடெ கண்ணும். சரீரவும் ஆஸகலம் வெளுத்த நிறம் ஆகுன்னு என்னும் மூவாற்று புழ ஸர்வாதிக்கார்யக்காரண்டெ ஸாசனம் எழுதிவன்ன அவஸ்தகொண்டு கொடுத்தயச்ச கடுதாஸு வாயிச்சு கேட்டதின்டே சேஷம் நமுக்கு வளரே ஸந்தோஷம் ஆகயும் செய்து. எந்துகொண்டென்னல் பகுமானப்பெட்ட கம்பெனியாரும் கர்னலும் ஸம்ஸ்தானத்தெக்குறிச்சும், நம்மெக்குறிச்சும் தயயோடும் கூடெ மனஸு வச்சு ஸகலவும் நடத்திச்சுவரிக காரணத்தால் இதின்மண்ணம் குணமாயிட்டுள்ள எண்ணங்கள் தெய்வகத்யா, காண்மானுள்ளதிண்டெ ஸ்ங்கதி வன்னிரிக்கயாகுன்னு. அல்லாதெ மற்றொன்னும் விசாரிப்பானில்லாய்க கொண்டு மேலெழுதிய ஆனயுடெ காடு பழக்கு தீர்னதின்டெ சேஷம் கர்னலிண்டே மனஸு ஏதுப்ரகாரமென்

---

* அக்காலத்திய மலேயாள தமிழ் மொழிகட்கு தம்மில் அதிக வித்தியாசம் இல்லாததனுல், மலேயாள எழுத்தில் எழுதப்பட்ட கடிதத்தை தமிழ் எழுத்துக்களால் எழுதியிருக்கிறது, வாசகர்கள் பொருளை எளிதில் அறிந்துக்கொள்ளக் கூடும். இவ்வாறே இந்நூலில் வரும் மற்ற கடிதங்களும் தமிழ் எழுத்துக்களில் எழுதப்படும்; அனுபந்தத்திலும் அதேபோல்.

ஹல் அப்ரகாரம் ஒக்கெயும் நடத்துன்னது நமுக்கு ஸம்மதம் அத்ரே, ஆகுன்னு''

மகாராணிக்கும் இராஜ குடும்பத்திற்கும், இளவரசரின் ஜனனம் அளவிலா ஆனந்தத்தைத்தந்தது. இராஜ்ஜியத்தின் பிற்காலத்திய முன்னேற்றம் பாதுகாக்கப்பட்டுவிட்டது என்றும், இனிமேல் யாதொருவிதமாகிய பயமும் இருக்க இடமில்லை என்றும் அவர்கள் கருதினர்கள். ஜனித்து நான்குமாதங்கள் கழிந்ததும், இளவரசரின் பட்டம் கட்டுச் சடங்கு நடந்தது. 989-ஸு ஆவணி மீ 15-உ அச்சடங்கு நடத்தப்பட்டது அதையொட்டி விபவங்களுக்கு கர்னல்மன்ரோ துரையை அழைப்பதற்காக மகாராணி எழுதிய அழைப்பு கீழ்வருமாறு—

"நமுக்கு ஸகோதர துல்லியமாயிரிக்குன்ன மகாராஜ மான்ய ராஜ ஸ்ரீ கர்னல் சாகிப் அவர்கள்க்கு:—

எத்ரையும் பகுமானப்பெட்ட இங்கிரேஸ் கவன்மெண்டார் அவர்கள் விசாரணை செய்து நிச்சயிச்சு நம்முடெ குமாரனு பட்டம்கெட்டி பிரஸித்தி செய்யுன்னதினு எழுதி வன்னிரிக்குன்னதின் வண்ணம். அக்கார்யம் நிர்வகிக்கேண்டுன்னதினு, சிங்க மாஸம் 15-ம் தியதி சுபதினமாககொண்டு ஆயதினு கர்னலும் கூடி இவிடெ வன்னிரின்னிட்டு ஸந்தோஷப்ரகாரம் நடத்தணமென்னு நமக்கு மனஸ்ஸாயிரிக்ககொண்டு அவிடெ வன்னு கண்டு வர்த்தமானங்களும் போதிப்பிச்சு கர்னல் இங்கோட்டு வரும்போள் கூடே வரத்தக்கவண்ணம் பறஞ்சு இவிடே கூடெ

நில்குன்ன மாறமங்கலம் ஸுப்பய்யனெ அயச்சிரிக்க கொண்டு, தாமஸியாதெ புறப்பட்டு வரிகயும் வேணம்''

986-ம் ஆண்டு கர்க்கடக மாஸம்
16-ம் தியதி

பட்டம் சூட்டு விழாவைக் கொண்டாடுவதற்காக ஒரு ராஜசபை கூட்டப்பட்டது. அச்சமயத்தில் மகாராணி அருளிக் கூறிய விஷயங்கள் கவனிக்கத் தக்கவை.

''கனம் ஈஸ்டிண்டியா கம்பெனியார் நீதி நெறியுடன் எங்கள் விஷயத்தில் நடந்துகொள்வதனால் அவருடைய விருப்பங்கள் முழுதும் பயனுள்ளவைக களாக ஆவதற்கு ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி அனுக்ரகிப்பார். என்னுடைய குலதெய்வமாகிய ஸ்ரீ பத்மநாபனுடைய கட்டளையை சிரமேற்கொண்டு என் புதல்வனாகிய இச்சிறு குழந்தையைக் கம்பெனியாரின் கைவசம் நான் ஒப்படைக்கிறேன். இவ்விளவரசனின் பிற்கால உதவிக்காகவும், தகுந்த கௌரவ மரியாதைகளுடன் போற்றுவதற்காகவும், உள்ள பொறுப்பு, கனம் கம்பெனியாருக்குத்தான் உள்ளது. இதற்குமேல் நான் கூறவேண்டியதொன்றுமில்லை''.

இவ்விதமாகிய நோக்கங்களுடன், பிரிட்டிஷ்காரர்களுடைய ஒத்துழைப்பில் பூரண விசுவாஸத்தை வைத்து, மகாராணி லக்ஷ்மீபாயி, ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் இளவரசனை பட்டத்திற்குரியவராக விளம்பரப்படுத்தினாள். அன்றுமுதல் அரசியல் அலுவல்களு

டன், இளவரசரின் பயிற்சியிலும் மகாராணி ஊக்கத்துடன் ஈடுபட்டுவந்தாள். 989-ம் ஆண்டு கார்த்திகை மாஸம் 6-ம் தேதி குழந்தையின் அன்னப்ராசனச்சடங்கு சகல விபவங்களுடன் நடத்தப்பட்டது. அச்சடங்கைச் சம்பந்தித்த நிகழ்ச்சிகளைப்பற்றி மகாராணி மன்ரோ துரைக்கு அனுப்பிய கடிதம் கீழ் வருமாறு:—

"நமுக்கு ஸகோதர துல்லியமாயிரிக்குன்ன மகா ராஜ மான்னிய ராஜ ஸ்ரீ கர்னல் ஸாகிப் அவர்கள்க்கு—

விருச்சிக மாஸம் 6-ம் தேதி குஞ்சினு அன்னப்ராசனத்தினு முகூர்த்தம் நிச்சயிச்சிரிக்க கொண்டு ஆவகைக்கு மாமூல்ப்ரகாரம் ஸத்யைக்கு வேண்டுன்ன கோப்புகள் கூட்டேண்டுன்னதினும் சர்வாணிப்ரதிக்ரகம் வகைக்கு வேண்டுன்ன பணத்தினும் கர்னல் போதிக்குன்னதினு வரியோல எழுதிச்சு கொடுத்தயக்கத்தக்க வண்ணம் திருவனந்தபுரம் மண்டபத்தும் வாதுக்கல் ஸர்வாதிகாரியக்காரனோடும், நித்தியச் செலவு காரியக்காரனோடும் பறஞ்சிட்டும் உண்டு. மாமூல்ப்ரகாரம் இவிடெ நின்னும் எழுத்து கொடுத்தயச்சிட்டு அடியந்திரத்தினு தக்க வண்ணம் பெரும் படப்பு மூப்பின்னு அயச்சிட்டு வருன்ன ஆளுகள்க்கும் வழிமேல் வேண்டுன்ன வட்டங்கள் கூட்டிச்சு கொடுக்கத்தக்க வண்ணவும் நிதானம் வருத்துகையும் செய்யுமல்லோ. மாவேலிக்கர நின்னும் அம்மூம்மையும், எண்ணய்க்காட்டு அம்மூம்மையும், வலியம்மச்சியுடெ மகன் உம்மிணியும் கூடெ

இவிடெ எத்தேண்டதாக கொண்டு ஆ அவஸ்த கர்னல் போதிக்குன்னதினு விவரமாயிட்டு எழுதிக் கொடுத்தயக்கத் தக்கவண்ணம் மகாசிகு கிலேதாரோடு பறஞ்சிரிக்க கொண்டு ஆயதினும் வேண்டும் ப்ரகாரமொக்கெயும் நிதானம் வருத்துமல்லோ?

989-ம் ஆண்டு கன்னி மீ 16-உ"

மன்றோ துரையை அச்சடங்குக்கு அழைத்த கடிதம் அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது:—

"நமுக்கு ஸகோதர துல்லியமாயிரிக்குன்ன மகாராஜ மான்ய ராஜஸ்ரீ கர்னல் ஸாகிப் அவர்கள்க்கு—

எல்லா அவஸ்தைகள்க்கும் கூடெக் கூடெ எழுதி அயச்சு வருன்னுவல்லோ. விருச்சிக மாஸம் 6-ம் தியதி கன்னிராசி நேரத்து குஞ்சினே அன்னப்பிராசனத்தினு முகூர்த்தம் நிச்சயிச்சிரிக்க கொண்டும், ஈ அடியந்திரத்தினு தக்கவண்ணம் கர்னல் கூடெ இவிடெ உண்டாயிருன்னால் கொள்ளாமென்னு நமுக்கு வளரே மனஸ்ஸாயிரிக்க கொண்டும், 6-தியதிக்கு மும்பில் தன்னெ கர்னல் இவிடெ வரிகயும் செய்யுமல்லோ?

989-ம் ஆண்டு துலா மீ 21-உ"

மேற்கூறிய விவரங்களினால், எவ்வளவு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் மகாராணி தன் புதல்வனைச் சம்பந்தித்த சடங்குகளை நடத்திவைத்தாள் என்பது தெளிவாகும். இளவரசருக்கு ஒரு வயதானதும் 989-ஆம் மேட மீ 24-உ யன்று ஸ்ரீ பத்மநாபப் பெருமாளுக்குப் பணியாளாக இளவரசரை

பகவானுக்கு சமர்ப்பிப்பதற்காக அதற்கு வேண்டிய பூஜைகள் பெரியகோயிலில் நடத்தப்பட்டன. அன்றைய தினம் மகாராணி கோயிலுக்குப்போக முடியாமலிருந்ததனால், இளவரசரைக் கோயிலுக்கு அழைத்துச்சென்றது ஸ்ரீ இளையம்ம பண்டாரத்தில் ஆயிருந்தது. கோயிலுக்குச் சென்று இளவரசர் முறைப்படி காணிக்கைகளை சமர்ப்பித்தார். அன்றே, "சிறவாமூப்பு" கொண்டு "தேவகாரி உடைவாள்" வாங்கிக்கொள்ள வேண்டியிருந்ததால், கோயிலுக்குப் போய் பெரிய பெருமாளுக்கு ஒரு யானையும், மற்ற பல இனங்களில் தானங்களும் கொடுத்ததாக தெரிகிறது. அன்றைய நிகழ்ச்சிகளுக்காக வேண்டிய துகைகள் ஹுஜூர் கஜானாவிலிருந்து கொடுக்கப்பட்டதாக செல்லம் வகை குறிப்புக்கள் இருக்கின்றன.

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் இராஜ குமாரனுக்கு இரண்டு வருஷ வயதாகும் முன்பே லக்ஷ்மீபாயி மகாராணி விண்ணுலகிற்கேகிவிட்டாள். (5-2-990) அவளுடைய மூன்று குழந்தைகளின் பாதுகாப்பு, நாட்டின் அரசியல் பொறுப்பு இவைகளை ஏற்றெடுப்பதற்குத் தகுந்தவர்கள் ராஜகுடும்பத்தில் யாரும் இருக்கவில்லை. உடன் பிறந்தாளாகிய பார்வதீபாயி ராணிக்கு அப்பொழுது வயது பதிமூன்றேதான். அச்சிறுவயதில் ஓர் இளங்குமரி, அதுவும் உலகியல் அனுபவமே இல்லாதவள், செல்வமாய்க் கவலையற்றுச் சுகவாழ்க்கை நடத்திவந்த ஒரு சிறு பெண், இப்படிப்பட்ட சிக்கலான கடமைகளையும் பொறுப்புக்களையும் எப்படி ஏற்று நடத்தக் கூடும். இதைப்

பற்றிய கவலை லக்ஷ்மீபாயி மகாரணி அவர்களை, கடைசி நாட்களில், அதாவது நோயுற்று படுத்த படுக்கையாயிருக்கும்போது, மிகவும் அலட்டி வாட்டி யது. தனக்கு விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர் ஒருவர்தான். அவர் தன்னுடைய கணவர் இனிப் பிழைக்கமாட்டோம் என்பது உறுதியானதும் தன் கணவரை யழைத்து அருகிலிருத்தி, ராஜ குடும்பத் தின் முழுப்பொறுப்பையும் அவர் கையில் ஒப்புவித் தாள். வயது முதிராத ராணி பார்வதீபாயிக்கு அர சியல் துறையில் வேண்டிய உபதேசங்களை நல்க வும், இளம் ராஜகுமாரர்களைப் பாதுகாத்து வளர்ப் பதில் தனிக் கவனம் செலுத்தவும் வேண்டுமென்று, வேண்டிக்கொண்டாள். அவர் அதற்கு பூர்ண மன துடன் சம்மதித்து அப்பொறுப்பை, கடமையாக ஏற்றுக்கொண்டு வெற்றிகரமாக நடத்தி வந்தார். ஸ்ரீ ராஜராஜவர்மா கோயில் தம்பிரானுடைய் உப தேசங்களும், உதவியும், ஒத்துழைப்பும் பார்வதீ பாய் ராணிக்கும், பிறகு ஸ்வாதித் திருநாள் மகாரா ஜாவுக்கும் விலைமதிக்க முடியாத அளவில் உபயோ கப்பட்டன.

## 2. குழந்தைப் பருவமும் கல்விப் பயிற்சியும்

இராஜ குடும்பத்தில் மூத்த குழந்தை யாகிய ராணி பார்வதீபாயிக்கு அப்பொழுது வயது பதி மூன்று என்று முன்பே கூறப்பட்டது. அப்படி யிருந்தும், அரசியலைக் கவனிப்பதற்கு வேறு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய முடியாமலிருந்ததனல் ராணி பார்வதீபாயியே ஸ்வாதித் திருநாள் மகாராஜா

வின் சார்பாக அரசாட்சியை ஏற்று நடத்தினள். அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதைப்பற்றி ஓர் விளம்பரம் அடியில் காணும் விதத்தில் பிரசுரிக்கப் பட்டது.

"பத்மநாப ஸேவினி வஞ்சிதர்மவர்த்தினி ராஜ ராஜேச்வரி ராணி பார்வதீபாயி மகாராஜா அவர்கள் சகலமான ஜனங்கள்க்கும் பிரஸித்தப்படுத் துன்ன விளம்பரம்:—

எந்தென்னல், ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சிபால ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மகாராஜ ராஜே ராமராஜ பகதூர் ஷம்ஷேர்ஜங் ஆய மகாராஜா அவர்கள்க்கு வயஸ்ஸினு ப்ராப்தி ஆகுன்னது வரைக்கும் அவருடெ பேர்க்காயிட்டு அவருடெ மாதாவாயிருன்ன பத்மநாப வல்லபி வஞ்சிதர்மவர்த்தினி ராஜ ராஜேச்வரி ராணி லக்ஷ்மீபாயி மகாராஜா அவர்கள் ராஜ்ய கார்யங்கள் அன்வேஷிச்சு வன்னதிண்டே சேஷம், ஈச்வர ஸங்கல்பத்தினல் ஸ்வர்கலோக ப்ராப்தி ஆக கொண்டு, அவருடெ ஸகோதரி பத்மநாப ஸேவினி வஞ்சிதர்மவர்த்தினி ராஜராஜேச்வரி ராணி பார்வதீபாயி ஆயிரிக்குன்ன நாம், ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சிபால ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மகாராஜ ராஜெ ராமராஜ பகதூர் ஷம்ஷர்ஜங் மகாராஜா அவர்கள்க்கு வயஸ்ஸினுப்ராப்தி ஆகுன்னதுவரைக்கும் அவருடெ பேர்க்காயிட்டு ராஜ்ய காரியங்களெ விசாரிக்குன்னதினு அவகாசத்தோடும், பஹுமானப்பெட்ட கம்பனியாருடெ ஸம்மதத்

தோடும் இன்னே திவஸம் முதல் நாம் ஏற்றிரிக்குன்னு. ஆயதுகொண்டு திருவிதாங்கூர் ஸம்ஸ்தானத்தில் எல்லா உத்தியோகஸ்தன்மாரும், குடியானவர், கச்சவடக்கார் உள்பெட்ட ஸகலமான ஜனங்களும் நம்முடே கல்பன ப்ரகாரம் அனுஸரிச்சு நடன்னுக்கொள்ளுகையும் வேணும்.

என்னு 990-ஆம் துலா மீ 30-உ"

அன்று திருவனந்தபுரம் பத்மநாப ஸ்வாமி கோயிலில் வழக்கம்போல் விசேஷ பூஜைகளும் வழிபாடுகளும் நடத்தப்பட்டன. இவ்விதமாய் ஆரம்பித்த ரீஜன்ஸீ அரசாட்சி 1004-ம் ஆண்டுவரைக்கும், அதாவது ஸ்வாதித் திருநாளுக்கு பதினாறு வயது நிறைந்து அவர் சிங்காதனம் ஏறும்வரை நீண்டு நின்றது. இந்த பதினான்கு வருஷகாலத்தில் ராணி பார்வதீபாயி ராஜகுடும்பத்திற்கும் ராஜ்ஜியத்திற்கும் செய்த உதவிகளை நினைக்கும்போது மயிர் கூச்சலெடுக்கும். பதிமூன்றாம் வயதிலேயே அரசாட்சியை ஏற்றுக்கொண்டு இருபத்தி ஏழாம் வயதில் அதை விட்டுக் கொடுத்த அந்த மகாராணி, அந்த பருவத்திலே செய்து முடித்த காரியங்கள் பெயர் பெற்ற அரசியல் நிபுணர்களின் புகழைப்பெற்றதில் வியப்பொன்றுமில்லை. எந்தத் துறைகளிலெல்லாம் அந்த மகாராணி சீர்திருத்தங்களை வருத்தி, நன்மைகளை உண்டாக்கினாள் என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. அவள் எல்லாத் துறைகளிலும் கொண்டுவந்த சீர்பாடுகளை எல்லோரும் நன்கறிவார்கள். அவைகளைப்பற்றி கூறப் புகுந்தால் விரியும். பொதுஜன நலம், அரசியல் துறை, சமய விஷயங்கள், கல்வி

இவைகளிலெல்லாம் அவள் அரும் பெரும் சீர்திருத்தங்களைச் செய்து வைத்து ராஜ்ஜியத்திற்கு நன்மை பயக்கினாள். குறிப்பாக அரசிளங் குமாரர்களைப்பாது காத்து வளர்த்து பயிற்சி கொடுக்கும் விஷயத்தில் மகாராணி காட்டிய தனி ஊக்க உற்சாகங்களைப் பற்றி ஆராய்வது பொருத்தமாகவிருக்கும். தனக்கு பிறகு இராஜ்ஜியத்தின் முற்போக்கைக் கவனிக்க உரிமைபெற்ற இளவரசர்களின் பயிற்சியில் மகாராணி பார்வதீபாயும், ராஜ ராஜ வர்ம கோயில் தம்பிரானும் தனி முயற்சியுடன் கவனம் செலுத்தி வந்தார்கள்.

ஸ்வாதித் திருநாளுக்கு ஏழும், தம்பி உத்திரம் திருநாளுக்கு ஐந்தும் வயதானதும் அவர்களுடைய கல்விப் பயிற்சியைப் பற்றிய ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஸ்வாதித் திருநாளின் கல்விப் பயிற்சி 994-ஆடு இடவ மீ 15-உ யன்று ஆரம்பிக்கப்பட்டது. மதிலகம் கணக்குக் குறிப்புக்களில், இவைகளைப் பற்றிய செலவு கணக்குகளைக் காணலாம். 996-ஆடு த்திய அரண்மனைக் கணக்குகளில் ஸ்வாதித் திருநாள், உத்திரம் திருநாள் இவ்விரு இளவரசர்களையும் படிக்க வைப்பதற்காக தந்தப் பலகை செய்து கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இளவரசர்களின் காரியங்களைக் கவனிப்பதற்கு, மாதம் ஒன்றுக்கு 250 பணம் சம்பளமும் படிச்செலவுகளும் திட்டப்படுத்தி அம்பலப்புழை ராமவர்மன் என்றொருவரை 995-ஆடு இடவ மாதத்தில் நியமித்தார்கள்.

தாய்மொழியாகிய மலையாளமும், சாத்திரமொழி யாகிய ஸம்ஸ்க்ரிதமும் முதன் முதலில் கல்விப் பயிற்சிக்கு எடுக்கப்பட்டன. கல்வி கற்பிக்க, அப் பொழுது ஹரிப்பாட்டு கிழக்கேடத்து கொச்சுபிள்ளை வாரியர் என்பவர் நியமிக்கப்பட்டார். 999-ம் வருஷம் மகர மாதம் 28-ம் தேதியின் உத்தரவை யொட்டி, அவருக்கு மாதம் ஒன்றுக்கு 100 பணம் சம்பளம் விதிக்கப்பட்டது. பாஷையிலும், கணக்கிலும் மற்றுமுள்ள ஆரம்பப் பாடங்களிலும், பயிற்சி தொடங்கிய காலத்திலிருந்தே இவ்விரு ராஜகுமாரர் களும், குறிப்பாக ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ராஜகுமா ரர், இணையிலா அறிவு கூர்மையையும், உணர்ச்சி யையும் காண்பித்து வந்தார்கள். பிறகு இளவரசர் களின் கல்விப் பயிற்சியின் மேற்பார்வையை தந்தையாகிய ராஜ ராஜ வர்ம கோயில் தம்பிரானே ஏற்று நடத்தலானர். மகா பண்டிதனாகிய கோயில் தம்பிரானுடைய மேல்நோட்டமும் பயிற்சி முறை யும், ராஜகுமாரர்களுக்கு பெரும் பயனையளித்தன. ஸம்ஸ்க்ரித ஸாகித்தியத்திலும், சாஸ்திரங்களிலும் தனக்கிருந்த அபார பாண்டித்தியத்தை ராஜகுமா ரர்களுக்கு அவர் பகிர்ந்து கொடுத்தார். குழந்தைப் பருவம் தாண்டி வாலிபப் பருவத்தை அடையும் முன்பாகவே, இராஜகுமாரர்கள் நல்ல பண்டிதர் களானர்கள். ஸ்வாதித் திருநாள் குறிப்பாக கல்வித் திறமையில் ஒருபடி உயர்ந்தே விளங்கினர்.

அக்காலத்தில் இந்தியாவின் சரித்திரத்தி லேயே ஓர் பெரும் மாறுதலை உண்டாக்கக் கூடிய சக்தியொன்று நிலவில் வந்துகொண்டிருந்தது. அந்

நிலையானது-பாரதம் ஆங்கில ஆதிக்கத்திற்குள் வந்து அடங்குவதற்குச் சற்று முந்தியது. அதுவரையில் தனித்தனியாய் சுதந்திரமாய் வாழ்ந்து வந்த பல ராஜ்ஜியங்களும் ஆங்கிலக் கம்பெனியாருக்குக் கீழ்ப்படிந்தன. ஆங்கிலர்களின் சக்தி திருவிதாங்கூரிலும், சுற்றுப் பிரதேசங்களிலும் பரவ ஆரம்பித்து கெட்டிப்படவும் தொடங்கிற்று. லக்ஷ்மீ பாயி மகாராணி பிரிடிஷ் ரெஸிடெண்டு கர்னல் மன்ரோ துரையையே ராஜ்ஜியத்தின் திவான்ஜியாகவும் ஆக்கிகொண்ட பொழுது இவ்விராஜ்ஜியத்திலும் ஆங்கிலரின் சக்திக்கு எதிர்ப்பே இல்லாத பிரசாரம் கிடைத்துவிட்டது. அதனல் ராஜகுமாரர்களின் வித்தியாப்பியாசத்தில் ஆங்கிலமொழியையும் கற்பிக்க வேண்டியதவசியமாயிற்று. இந் நாட்டில் அக்காலத்திய பழக்கம் என்னவென்ருல்:— மகாராஜாக்கள் பாரத நாட்டிலுள்ள முக்கிய பாஷைகளில் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டியதென்பதே. அப்படி பல பாஷைகளும் தெரிந்திருந்தால் தான், பாரதத்தின் பற்பல பாகங்களுடனும் உறவாடக்கூடும் என்பது கொள்கை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், ஹிந்தி, பார்ஸீ முதலிய பாஷைகளெல்லாம், அதனுல்தான், இந்நாட்டில் இடம்பெற ஏதுவாயிற்று.

பார்வதீபாயி ராணி, ராஜகுமாரர்களுக்கு மேற்கூறிய பாஷைகளிலெல்லாம் பயிற்சியளிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவைத்தார். குறிப்பாக, அரசாட்சி நன்ருக நடக்கவேண்டுமென்கிற முக்கிய நோக்கத்துடன் மகாராணி ராஜகுமாரர்களுக்குச்

செய்துகொடுத்த பன்மொழிப் பயிற்சி ஏற்பாடுகள் ஸ்ரீ ஸ்வாதித் திருநாளைப் பொறுத்த மட்டில், பாரதம் முழுதும் சிறந்து விளங்கிய ஒரு பெரும் பண்டிதனை யும், எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட ஒரு உயர்ந்த கலைஞனையும் சிருஷ்டிக்க ஏதுவாயிற்று.

இராஜகுமாரர்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதற்கு கர்னல் மன்றோ துரையால் பொருக்கி எடுக்கப்பட்டவர் தஞ்சாவூர் சேஷா பண்டிதர் சுப்ப ராயர் என்கிற ஒரு புலவர் (995-ஆம் கும்ப மீ 15-உ). இதற்காக நியமிக்கப்பட்ட வேறொரு முனிஷிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450 கொடுத்திருந்ததாய் குறிப்பிருக்கிறது. 1002-ம் வருஷத்திய கணக்குக் குறிப்பில் இளவரசருக்கு பாரஸீ பாஷை கற்றுக் கொடுக்க, சென்னையிலிருந்து வரவழைத்த ஓர் முனிஷிக்கு மாதந்தோறும் ரூபாய் 70 சம்பளமாகக் கொடுத்ததாய்க் கண்டிருக்கிறது. அவர் சென்னை ஸயத் மோகைத்தீன் ஸாயப்பு என்பவர். மாதந்தோறும் ரூபாய் 100 வீதம் சம்பளத்தில் மகம்மதாலி என்கிற புலவரையும் பர்ஷியன் பாஷை கற்றுக் கொடுக்க நியமித்ததாகவும் தெரிகிறது.

இளவரசர்களின் கல்வி அபிவிர்த்தியும், அறிவு வளர்ச்சியும், எல்லோருடைய பெரு மதிப்பையும், புகழையும் பெற்றன. பல்கலைகளில் அசாதாரண மாகிய அறிவையும், தேர்ச்சியையும் அடைந்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் புத்தி கூர் மையைக் கண்டு பல பெரும் ஆங்கில வித்துவான்க

ளும் வியந்தார்கள். அக்காலத்தில் திருவிதாங்கூருக்கு வந்து சுற்றிச் சஞ்சரித்த கர்னல் வெல்ஷ் துரை இவ் விஷயத்தைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். இது சரித்திரம் படித்தவர்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆயினும் அது ஒரு விசேஷ விஷயமானதால், வெல்ஷ்துரை எழுதியிருப்பதிலிருந்து சில பகுதிகளை அடியில் காணலாம்.

"கி. பி. 1825-ம் ஆண்டு மே மாதத்தில் பட்டாளப் பரிசோதனைக்காகச் சஞ்சரித்தபோது, கர்னல் நியூவாலுடன் நான் சில நாட்கள் ரெஸிடென்ஸியில் தங்கவேண்டியதாயிற்று. அச்சமயம், இளம் ராஜகுமாரர்களின் படிப்பு முறைகளை நேரில் காண்பதற்கும், அவர்களுடைய கல்வித் தேர்ச்சியையும், அறிவுத் திறமையையும் மதிப்பிட்டுப் பார்ப்பதற்கும் எனக்குச் சௌகரியமுண்டாயிற்று. 16-ம் தேதி காலையில் 10 மணிக்கு நானும் கர்னலும் தனியாகக் குதிரை வண்டியில் ஏறி கோட்டைக்குள் போனோம். அங்கு சென்றதும் எங்களை வரவேர்த்து அரண்மனையில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு, தந்தையும், உடன் பிறந்தாளும், அவளுடைய கணவனும், உபாத்தியாயரும் அருகில் நிற்க, ராஜகுமாரர்கள் எங்களைச் சந்திப்பதற்காகச் சித்தமாயிருப்பதைக் கண்டோம். பதிமூன்று வயது நிறைந்த மூத்த ராஜகுமாரனுக்கு உடல் வலிவு சற்று குறைந்திருந்தும் மனம் நன்றாகப் பண்படைந்து பயிற்சிபெற்றிருப்பதாகத் தோன்றியது. அவர் "Malcolm's Central India" என்கிற நூலில் ஒரு அத்தியாயத்தையும், ரங்கூனைப் பிடித்த வரலாற்றைக் குறித்து

கவர்னர் ஜெனரல் எழுதிவைத்திருந்த பர்ஷியன் கட்டுரையொன்றையும், வடமொழி, மலையாளம் இவைகளில் ஒவ்வொரு நூலிலிருந்தும் சிற்சில பகுதிகளையும், எங்களுக்குப் படித்துக் காண்பித்தார். அதனால் அவருக்கு அம்மொழிகளில் நல்ல தேர்ச்சியுண்டென்பதை நாங்கள் அறிந்தோம். பிறகு அவர் கணித சாஸ்திரத்தில் ஒரு புத்தகத்தையெடுத்து யூக்க்லிட்டின் 97-ம் ஸித்தாந்தத்தை ஒரு கரும்பலகையில் எழுதிக் காண்பித்தார். எனக்கு அதிக வியப்புண்டாக்கிய விஷயம் வேறொன்றுண்டு. அதாவது, "ஜியாமெட்ரீ"என்கிற சொல் "ஜயாமாத்ர" என்கிற ஸம்ஸ்க்ரித பதத்திலிருந்து வந்ததென்றும், ஹெக்ஸகன் (ஷட்கோணம்), ஸெப்டகன் (ஸப்தகோணம்), ஆக்டகன் (அஷ்டகோணம்) டெக்ககன் (தசகோணம்) டுவோடெக்ககன் (த்வதாதசகோணம்) முதலிய பல கணிதச்சொற்களும் வடமொழிச் சிதைவுகள் என்று நிரூபித்துக் கூறியது தான். இதை அவர் ஆங்கிலத்தில் சொன்னார். ஆனால் அவர் உபயோகித்த ஆங்கில மொழியின் நடை அவ்வளவு உயர்ந்ததல்ல. சில இலக்கணப்பிழைகளும் இருந்தன பல விஷயங்களைப்பற்றிப் படிக்கவேண்டியிருந்ததனால் மொழியின் நடையைச் சரிப்படுத்துவதற்கு வேண்டிய அளவு ஆங்கில புத்தகங்களை விரிவாகப் படிக்க அவருக்குச் சமயம் கிடைப்பது அரிதாயிருக்குமென்று நான் எண்ணிவருந்தினேன். அவருடைய உபாத்தியாயர் மிகவும் சாமர்த்தியமுள்ள ஓர் தஞ்சாவூர் பிராம்மணர். எனினும், அவர்கூட ஆங்கிலத்தில்சுத்தமாகவும், சுலபமாகவும், அழகாகவும்,

பேச முடியவில்லை. இளவரசர் பர்ஷியன் பாஷை யில் பேசியது மிகவும் அழகாகவும், சுத்தமாகவும், இன்பமாகவும் இருந்தது. மற்ற மொழிகளில் எனக் குப்பரிசயமே இல்லாததனல் அவைகளைப்பற்றி அபிப்பிராயம் கூற எனக்கு இயலவில்லை வருங்கா லத்தில் அடையப்போகும் மேன்மையின் அறிகுறி களை இப்பொழுதே வெளிப்படுத்தும் இந்த இளரா ஜகுமாரன், இந்தியாவில் மிகவும் உயரிய நிலையிலி ருக்கும் ஒரு ராஜ்ஜியத்திற்கு அதிபதியாவார். ஏனெ ன்றால் அவர் 16-ம் வயதிலேயே சிங்காதனத்தில் ஏறுவார்."

மேற் கூறிய விவரங்கள், ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் 13-ம் வயதிலிருக்கும் பொழுதே அவருடைய அறிவுத் திறமையைப் பற்றியவை என்பதை மறக்கக்கூடாது. அவ்விளம் பருவத்திலேயே, பல மொழிகளிலும், மற்று பல விஷயங்களிலும் அபாரத் தேர்ச்சியும் அறிவும் பெறுவதற்கு இடையானது. அவருடைய புத்தி கூர்மையும், மேன்மையும் எவ்வளவு சிறப்பா னவை என்பதை ஊகிக்க நமக்கு இயலும். கணக்கி லும், சரித்திரத்திலும், இலக்கியத்திலும், வேறு பல விஷயங்களிலும் அவருக்கு எவ்வளவு பாண்டித்திய மிருந்ததென்பதை, வெல்ஷ்துரையின் குறிப்பினல் ஓரளவு அறியக்கூடும். சதா சர்வகாலங்களிலும் அறிவு வளர்ச்சியில் ஊக்கங்கொண்டு ஈடுபட்டிருந்த அவர் தற்காலத்தில் "ஸகல கலா வல்லபன்" "ஸர்வ சாஸ்திரவிதுஷன்" என்கிற பொருத்தமான பட்டப் பெயர்களைப் பெற்று விளங்கியதில் அற்புதமொன்று மில்லை.

பல கலைகளிலும், சாஸ்திரங்களிலும் அதிகப்ரீதியும், மற்றும் அவருக்கிருந்தும், இசைக்கலையிலல்லவோ ஓர் சக்ரவர்த்தியாக அவர் விளங்கியது? ஆனால் சிறு வயதில் அவருக்கு இசைப் பயிற்சி கொடுத்தவர்கள் யார் என்பதைப் பற்றிய தகவல்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. மற்ற கலைகளைப் போலவே, இசைக் கலையிலும், அவருக்கிருந்த பற்று, தலைமுறை தலைமுறையாக பரம்பரையாய் வந்து வாய்த்திருக்கவேண்டுமென்பதற்கையமில்லை. வஞ்சி மகாராஜாக்களில் தென்னிந்தியாவிற்கெல்லாம் அதிபதியாய் "தக்ஷிண போஜன்" என்று புகழார்ந்த போர்வீரன் ஸ்ரீ குலசேகரவர்ம தேவன் என்பவர் "சங்கீதக் கலையின் கரைகடந்தவர்"* என்கிற புகழ்ப் பெயரைப் பெற்றிருந்தார். இவ்வீரனுடைய தம்பியாகிய ஆதித்திய வர்ம தம்பிரான் மற்ற கலைகளைப்போலவே இசைக் கலையிலும் அளவிலாத தேர்ச்சிபெற்றிருந்தார், என்பதாக அவருடைய வடசேரி சாஸனத்தில் காணலாம், † இப்படிப் பரம்பரையாகக் கிடைத்த கலா வாஸனையைப் போற்றி வளர்த்து, ஸ்வாதித் திருநாளுக்கு முதன் முதல் குருவாக அமைந்து சிக்ஷை சொல்லிக் கொடுத்தவர்கள் அக்காலத்திய அரண்மனை சங்கீத வித்துவான்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களில் முக்கியமாக கரமனை சுப்பிரமணிய பாகவதரைக் குறிப்பிடவேண்டும். 1005-ஆம்

---

* "பிரத்யும்னப்யுதயம்" என்கிற நாடகத்தின் இரண்டாம் பாகத்தைப் பார்க்கவும்.

† "சப்தஜ்ஞோ..............ஸங்கீத ஸாஹித்யயோஃ" என்று தொடங்கும் ச்லோகத்தைப் பார்க்கவும்.

மிதுன மீ 1-உயின் உத்தரவில் அவருக்கு மாதச் சம்பளமாய் 250 பணம் பதித்திருப்பதாக தெரிகிறது.

அக்காலத்தில் நாட்டிலிருந்த சங்கீத வித்வான்களெல்லோரும், மகாராஜாவின் சங்கீத அறிவை வளர்த்திருக்கக் கூடும். கோவிந்தமாரார் முதற்கொண்டு பல மகா வித்வான்கள் அக்காலத்தில் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் இருந்தார்கள். தவிர, பாரதம் முழுதும் பெயர்பெற்ற பெரும் பாடகர்களும் இசைக் கலைவல்லுநர்களும் திருவனந்தபுரத்தில் ராஜஸபைக்கு வந்து, அவரவர்களுடைய கல்வித்திறனுக்குத்தக்கவாறு பரிசுகளைப் பெற்றுவந்ததும் மகாராஜாவின் இசைப்பற்றை மேன்மேலும் அதிகரித்தது. எப்படியிருந்தாலும் மகாராஜாவுக்குண்டாயிருந்த சங்கீதக் கலைத்தேர்ச்சியின் ஆழம், பரப்பு இவைகளை ஆலோசித்துப்பார்த்தால், இயற்கையாகவே அவருக்குண்டாயிருந்த சங்கீத வாசனையுடன் ஆழ்ந்த பாண்டித்தியத்தையும் தெளிவாகக் காண்கிறோம். பிற்காலத்தில் ஸங்கீத ஸார்வ பௌமனாகிய ஸ்ரீ த்யாக ராஜஸ்வாமியைக் கூட மீறும் விதத்தில் புகழ்பெறவும், எல்லா விதமாகிய சங்கீதப்ரயோகங்களுக்கும் முழுதும் தனி உரிமைபெற்று விளங்கிய ஸ்ரீ ஸ்வாதித் திருநாளின் இசை அறிவுக்குப் பொருந்திய இசைப்பயிற்சியைப் பற்றியும், நாம் பெருமிதத்துடன் நினைக்க வேண்டியது ஸங்கீத ஸாகித்தியங்களிலிருந்தது போலவே, பல்வேறு கலைகளிலும் அவர் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். 1004-ஆண்டுத்தில் அரண்மனையில் படம் எழுத சாயமும், மற்ற கருவிகளையும் வெளியிலிருந்து வருத்தியதாகக் குறிப்

பிருக்கிறது. அவர் ஓவியக் கலையை எப்படி வளர்த்தார் என்பது பின்பு கூறப்படும்.

இளவரசர்களின் படிப்பு விஷயங்களைக் கவனித்தது போலவே, மத, கர்ம அனுஷ்டானங்களை நடத்துவதிலும், மகாராணி பார்வதீபாயி தனி முயற்சிகளைக் கைகொண்டாள். குறிப்பாக இராஜவம்சத்தில் வைதீகச் சடங்குகளை முறைதவறாது நடத்திவருவது பரம்பரைப் பழக்கம். இப்பழக்கம் வஞ்சி ராஜவம்சத்திய பெரும் செல்வமாக இருந்தது. 1003-ஆம் தை மீ 6-உ மகாராஜாவுக்கு "திருமாடம்பு" முறைப்படி ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. "தை மீ 6-ம் உ "சோதித் திருநாள் திருப்பாப்பூர் கீழ்ப்பேரூர் ஸ்ரீ வீரராமவர்மராய சிறவாய் மூத்த திருவடி இருன்னருளியேடத்தில் பண்டாரத்தில்" கருப்புக் கோயிலில் 'திருமாடம்பு' கொண்டதும், பெரிய கோயிலில் காணிக்கை வைத்ததும்—இவைகளைச் சம்பந்தித்த விவரங்களும், செலவு கணக்குகளும் இருக்கின்றன. அன்று உதயாதி நான்கு நாழிகைக்குள் மகர ராசியில் உபநயனமும் நடத்தப்பட்டது. அன்றைய தினமே தரணநல்லூர் நம்பூதிரியவர்களுக்கு மகாராஜா ஒரு சால்வையைப் பரிசாகக் கொடுத்து நமஸ்காரமும் செய்தார். இவ்விஷயம் செல்லம்வகைக் குறிப்புக்களில் காண்கிறது.

"(1003-ஆம் மகர மீ 5-உ) சோதித் திருநாள் திருவவதாரம் செய்தருளிய கீழ்ப்பேரூர், ஸ்ரீ வீர வஞ்சிபாலராமவர்மராகிய மூத்தபண்டாரத்திலேக்கு 1003-ஆம் மகர மீ 7-உ சௌலவும், உபநயனமும்,

11-ம் வ ஸமாவர்த்தனவும் திருமாடம்பும், 17-வ படியும், படியேற்றவும் நிர்வகிக்குன்னவகைக்கு 6-வ தேவாரத்துக் கோயிக்கல் வச்சு கிரகசாந்தி கழிஞ்ச திண்டெ சேஷம் மண்ணுநீர் கோருவான் புறப்ப டுன்னதினு கருப்புக்கோயிக்கல் வடக்கே பள்ளிய றையில் வச்சு சார்க்கர பகவதிக்கு பொன்னறப்பணி க்கரெக்கொண்டு பாட்டுத் துடங்கியதாயி'' என் றொரு குறிப்பும் இருக்கிறது.

## 3. ராஜபதவியேற்பும், அரசாட்சியின் ஆரம்பமும்

ஸ்வாதித் திருநாளின் குழந்தைப் பருவத்திலும், வாலிபப் பருவம் வரும்வரையிலும், திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தினர் எல்லோரும், அவரைப்பற்றி மேம் பட்ட எண்ணங்களுடன் வருங்கால நன்மைகளை ஆவலுடன் எதிர்பார்த்து வந்தார்கள். பிறந்த பொ ழுதே அவர் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும் பாக் கியத்தைக் கண்ணுல் காண்பதற்காக, பார்வதிபாயி மகாராணியும், ராஜ ராஜ வர்ம கோயில் தம்பிரா னும், நாட்டு மக்களும், எல்லையில்லா ஆவல் கொண் டிருந்தார்கள். பதினான்கு வருஷத்திய அரசாட்சி யின் பயனுல் மற்றெவரும் செய்து முடிக்க முடியாத நன்மையையும் மேன்மையையும் இந்நாட்டிற்கு உண் டாக்கிக் கொடுக்கும் பேறு பார்வதிபாயி ராணிக்கு சாத்தியமாயிற்றென்ருலும், நாட்டை சீரும் செல்வ மும் திகழும் நிலையில் ஸ்வாதித் திருநாள் மகாராஜா வின் கைகளில் ஒப்புவிக்க வேண்டும் என்கிற எண் ணம் ஒன்றையே முக்கிய நோக்கமாகவும், கடமை

யாகவும் பார்வதீபாயி கருத்தாகக் கொண்டிருந்தாள். அதனால் ஸ்வாதித் திருநாள் இளவரசர் பதினாறும் வயதடைந்தது, நாட்டில் எல்லாவிடங்களிலும் பெரும் தோதில் வாழ்த்துக் கூட்டங்களுக்கும் விழாக்களுக் கும் இடையாயிற்று. 1004-ஆம் மேட மீ 10-உ யன்று மகாராஜாவின் பதவியேற்பு மகோற்சவம் நாடு முழுதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்வாதித் திருநாள் பட்டம் ஏற்றதைக் குறித்து, ப்ரி டிஷ் ரெஸிடெண்டு அடியில் காணும் விளம்பரத்தை பிரசித்தப்படுத்தினர்:—

"ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சி பால ராமவர்ம குல சேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மகாராஜ ராஜெ ராம ராஜ பகதூர் ஷம்ஷர்ஜங் மகாராஜா அவர்களுக்கு பதினாறு வயது நிறைந்திருப்பதனால், தற்சமயம் பண்டாரவகையிலிருந்து யாருக்கும் ஒரு வகையிலும் கடன் முதலியவைகள் தீர்க்கவேண்டிய தில்லாமலும், குடியானவர்களுள்ப்பட்டு யாரும் பண் டாரவகைக்கு வரிமுதலியவைகள் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்பதனாலும், ராஜ்ஜியத்தின் செ ல்வநிலை சீராகவிருக்கிற இச்சமயத்தில் அரசியல் காரியங்களை, பத்மநாப ஸேவினி வஞ்சி தர்ம வர்த் தினி ராஜ ராஜேச்வரி ராணி பார்வதீபாயி மகா ராஜா அவர்கள், ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சி பால ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மகாராஜ ராஜெ ராம ராஜ பகதூர் ஷம்ஷர்ஜங் மகாராஜா அவர்கள் அரசியல் காரியங்களை ஏற்றுக் கொண்டிருப்பதனால் மேற் கூறப்பட்ட ஸ்ரீ பத்ம நாப தாஸ வஞ்சி பால ராமவர்ம குலசேகர கிரீடபதி

மன்னேஸால்தான் மகாராஜ ராஜெ ராம ராஜ பக தூர் ஷம்ஷர்ஜங் மகாராஜா அவர்கள் இந்தஸம்ஸ்தா னத்திற்கு மகாராஜாவாகவும், அதிபதியாகவும் ஆகி யிருக்கிறூர்கள் என்கிறதை ஸகலமான ஜனங்களும் அறிந்து மகாராஜாவின் கட்டளைக்குட்பட்டு நடந்துக் கொள்ளவும் வேண்டியது.— என்று கி. பி 1829-ஆஸ ஏப்ரில் மீ 21-உக்குச் சரியான கொல்லம் 1004-ம் ஆஸ மேட மீ 10-உ பிரசித்தப்படுத்தியது.

திருவிதாங்கோடு ஸம்ஸ்தானத்து ரெஸி
டெண்டு கர்னல் மாரிஸன்"

1004-ஆஸ சித்திரை மீ 10-உ சிங்காதனம் ஏறி யபிறகு, மகாராஜா பகடை சாலேயில் எழுந்தருளி ராஜசாஸனத்தில் கையொப்பமிட்டார். ராஜ்ஜி யத்தை ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் கையில் ஒப்புவித்ததற்கறிகுறியாக, அன்றைய நாளே பார் வதீபாயி மகாராணியும் ஓர் விளம்பரத்தை வெளி யிட்டாள். அதே சமயத்தில் மகாராஜா அவர்களும், தான் ராஜ்ஜியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டி ருப்பதாக வேறொரு விளம்பரத்தையும் வெளியிட் டார்-அது கீழ்வருமாறு:—

"ஈ திருவிதாங்கோட்டு ஸம்ஸ்தானத்தேக்கு அவகாசியாயுள்ள ராஜாவு நாம் ஆகுன்னு என்னும் நமுக்கு சைசவம் ஆயிரிக்குன்னதிஞல் பதினறு வய ஸ்ஸு கழியுன்னதுவரைக்கும் நம்முடெ மாதாவாயி ருன்ன பத்மநாப வல்லபி வஞ்சி தர்ம வர்த்தினி ராஜராஜேச்வரி ராணி லக்ஷ்மீபாயி மகாராஜா அவர்கள் ராஜ்ய கார்யங்கள் விசாரிச்சுக் கொள்ளத்

தக்க வண்ணமும் பகுமானப்பெட்ட கம்பெனியார் அவர்களுடெ உத்தரவின் ப்ரகாரம் 989-ம் ஆண்டு சிங்க மாஸம் பதினேழாம் தியதி அன்னிருன்ன ரெஸிடெண்டிண்டெ விளம்பரவும் பின்னத்தேதில் அவருடெ ஸோதரி பத்மநாப ஸேவினி வஞ்சி தர்ம வர்த்தினி ராஜ ராஜேச்வரி ராணி பார்வதீபாயி மகா ராஜா அவர்கள் நம்முடெ பேர்க்காயிட்டு ராஜ்ய விசாரம் ஏற்றிரிக்குன்ன ஸங்கதிக்கு 990-ம் ஆண்டு துலா மாஸம் 3-ம் தேதி பத்மநாப ஸேவினி வஞ்சி த்ர்ம வர்த்தினி ராஜ ராஜேச்வரி ராணி பார்வதீ பாயி மகாராஜா அவர்களுடெ விளம்பரவும் பரஸ்யம் செய்திட்டுண்டல்லோ. இப்போள் நமுக்கு பதினாறு வயஸ்ஸு திகஞ்சிரிக்குன்னதினால் இன்னே திவஸம் ராஜ்ய விசாரங்கள் நாம் ஏற்றிரிக்க கொண்டு, ஈ ராஜ்ஜியத்துள்ள ஸகல மானபேரும் ஆயதறிஞ்சு, நம்முடெ ஆஜ்ஞாசாஸனயில் உள்ப்பெட்டு நடன்னுக் கொள்ளுகையும் வேணம்.

என்னு 1004-ம் ஆண்டு மேட மீ 10-௳"

பதவியேற்பு மகோற்சவத்தைத் தலைநகரமாகிய திருவனந்தபுரத்திலும், ராஜஜியத்தில் மற்றெல்லா இடங்களிலும், நாட்டு மக்களெல்லோரும் கௌரவ மரியாதைகளுடனும், ஆடம்பரத்துடனும் திருவிழாவாகக் கொண்டாடினர்கள். கலைஞர்களும், புலவர்களும், என்றுமில்லாத பெருமகிழ்ச்சி கொண்டார்கள். இலக்கியத்திலும், இசை முதலிய பல கலைகளிலும் இவ்வளவு விருப்பமும், பற்றும் படைத்த ஓர் மகாராஜா பட்டத்திற்கு வந்தது எப்பேர்பட்ட குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது என்பது சிந்தித்

த்திற்குரிய விஷயம். பட்டத்திற்கு வருவதற்கு முன்பாகவே, இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து ஸங்கீத வித்வான்களும், நாட்டிய வல்லுநர்களும், மகாராஜாவின் திருக்கரங்களிலிருந்து விலையுயர்ந்த பரிசுகளைப்பெற்றிருந்தார்கள். ஸ்ரீ ரங்கத்திலிருந்து வந்திருந்த நாகரத்தினத்திற்கு 1000-ஆம் இடவ மீ 30-உ 300 ரூபாயும் ஒரு சால்வையும், தஞ்சையிலிருந்து வந்திருந்த பிச்சு பாகவதருக்கும், பரத நாட்டியக்காரர்களுக்கும் 1002-ஆம் மிதுன மீ 12-உ 250 ரூபாய் வெகுமதியும் கொடுத்ததாக கணக்குகள் இருக்கின்றன. 1004-ஆம் 3085 பணம் விலை கொடுத்து ஒரு வாத்தியப்பெட்டி வாங்கியதாகவும் குறிப்பிருக்கிறது. 1002-ஆம் மேட மீ 13-உ சாலையில் பத்மநாப தீக்ஷிதர் என்பவரைக்கொண்டு பாகவத பாராயணம் செய்வித்ததற்கு 500 பணம் சம்பாவனையாகக் கொடுத்ததைப்பற்றி கணக்கு எழுதப்பட்டிருக்கிறது 1004.ஆம் தனு மீ 27-உ சோழதேசத்து கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு பெரிய நன்கொடைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. மேற்கூறிய விவரங்களினால் ஸ்வாதித் திருநாள் மகாராஜா வயதுவரும் முன்பே, கலைவளர்ச்சியில் அடைந்த வெற்றியும் புகழும் தெளிவாகும். இச்செயல்களினால் இரண்டாம் தக்ஷிண போஜன்'' என்று புகழ் பெற்று அதிகாரபதவியில் புகுந்த பெரும் சம்பவத்தை பெரு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் நாட்டுமக்கள் கொண்டாடியதில் வியப்பொன்றுமில்லை. இந்த கொண்டாட்டம் திருவிதாங்கூரில் மாத்திரமல்லாமல் வெளிநாடுகளிலும் நிகழ்ந்தது.

பட்டம் ஏற்று இரண்டு மாதம் கழிந்ததும், வம்ச வழக்கத்தை அனுசரித்து 1004-ஆம் மிதுன மீ 28-உ யன்று மகாராஜா துலாபாரச்சடங்கை நடத்தினார்.

அரசாட்சியை அதற்குரியவராகிய ஸ்ரீ ஸ்வாதித் திருநாளுக்கு விட்டு கொடுத்த பிறகு ராணி பார்வதீ பாயி தன் சொந்த அலுவல்களைக் கவனிக்கலானாள். எனினும் மகாராஜா அடிக்கடி அவ்வம்மணியின் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் நாடி அறிந்து உபதேசங்களைப் பெற்று வந்தார். பட்டத்திற்கு வந்த உடன், தனக்கு ஆங்கிலம் கற்பித்த உபாத்தியாயர் ஸுப்பராயரை, ராஜ்ஜியத்திற்கு திவானாக நியமித்தால் நலமாயிருக்கும் என்று மகாராஜா எண்ணினார். ஆனால் அப்பொழுது திவானாயிருந்த வெங்கடராயரை அப்பதவியிலிருந்து நீக்கிவிடுவது ரெஸிடெண்டு கர்னல் மாரிஸனுக்குப் பிடிக்கவில்லை. ராணி பார்வதீபாயியின் அபிப்பிராயமும் அவ்வாறே இருந்தது. அதனால் தான் வெங்கடராயர் திவானாகத் தொடர்ந்தார். இப்படி ஆறுமாத காலம் நடந்து வந்தது. அதற்கிடையில் கர்னல் மாரிஸனும் ரெஸிடெண்டுத்தியோகத்திலிருந்து விலகினார். மகாராஜாவின் பூரண பிரீதியும் ஆதரவும் இல்லாமல் உத்தியோகத்தில் தொடருவது எளிதல்லவென்றுணர்ந்து, வெங்கடராயர் திவான் பதவியிலிருந்து விலகி விட்டார்.

இரண்டு மாதங்கள் கழிந்ததும் 1005-ஆண்டு மாசி மாதம் 25-தேதி திவானாக ஸுப்பராயரை நிய

மித்து உத்தரவையும், அதிகாரச் சின்னங்களையும் மகாராஜா அவருக்குத் தந்தருளினர். அதே சமயத்தில் ஹுஜூர் கோர்ட்டு ஜட்ஜி கொச்சு சங்கரப் பிள்ளையை திவான் பேஷ்காராகவும் நியமித்தார். இம்முக்கிய நியமனங்களுடன், மற்று பல உத்தியோகஸ்தர்களை இடம் மாற்றியும், அரசியல் உத்தியோகஸ்தர்களின் கூட்டத்தை முழுதும் திருத்தியமைத்தார். திருவிதாங்கூரை மற்ற ராஜ்ஜியங்களுக்கு ஒரு மேற்கோளாக ஆக்கிவிட வேண்டுமென்கிற பேரவாவுடன் தான் மகாராஜா இக்காரியத்தை நடத்தினர். தன்னுடைய வாழ்நாட்களில் அரசியலை மேன்மைப்படுத்த வேண்டுமானல் தானகவே தனி முயற்சியெடுத்து ஊக்கத்துடன் உழைத்தால் தான் அக்காரியம் முடியும் என்பது அவருக்கு நன்ருகத் தெரிந்திருந்தது. இரண்டுமகாராணிகளின் அரசாட்சியின் பயனுக நாட்டிற்கு அரிய பெரும் நன்மைகள் நேர்ந்து, நாட்டுமக்கள் நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள். வேலையிலிருந்து விலகியிருந்த திவான் வெங்கடராயர், அக்காலத்திய நாட்டுப் பிரஜைகள், மகாராணி, ஆங்கில அரசாங்கம் இவர்களின் நன்மதிப்பைப் பெறும் விதத்தில் மகாராணியின் கட்டளைகளை சிரமேற்கொண்டு நடத்தி வந்தவர். கர்னல் வெல்ஷ்துரை கூட வெங்கடராயருடைய செயல் திறமையைப் புகழ்ந்து தன்னுடைய அபிப்பிராயத்தை எழுதியிருக்கிருர். கி. பி 1824-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-தேதி ரெஸிடெண்டு நியூவால்துரை சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் வெங்கடராயரைப் பற்றி புகழ்ந்து எழுதியதிவ்வாறு:—

"மகாராணி அவர்கள், பிரஜைகளின் நிலையை சீர்படுத்தும் விஷயத்தில் எப்பொழுதும் அதிக ஆவலும், ஊக்கமும் காட்டி வருகிறார்கள்-மகாராணியின் கட்டளைகளை திவான் வெங்கடராயர் சாமர்த்தியத்துடன் செம்மையாக நிறைவேற்றுகிறார். தன்னிடத்தில் ஒப்படைத்தபெரும் ஏவல்களை நடப்பில் செய்து காட்டுவதில் வெங்கடராயருக்கிருக்கும் ஊக்கமும், திறமையும் தெளிவாகத்தெரிகின்றன. இந்நாட்டின் பல ஜாதிவகுப்புக்களிலுட்பட்ட பிரஜைகளெல்லோரும் வெகுகாலமாக கண்டறிந்திராத பாதுகாப்பு, அமைதி, சுகம் இவைகளை இப்பொழுது அனுபவித்து இன்புறுகிறார்கள் என்று நான் உறுதியாகக் கூறுவேன்"

மேற் கூறியதிலிருந்து, ராணி பார்வதீபாயிக்கு உண்டாயிருந்த பொதுநல ஆவலும், வெங்கடராயருடைய செயல் திறமையும் நன்கு விளங்குகின்றன. இப்படியிருந்த ராஜ்ஜியத்தை இன்னும் உயரிய நிலக்குக் கொண்டுவருவதற்கு மகாராஜா மிகவும் ஆர்வம் கொண்டார். தனக்கு குருவாகவும், மந்திரியாகவும் இருந்த ஸுப்பராயருக்கு வேண்டிய ஆலோசனைகளையும், போதனைகளையும் மகாராஜா அடிக்கடி கொடுத்து வந்தார். வெங்கடராயருக்குப் போட்டியாக மந்திரி பதவிக்கு வந்திருந்த ஸுப்பராயர் தன்னுடைய உத்தியோக காலம் முந்திய காலத்தைக் காட்டிலும் மிகச் சிறப்புடன் விளங்க வேண்டுமென்று சதா கடும் முயற்சியெடுத்து உழைத்து வந்தார். ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் ஆட்சியின் ஆரம்பத்தில் நாட்டிற்குக் கிடைத்த நன்மை

களை ஆராய்ந்துபார்த்தால், மகாராஜாவினுடைய வும், திவானுடையவும் நோக்கங்களும், உழைப்பும் வெற்றியுடன் நற்பயனளித்தன என்று உறுதியாகக் கூறலாம்.

மகாராஜாவும், மந்திரியும் அடிக்கடி சந்தித்து ராஜகாரியங்களைப் பற்றி ஆலோசிப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் இருந்தால்தான் அரசாட்சியானது வெற்றியடையும் என்று மகாராஜா அபிப்பிராயப்பட்டார். அப்பொழுது ஹஜூர்க் கச்சேரி கொல்லத்திலிருந்தது. கச்சேரியைத் திருவனந்தபுரத்திற்கு மாற்றாமலிருந்தால் அரசியலைச் சம்பந்தித்த வேலைகள் செவ்வனே நடப்பது முடியாத காரியம் என்று மகாராஜாவுக்குத் தோன்றியது. கச்சேரியைக் கொல்லத்திலிருந்து தலை நகருக்கு மாற்றும்படி உத்தரவும் ஆயிற்று. கோட்டைக்குள் அரண்மனைக்கருகில் ஓர் கட்டிடத்தில் கச்சேரி ஸ்தாபிக்கப்பட்டது. இத்துடன் திவான் அவர்களுக்கும் மற்றைய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் வேண்டும்போது மகாராஜாவைத் தரிசித்துக் கட்டளைகளைப்பெற சௌகரியம் உண்டாயிற்று. அரசியல் காரியங்கள் ஒழுங்காகவும், தாமதமில்லாமலும் நடக்க இது மிகவும் உதவிற்று.

திவானுடைய அபிப்பிராயங்களை மகாராஜா உடன் ஒப்புக்கொண்டு உத்தரவு நல்கி வந்ததனால் சகல அலுவல்களையும் உறுதியுடனும், தடையில்லாமலும் நடத்த சர்க்காருக்குச் சாத்தியமாயிற்று. லஞ்சம், அநீதி, அக்கிரமம் இவைகளை அடக்கி ஒழித்து, பிரஜைகளுக்குச் சுகசௌகரியங்களை ஏற்படுத்துவதில் மகாராஜா மிகவும் சிரத்தையுடன் உழைத்து

வந்தார். எவ்விதத்திலாயினும்சரி, எந்த உத்தியோகஸ்தனாயினும் சரி, பிரஜைகளை நீதி நியாயங்களுக்கு விரோதமாகத் துன்பப் படுத்தினான் என்று தெரிந்தாலுடன் அவனை அக்கணமே உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்கிற கடும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மனுஸ்மிருதியிலும், நீதி சாஸ்திரத்திலும் அபார பாண்டித்தியம் பெற்றிருந்த மகாராஜா அவர்கள் ராஜ்ஜிய காரியங்களையெல்லாம் மிகுந்த கருத்துடன் கூர்ந்து கவனிக்கலானார். நன்றாக ஆராய்ந்த பிறகே கடைசி உத்தரவுகள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள உத்தியோகஸ்தர்களையும் வரவழைத்துநேரில் கண்டு அரசியல் விஷயங்களைப் பற்றிச் சர்ச்சைசெய்து, ஆலோசித்து வந்தார். குறிப்பிட்ட வேளைகளில், திவான்ஜியும், அப்பீல் கோர்ட்டு நியாயாதிபதிகளும் அரண்மனை உத்தியோகஸ்தர்களும் அரசியல் விஷயங்களைப்பற்றி மகாராஜா அவர்களைக் காண வரவேண்டியது என்றும் உத்தரவாயிற்று இப்படி உத்தியோகஸ்தர்களை நேரில் கண்டு விஷயங்களைப் பற்றிப் பேசி ஆலோசிக்கத் தொடங்கியதும், யாரெல்லாம் சமர்த்தர்களாகிய உத்தியோகஸ்தர்கள் என்று அறிவதற்கு மகாராஜாவுக்கு எளிதாயிற்று. வெகுசீக்கிரத்தில் ஒவ்வொரு உத்தியோகஸ்தனுடைய திறமையையும், தகுதியையும் மகாராஜா தெரிந்துகொண்டுவிட்டார். இப்படிச் செய்துவந்ததனால் கச்சேரியிலும் அரண்மனையிலும், திறமைவாய்ந்த உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். கலைகளிலும் சாத்திரங்களிலும் நிபுணன் என்

கிற புகழைப்பெற்றிருந்த மகாராஜா, அரசியல் காரியங்களிலும் ஒப்பிலாத திறமையை உலகிற்கு வெளிப்படுத்தினர் என்பது மேற் கூறியவைகளினல் விளங்குகிறது. மேற் கூறிய விதத்தில், அரசாட்சியின் ஆரம்பத்திலேயே, அளவு கடந்த ஊக்கம், உழைப்பு, திறமை இவைகளை அவர் விளக்கிக் காட்டினர். ஆயினும் கேவலம் சிறு வயது வாய்ந்த அவருடைய சாமர்த்தியத்தைப் பற்றி பிரிடிஷ் அரசாங்கத்தார் சந்தேகித்தார்கள். ஆங்கிலர்களுடன் அதிக நட்புகொண்டிருந்த வெங்கடராயரை திவான் பதவியிலிருந்து பிரித்துவிட்டது ரெஸிடெண்டு கர்னல் மாரிஸனுக்கு வெறுப்பைத் தந்தது. "வெங்டராயர் திவானயிருந்தபோது சீரும் செல்வமும் திகழ்ந்து விளங்கிய திருவிதாங்கூர் ராஜ்ஜியம் இப்பொழுது உயர்நிலையிலிருந்து நழுவ ஆரம்பித்து விட்டது" என்று கர்னல் மாரிஸன் கம்பெனியின் மேலதிகாரிகளாகிய கோர்ட ஆப்டைரெக்டர்ஸ் (Court of Directors) க்கு, இந்நாட்டின் மேல் வெறுப்பு உண்டாகும்படி ஏற்கனவே எழுதியிருந்தார். இதன் பயனாக நாட்டின் நிலையை நேரில் கண்டறிய சென்னை கவர்னர் விரும்பினர். அக்காலத்தில் சென்னை மாகாண கவர்னராயிருந்தவர் கர்னல் ஹாஷிங்க்டன். இவர்தான் முதன் முதல் இந்நாடடிற்கு விஜயம் செய்த பிரிடிஷ் கவர்னர். அவரைத் தகுந்தபடியாக வரவேற்கவும், உபசரிக்கவும் சர்க்காரிலிருந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, திவான் ஸுப்பராயருக்கு உத்தரவு நல்கப்பட்டது. வெங்கடராயர் வேலையிலிருந்து விலகி அதனல் ரெஸிடெண்டுக்கு

மனக்கசப்பு உண்டாகியதற்கு முக்கிய காரணம் ஸுப்பராயருடைய நியமனம்தான். இதை உணர்ந்திருந்த ஸுப்பராயர் தன்னுடைய சாமர்த்தியத்தாலும், செயல் திறமையாலும் கவர்னரைத் திருப்திப் படுத்திச் சந்தோஷமடையும்படி செய்து விடவேண்டியது தன் தனிப் பொறுப்பு என்று நிச்சயம் கொண்டார். மகாராஜாவும் இதை அறிந்திருந்தார்.

ஹாஷிங்க்டன் துரையை மகாராஜா, கொல்லத்தில் எதிர்கொண்டு வரவேற்ருர். எவ்விதத்திலாவது தன்னுடைய புத்தி கூர்மையையும், சாமர்த்தியத்தையும், அரசியல் திறமையையும் கவர்னருக்கு வெளிப்படுத்திக் காண்பித்து, அவருடைய நன்மதிப்பைப் பெற்றுவிட மகாராஜா உறுதிகொண்டார். கவர்னருக்கோ மகாராஜாவைப் பற்றிய எண்ணம்— "இராஜா கேவலம் ஒரு சிறு பிள்ளைதானே" என்பதுதான். அச் சிறுவயதிலேயே பல கலைகளைக் கற்றவரும், பல மொழிகளில் பரிசயமுள்ளவரும், சாத்திரங்களைக் கற்றறிந்தவரும் ஆவார், அவர், என்பதை கவர்னர் நினைக்கவேயில்லை என்பதில் ஆச்சரியப்படவேண்டியதில்லை. மகாராஜா நன்ருக ஆங்கில மொழியில் பேசுவார் என்பதுகூட கவர்னருக்குத் தெரியாது அதனுல் தான் மகாராஜாவை நேரில் பார்த்துப் பேசும்போது தான், அவர் பால் ஹாஷிங்க்டன் துரைக்கு பெரும் வியப்பும், மதிப்பும் உண்டாயின.

மகாரராஜாவின் முதன் முதல் வாக்கியங்களே கவர்னரை வசப்படுத்திவிட்டன. கவர்னரைக் கண்ட

வுடன், மேல் நாட்டாரின் பழக்கத்தையொட்டி மகாராஜாவின் கையை கவர்னர் குலுக்கினர். மகாராஜாவோ கவர்னரின் கையைச் சற்று இறுகவே பிடித்தார். ஒரு வேளை அவருக்கு மேல்நாட்டினர்களுடைய உபசார அனுஷ்டானங்கள் பரிசயமில்லாமலிருக்கலாம், அதனால்தான் கையை இறுகப்பிடித்தார்போலும் என்று எண்ணி, கவர்னர் துரை "துரைகளுக்குக்கைகொடுக்கும்போது இப்படி இறுகப்பிடிப்பது வழக்கமில்லை" என்று பிரஸ்தாபித்தார். அதற்கு மகாராஜா பதிலளித்தது, "ஆங்கில ஈஸ்டிண்டியா கம்பெனியாரின் பிரதிநிதியாகிய உங்களுடைய கையை நான் இறுகத்தான் பிடிக்க விரும்புகிறேன். எனக்கு உதவ வேறுயாரும் இல்லை. அதற்காகத்தான் தங்களுடைய கையை கெட்டியாகப் பிடிக்கவேண்டியிருக்கிறது". மகாராஜா ஆங்கிலத்தில் இப்படி அழகாய் பதில் கூறிய வார்த்தைகளின் இன்பமான நடையையும் சமயோசித புத்தியையும் கண்டு கவர்னர் ஆச்சரியமடைந்துவிட்டார். இப்பொழுது தான், கவர்னருக்கு மகாராஜா சிறந்த அறிவாளி என்பது புலப்பட்டது பிறகு வெகுநேரம் பல விஷயங்களைப் பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டார்கள். நாட்டில் பிற்காலத்தில் உண்டாக வேண்டிய நன்மைகளைப் பற்றியும், அவைகளைச் செயலில் கொண்டு வருவதற்கு சர்க்கார் கைகொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் அவர்களிருவரும் விரிவாய்ப்பேசிக்கொண்டார்கள். "உடல்தோற்றத்திற்குப் பொருந்திய அறிவாளி" என்று காளிதாஸ மகாகவி ராஜாவை வருணித்திருப்பது போலவே ஸ்வாதித்

திருநாள் மகாராஜாவை ஒப்பிட்டுக் கூறலாம். அவருக்கு அறிவையொத்த சாஸ்திரஜ்ஞானமும் உண்டாயிருந்தது. இதனால் மகாராஜா கைகொண்ட ஆரம்ப நிகழ்ச்சிகளெல்லாம் வெற்றியடையுமென்றும், ராஜ்ஜியத்திற்கு மேன்மையும், வளர்ச்சியும், சௌபாக்கியமும் நிச்சயமாக ஏற்படுமென்றும் கவர்னருக்கு நம்பிக்கையுண்டாயிற்று. பிறகு அவர் திருவிதாங்கூரில் பல ஸ்தாபனங்களையும் நேரில் பார்வையிட்டார். அவைகளின் நிலையையும், அமைப்பையும், நடப்பு முறைகளையும் தானே நேரில் கண்டறிந்ததும் மகாராஜாவின் அரசியல் திறமையைப் பற்றி கவர்னருக்குச் சம்பூர்ணமான நம்பிக்கையும், திருப்தியும் உண்டாயின. இப்படியாக, கவர்னருடைய மனதில் பதிந்திருந்த நாட்டின் அரசியலைப் பற்றிய தவறான அபிப்பிராயங்கள் முழுதும் மாறி விட்டன. ஆனாலும் கம்பெனியாரின் பரமாதிகாரிகளாகிய "கோர்ட் ஆப்டைரெக்டர்ஸ்" இன்னும் ராஜ்ஜியத்தைப்பற்றி சந்தேகம் கொண்டிருந்தார்கள். 1832 ௵ டிசெம்பர் ௴ 18-உ வங்க மாகாண சர்க்காருக்கு அவர்கள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியில்—'தாங்கள் கடைசியாக எழுதியனுப்பிய தேதி வரையில், எங்களுக்கும் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திற்கும் உள்ள உடன்பாடு ஒரு விதத்திலும் திருப்திகரமாக இருக்கவில்லை என்பது எங்களுடைய அபிப்பிராயம். கர்னல் மாரிஸன் உறுதியாகக்கொண்டிருக்கும் எண்ணங்களையும், நிதரிசனங்களையும் கொண்டு, இப்போதிய ராஜா பட்டத்திற்கு வந்ததற்கு முன்பாகவும், பட்டத்திற்கு வந்த சமயத்திலும்,

செல்வம திகழ்ந்த அந்த ராஜ்ஜியம் வெகு விரைவில் சீர்கெட்டுவிடத் தொடங்கியிருக்கிறது, என்று தோன்றுகிறது. ஆயினும், இதற்குள், தங்களுடைய கவனம் அவ் விஷயத்தில் பதிந்திருக்குமென்று நாங்கள் நினைக்கிறோம். அவ்விஷயத்தில் அத்தியாவசியமாய் வேண்டிவரும் செயல்களை ஆராய்ந்து கண்டுபிடித்து அவ்வப்போது வேண்டுவன செய்வதில், தங்களுடைய பகுத்தறிவிலும், ஊக்கத்திலும், முயற்சிகளிலும் எங்களுக்குப் பூர்ண நம்பிக்கையிருக்கிறது. திருவிதாங்கூர் காரிய நிர்வாகம் முழுதும் உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுறுதியுடன் செயலாற்றவும்.'' என்றிருக்கிறது. கம்பெனியாருக்கு இவ்விராஜ்ஜியத்தைப் பற்றி நல்ல அபிப்பிராயமில்லை என்பது இதனுல் தெளிவாகிறது. இப்படியிருந்தும், அரசாட்சி சுபகரமாகவும், எல்லோராலும் போற்றப்பட்டதாகவும் செய்து முடிப்பதற்கு மகாராஜா அல்லும் பகலும் உழைத்து வந்தார். பல சீர்திருத்தங்களும், பொதுநலத்திற்காக பல ஸ்தாபனங்களும் மகாராஜாவால் ஏற்படுத்தபட்டன. இவ்வளவு செய்தும், ஆங்கில அரசாங்கத்தின் நன்மதிப்பைச் சம்பாதிக்க, ஒருவிதத்திலும் அவருக்கு முடியாமலே போய்விட்டது. பின்கூறப்படும் விவரங்களால் இச்செய்தி நன்கு தெளியும்.

1005-ஆண்டில் நடந்த வேறொரு முக்கிய சம்பவம்:— ஆரல்வாய்மொழியிலும், பூதப்பாண்டியிலும், பாதுகாப்புக்காக வைத்திருந்த பிரிடிஷ் பட்டாளத்தைப்பின் வாங்கியதுதான். 984-ஆண்டில் வேலுத்தம்பி தளவாயியின் நாட்டாண்மையில் நடந்தகிளர்ச்

சிக்குப் பிறகு, திருவிதாங்கூரில் பிரிடிஷார் நிறுத்தி யிருந்தவையாகும் இச்சைனியங்கள். நாட்டுச்சேனை யை ஒரே ஒரு ரெஜிமேண்டாகக் குறைத்து காலாட் படையாக அமைத்திருந்தார்கள். ஆனால் திருவிதாங் கூர் ரெஸிடென்ஸியையும் குறைத்துவிட எண்ணி யிருந்த கம்பெனியாரின் ஆலோசனைக்கு மகாராஜா சம்மதிக்கவில்லை. காலாட்படையின் ஒரு பகுதி, கிழக்கிலிருந்து ஏற்படக் கூடிய படையெடுப்பைத் தடுப்பதற்காக நாகர்கோவிலில் நிலைக்கப்பட்டது. பிரிடிஷ் சைனியத்தைப் பூராவும் பின்வாங்கி அனுப் பிவிட்டது, இந்நாட்டில் பூரண அமைதி நிலவி விட் டது என்பதை வெளிப்படுத்தப் பிறப்பித்த ஓர் விளம்பரம் போலிருந்தது. இம்மாதிரி, நாட்டில் அமைதி குடிகொண்ட காலத்தில் மகாராஜாவின் அரசாட்சியில் கலை வளர்ச்சிக்கும், கல்விப்பெருக் குக்கும் தகுந்த ஓர் சமயம் வாய்த்தது என்றே அக் காலத்தைக் கருதவேண்டியது. நாடு அமைதி நிலை யையடைந்திருக்கும் இத்தருணத்தில், சகல சௌக ரியங்களையும் பயன்படுத்திக் கொண்டு, மகாராஜா வினால் நாட்டிற்கு நல்கப்பட்ட உபகாரங்கள் எவை யெல்லாம் என்பதை கவனிப்போம்.

ஸ்வாதித் திருநாள் மகாராஜாவுக்கு இயற்கை யாகவே பகட்டும் படாடோபமும் கட்டோடு பிடிக் காது. ஆயினும் அந்தஸ்த்துக்குத்தக்க அலங்காரங் கள், ஆடையாபரணங்கள் இவைகளில் அவர் கவ னம் செலுத்தினார் முதன் முதல் ராணுவ அங்கத் தினர்களின் ஆடை அணிகளின் விஷயத்தில் கவ னம் செலுத்தப்பட்டது. சென்னை கவர்னர் திரு

விதாங்கூருக்கு விஜயம் செய்தபோது பிரிடிஷ் பட்டாளம்தான் அணிவகுத்து ஆசாரமரியாதை செய்தது. இதை மகாராஜா கூர்ந்து கவனித்திருந்தார். பிரிடிஷ் பட்டாளக்காரர்களின் உடுப்பும், அணி கலங்களும், கவாத்தும், மன்னரின் மனதைக் கவர்ந்தன. ஆங்கில முறையையனுசரித்து நாட்டுப் பட்டாளத்தையும் சீர்படுத்த உத்தரவாயிற்று. புதிய மாதிரி உடுப்புகளும், தேகப்பயிற்சிகளும், கவாத்தும் ஏற்படுத்தப்பட்டன. சைனியத்திற்கு "நாயர் பட்டாளம்" என்கிற பெயரும் சூட்டப்பட்டது. தோவாளையிலிருந்த குதிரை லாயம் திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டது பட்டாளத்திற்கு வேண்டிய குதிரைகள் வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்டன. இப்படி சீர்படுத்தப்பட்ட பட்டாளம், உற்சவ காலங்களிலும் அரண்மனை விபவங்களிலும் மகாராஜாவின் அந்தஸ்தை உயர்த்தி கௌரவத்தை அதிகரிக்க மிகவும் உதவியது.

பட்டத்திற்கு வந்து இரண்டாண்டுகள் முடிவதற்கு முன்பாகவே மகாராஜா பட்டும் பரிவெட்டமும் தரித்து மணக்கோலம் கொண்டார். 'திருவட்டாற்றுபானப்பிள்ள ஆயிக்குட்டி நாராயணிபிள்ள தங்கச்சி"யவர்கள்தான் மன்னருக்கு மனைவியாகும் பாக்கியம் பெற்றவர். அச்சிமாட்டிக்கு தானம், தக்ஷிணை, பல்லக்கு, படிச்செலவு முதலியவைகளுக்கும், விசாரிப்புக்காரன் 'அச்சிகள்', 'பிள்ளைமார்', 'ஆயிம்மமார்', 'குட்டிகள்' முதலியவர்களுக்கும் சம்பளவகையில் மாதம் ஒன்றுக்கு 1024½ யே அரைக்

கால்பணமும், 1006-ஆடு துலா மீ 1-தேதி பதித்துக் கொடுத்ததாகக் கணக்குகள் காண்கின்றன.

அழகிலும், நற்குணங்களிலும் சிறந்து விளங்கிய அப்பெண்மணி கணவனைத் தெய்வமாகக் கருதிப் பணிவிடைகள் செய்து அவருடைய அன்புக்குப் பாத்திரமாகி விளங்கினர். மகாராஜா அவர்கள் அனுக்ரகித்து பெருந்தாணியில் ஒரு அம்ம வீடும் கட்டிவைத்துத் தன் துணைவிக்கு அருளினர் 1021-ஆடு ஆவணி மீ 22-உ அந்த மாளிகையில் பால் காய்ச்சு வைபவம் நடந்தது. இரயிம்மன் தம்பி இயற்றிய புகழ்பெற்ற பாட்டுக்களில் சில சிருங்காரப் பாட்டுக்கள் - இவ்வம்மணி கணவர் தன்பால் காண்பிக்கும் அன்பின் மிகுதியைத் தன் தோழியுடன் கூறும் விதத்தில், அமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

"காமினீஜனம்கண்டு காமனெனன்னு கொண்டாடும்
கோமளாக்ருதி சாருசீலன்–ஸ்ரீபத்மநாப
ஸ்வாமிதன் பத ஸேவா லோலன்–வல்லபனென்னில்
ப்ரேம மதினுவிராமமென்னியே–காமலீலையில் ஓமலேச்ருணு
மாமகமானஸமாசுவசீக்ருதமாக்கி விரவோடழல் போக்கி"

என்பதுபோல் பதியின் அன்பைப் பற்றி நினைக்க நேர்ந்த அப்பெண் மணி பெரும் பாக்கியவதியாகத்தான் இருந்திருக்கவேண்டும்.

## 4. சீர்திருத்தங்கள்

பட்டத்திற்கு வந்ததிலிருந்தே பிரஜைகளின் நலத்திற்காகவும், இன்ப வாழ்க்கைக்காகவும் வேண்டத்தக்கச் சகல முயற்சிகளையும் மகாராஜா திடமன

துடன் கையாண்டுவந்தார். பழைய பழக்க வழக்கங்கள் மாறுபாடடைந்து வந்த அந்நாளில் பொது ஜனங்களின் பாதுகாப்பிற்கு புதிய திட்டங்கள் அவசியமாயிருந்தன. நாட்டு மக்களுக்குள் உண்டாகும் வழக்குச் சச்சரவுகளை விசாரித்துத் தீர்ப்பு கொடுப்பதற்குப் போதிய நீதி ஸ்தாபனங்களின் அவசியம் நாள்தோறும் அதிகரித்து வந்தது. இதைப்பற்றி 1007-ஆம் இடவ மீ 19-உ அடியில் வருமாறு ஒரு விளம்பரம் பிரசித்தப்படுத்தப்பட்டது:—

"ஈ ராஜ்ஜியத்திலுள்ள குடியானவன்மார், கச்சவடக்கார் உள்பெட்ட ஆளுகள்க்கு 'அதாலா' போலீஸ் இடபெட்டு ஸங்கட காரியங்கள், பண்டாரவக இடபெட்டு வக்கீல்வக ஸங்கதிகளும் விஸ்தரிச்சு தீர்ப்பிக்குன்னதினு ஒரு அப்பீல் கோர்ட்டும், ஒரு ஹுஜூர் கோர்ட்டும், ஆறு ஜில்லா கோர்ட்டும் வச்சிரிக்குன்னதும், ஒரோ கோர்ட்டுகளில் அஞ்சும் ஆறும் மண்டபத்து வாதுக்கல் சேர்னிட்டுள்ளதும் ஆகையால் அல்பமாயிட்டும் வலுதாயிட்டும் உண்டாகுன்ன ஸங்கதிகளொக்கெயும் ஈ கோர்ட்டுகளில் தன்னெ விஸ்தரிச்சு தீர்ப்பாகுன்னதுகொண்டு குடிகளுடெ ஸங்கடத்தினு தீர்ச்சயில்லாதெ ஆயிரிக்குன்னது கொண்டாணீ, புதிய நியமம் உண்டாக்கியிரிக்குன்னதாயி காணுன்னது. அதுகொண்டு அல்பமாயிட்டு உண்டாகுன்ன ஸங்கதிகள் அதது மண்டபத்து வாதுக்கல் கோர்ட்டும் நிச்சயிச்சு ஆ கோர்ட்டில் வச்சு கார்யம் விஸ்தரிச்சு தீர்க்குன்னதினு தஹ்சீல்தாரெயும், ஒரு முனிசீப்பினெயும், பிள்ளமாரெயும் நிச்சயிச்சு அவ நடக்கேண்டும் ப்ரகாரத்தினு ஹுகுன்னமா

முதலாயதும் கொடுத்து ஆக்கியிரிக்குன்னு.'' 1010-ஆம் ஒன்றும் ரெகுலேஷன் பிறப்பிக்கப்பட்டது. அது அடியில் வருமாறு:—

"ஈ ஸம்ஸ்தானத்து சேர்ந்த ஓரோ மண்டபத்து வாதுக்கல் ஓரோரோ கோர்ட்டுகளும், முன்ஸீப்பன் மாரெயும நிச்சயிச்சு செறுவக அதாலத்துக் கார்யங்கள் நடத்தி வருன்னதினும், ஜனங்கள்க்கு வளரெ ஸஹாயவும் அத்வானக்குறவும் உள்ள ப்ரகாரம் காணுன்னதினல் ஆ முனிஸீப்பிண்டெ அதிகாரம் குறேக்கூடி ப்ரபலம் வருத்துவான் வேண்டி 1010-மது தனு மீ 18-உ க்கு 1835-மது டிசெம்பர் மீ 31-ம் உ நிச்சயிச்சு எழுதிய ரெகுலேஷன்''

இவ்வேற்பாடுகளால் ஜனங்களுக்கு அதிக அளவில் சௌகரியமும், பயனும் உண்டாயின. அடுத்த வருஷத்தில் ஹுஜூர்கோர்ட்டு எடுபட்டு அதற்கு பதிலாக ஒரு ஜில்லா கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட்டது. அப்பீல்கோர்ட்டைத் திருத்தி அமைத்து அதற்கு முதல் ஜட்ஜியாக பிரிட்டிஷ் இண்டியாவிலிருந்து ஒரு முனிசீப்பை வரவழைத்து நியமித்தார். சட்டங்களைத்தொகுத்து ஒரு புத்தகம் இயற்ற வேண்டிய அவசியத்தையுணர்ந்து அதை எழுதி முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அன்றுவரை நீதி நியாய விசாரணைகளெல்லாம் பண்டைய பழக்கங்களையும், தர்மசாஸ்திர விதிகளையும் அநுசரித்து தீர்ப்பு கொடுக்கப்பட்டன. மலபாரில் தஹஸீல்தாராகவிருந்த "இட்டிராரீச்சன் கண்டப்பன்'' என்பவரொருவரை, ரெஸிடெண்டு காஸா மேஜர் துரையின் சிபார்சின் பிரகாரம் ஹுஜூர்திவான்

பேஷ்காராக நியமித்தார்கள். இந்த நியமனம் 1010 வருஷத்தில் செய்யப்பட்டது. அவரைச் சாதாரணமாகக் "கண்டன் மேனோன்" என்றுதான் அழைப்பார்கள். அவருடன் ஆலோசித்து அபிப்பிராயங்களையறிந்து அரசியல் அலுவல்களை முடிவு செய்ய வேண்டுமென்பது மகாராஜாவின் விருப்பம். சட்ட நூல் எழுதி முடிப்பதில் கண்டன் மேனவனுடைய உழைப்பும், தொண்டும் இராஜ்ஜியத்திற்கு மிகவும் பயன்பட்டன. அந்நூலை இயற்றும் செயல் நன்றாக நடப்பதற்காக உயர்ந்த உத்தியோகஸ்தர்களடங்கிய ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அச்சங்கத்தின் மேற்பார்வையில் எழுதப்பட்ட நூல்தான் இவ்விராஜ்ஜியத்தில் முதன்முதல் வெளிவந்த சட்டநூல். இது கோட்டையம் மிஷன் அச்சுக் கூடத்தில் அச்சடிக்கப்பட்டது. சட்டவிஷயங்களில் இணையில்லாத தேர்ச்சியும், பரிசயமும்பெற்றிருந்த கண்டன் மேனவனுடைய தனி மேல் நோட்டத்தில் உண்டாக்கப்பட்ட அந்த சட்டத்தொகுதி இந்நாட்டிற்கு பெரும் அளவில் நன்மைபயத்தது. இச்சட்டங்களைச் செயலிலாக்க ஸாமர்த்தியமும், தகுதியும் உள்ள ஒரு உத்தியோகஸ்தன் வேண்டிவந்தது. அவ்விஷயத்திலும் கண்டன்மேனவன் உதவினார். மலபார் ஜில்லாவில் முனிசீப்பாயிருந்த 'பகவந்தராவு' என்பவரை வரவழைத்து அப்பீல்கோர்ட்டில் முதன் முதல் பிரதான நீதிபதியாக நியமித்தார்கள். மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரப்பொறுப்புகள் இதுவரையில் திவான்ஜியவர்களிடத்தில் நிலைக்கப்பட்டிருந்து, அவைகளையெல்லாம் திவான் பேஷ்காராகிய கணடன் மேனவனே

ஏற்று நடத்திவந்தார். போலீஸ், மாஜிஸ்ட்ரேட் இவைகளை சம்பந்தப்பட்ட விஷயங்களை கண்டன் மேனவன் சீர்திருத்தி சரிப்படுத்தினர். பகவந்தராயர் ஸிவில் கிரிமினல் சட்டப்பகுதிகளை முறைப்படுத்தினர். இக்காரியங்களிலெல்லாம் மகாராஜா எடுத்துக்கொண்ட சிரத்தையும், காண்பித்த ஊக்கமும் குறிப்பிடத்தக்கவை. அவருடைய நோக்கங்களை எல்லாம் வெற்றிபெறும்படி நடப்பில் கொண்டுவருவதில் திவான் ஸுப்பாராயரும் கடும் முயற்சியுடன் செயலாற்றினர்.

ஸங்கீதம், ஸாகித்தியம் முதலிய கலைகள், சாஸ்திர விசாரம், விநோத நிகழ்ச்சிகள், கல்வி வளர்ச்சி இவைகளில் அதிக கவனம் செலுத்தி அபிவிர்த்திப் படுத்துவதற்கு அக்காலம் மிகவும் சௌகரியமாக விருந்தது. ஆயினும், பிரஜைகளைப் பாதுகாத்து இரட்சிப்பதும், அரசாட்சியை செவ்வனே நடத்துவதும் தனது முக்கிய கடமையாகும் என்று மகாராஜாதிடமாக எண்ணியிருந்தார் இவைகளை நன்ருக நடத்தி பணியாற்றுவதில் அவர் ஒருகாலும் தயங்காமல் உழைத்தார். அவ்வப்போது வேண்டுவனசெய்து அரசாட்சியின் சிறப்பை அதிகரித்து வந்தார். 1009-ஞு தை மீ 6-உ சாஸ்திர விதியை யொட்டி ஹிரண்யகர்பதானம் செய்தார். குலசேகரப்பெருமாள் என்கிற பட்டப்பெயரையும் பெற்ருர். இவ்வகைக்கு 27236 பணம் செலவிடப்பட்டதாக கணக்குகள் இருக்கின்றன.

"தை மீ 6-உ சோதிதிருநாள் திருவவதாரம் செய்தருளிய திருப்பாப்பூர் கீழ்பேரூர் ஸ்ரீ பாலராம

வர்மராகிய சிறவாய மூத்த பண்டாரத்தினல் ஹிரண்ய கர்ப்பதானம் கழிந்து 'ஸ்ரீ பத்மநாபதாஸ பால ராமவர்ம குலசேகரப்பெருமாள் என்று இன்று முதல் திருநாமம்பெற்று விளங்கி'' தை மீ 7-உ படியேற்றம் நடந்ததில் ஒரு லக்ஷம் ரூபாய் செலவாயிற்றென்று பெரியகோயில் கணக்குகளில் காண்கின்றன.

சட்டசம்பந்தமான விஷயங்களை சீர்படுத்தியது போலவே, மகாராஜாவின் விருப்பத்திற்குக் கீழ்படிந்து, கண்டன்மேனவன் இந்நாட்டிற்கு மற்றொரு பேருதவியையும் புரிந்தார். இராஜ்ஜியத்தில் நிலங்களைப் பற்றிய குறிப்புக்கள் சரிப்படுத்தி திட்டப்படுத்தப்பட வேண்டுமென்று மகாராஜா நிச்சயித்தார். அவருடைய அரசாட்சி சமயத்தில் பிரஜைகளின் இன்பவாழ்க்கைக்காக அவசியமான காரியங்களையெல்லாம் செய்து தீர்க்கவும் தீர்மானித்தார் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தின் ஸ்தாபகராகிய வீரமார்த்தாண்ட வர்மரின் காலத்திலிருந்தே நிலச் சீர்திருத்த திட்டங்கள் ஒருவாறு வகுக்கப்பட்டிருந்தன ஆனல் அவைகளெல்லாம் ஒரே விதத்திலில்லாமல் வேறுபட்டிருந்தன தவிர, அக்காரியங்கள் முழுதும் முடிந்திருக்கவில்லை. 977-ஆண்டில், வேலுத்தம்பி தளவா அவர்கள் அவைகளை ஒருமாதிரியாகச் செய்து முடித்திருந்தார். அதை சீர்படுத்தி அமைத்துச்சரியான நிலைக்குக் கொண்டு வரவேண்டியதென்று மகாராஜா தீர்மானித்தார். அதற்காக, 1012-ஆண்டு தனு மீ 13-உ ஒரு விளம்பரமும் பிரசித்தப்படுத்தப்பட்டது. நிலச்சீர்திருத்தம் தாமதமில்லா

மல் ஒழுங்கான முறையில் நடத்துவதற்கு வேண்டிய செயல்களைப் பற்றிக் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அவ்விளம்பரத்தில் குறிக்கப்பட்டிருந்தன. அதை அனுசரித்து ராஜ்ஜியம் முழுதும் உள்ள நிலங்களையெல்லாம் 1012--1013-ஆங்களில் அளந்து கணக்குகளும் குறிப்புக்களும் எழுதித் தீர்க்கப்பட்டன. 1014-ஆண்டில் கணக்குகளையும் குறிப்புக்களையும் ஒத்துப்பார்த்து, பிழைகளைத் திருத்தித் தெளிவாக்கிப் பதிப்புகள் தயாராக்கப்பட்டன. நில உரிமைத்தர்க்கங்களையும், விவகார வழக்குகளையும் கேட்டுவிசாரணை செய்துத் தீர்ப்புக் கொடுப்பதற்கு மேற்கூறிய குறிப்புக்கள் மிகவும் உதவின. அவைகள் இக்காலத்தில் கூட நிலவிலிருந்து வருகின்றன. இக்குறிப்புக்களை திருவனந்தபுரத்தில் சர்க்கார் வகை மத்திய ரிக்கார்டு ஆபீஸில் வைத்திருக்கிறார்கள். நிலங்களைப்பற்றிய பத்திரங்களும், தஸ்தா வேஜுகளும் தயார் செய்யும் விஷயத்திலும், நிலங்களை பிழையில்லாமல் அளக்கும் காரியத்திலும், கண்டன் மேனவன் வெளிப்படுத்திய திறமையை மகாராஜா மிகவும் மெச்சி நன்றி பாராட்டினார். ரெஸிடெண்டும் மிக்க மகிழ்ச்சி கொண்டார். தான் நினைத்த ஓர் பெரிய காரியத்தைச் செய்து முடித்ததில் மகாராஜாவுக்கு வெகு திருப்தி. ஆனால் கண்டன் மேனவனுடைய அபார சாமர்த்தியத்தில் திவானுக்குப் பொறாமை மேலிட்டது. மகாராஜாவுக்கும், ரெஸிடெண்டுக்கும், பொதுமக்களுக்கும் கண்டன் மேனவனின்பால் உண்டாகிய நன்மதிப்பும், அன்பும், தன்னுடைய வீழ்ச்சிக்குக் காரணமாகக் கூடும் என்று

திவான் ஸுப்பராயர் சந்தேகித்தார். திவான் பேஷ்கார் கொச்சு சங்கரபிள்ளையுடன் சேர்ந்து கண்டன் மேனவனுடைய செல்வாக்கைக் குலைக்க எண்ணங்கொண்டு, ஸுப்பராயர் செய்த சதியாலோசனைகள் பலிக்காமல் போயின. மகாராஜாவுக்குத் தீராத்துயரத்தையும், ஸுப்பராயருக்கு அளவிலாத மனச்சந்துஷ்டியையும் உண்டாக்கி விட்டுக் கண்டன் மேனவன் நோய்வாய்ப்பட்டு பரலோகப்ராப்தியடைந்துவிட்டார். மகாராஜாவின் ஒரே ஒரு சகோதரி ஆயில்லியம் திருநாள் ருக்மணீபாயியின் ஐந்தாம் புதல்வனுகிய பூராடம் திருநாள் மார்த்தாண்டவர்ம இளைய தம்பிரான் 1012-வரு இடவ மீ 3-உயன்று நான்காவது வயதில் இறந்து போய்விட்டார். இச்சம்பவம் நடந்து சில நாட்கள் கழிந்ததும் ருக்மணீபாயி தம்புராட்டி ஏழாம் பிரசவம் கழிந்த இரண்டு மாதத்திற்குள் சுவர்க்கலோகத்திற்குப் போய்விட்டாள். (1012-12-13) இச்சம்பவங்களினுல் பெரும் துன்பக் கடலில் ஆழ்ந்திருந்த மகாராஜாவின் மனது, நிலை குலைந்தது. இதற்கும் மேலாகத் தனக்கு மிகவும் வேண்டியவராகிய கண்டன் மேனவனின் பிரிவு, அவருடைய துயரத்தைப்பன் மடங்கு அதிகரித்தது. இத்துடன், ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் அரசாட்சியில் உயரியநிலை அதோடு தடைபட்டுவிட்டது. மன்னரின் அரசாட்சியில் நடத்தப்பட்ட மிகப் பிரதானமாகிய சீர்திருத்தங்களெல்லாம் அரசாட்சியின் முதல் பகுதியில்தான் நடந்தேறியன என்பதை மறந்து விடக்கூடாது. 1012-ம் வருஷம் முடியும் வரையில் நடந்த அரசாட்

சியின் வரலாறுகளினல் மேற் கூறியது தெளி வாகும்.

தன்னுடைய வெற்றி நிறைந்த அரசாட்சி யின் ஆரம்பக் கட்டத்தில் பிரஜைகளின் நன் மைக்கும், ராஜ்ஜியத்தின் அபிவிர்த்திக்கும் பல நற்காரியங்களை மகாராஜா செய்து முடித்தார். அவருக்கு ஆங்கில மொழியின் பால் பெரு விருப்ப மிருந்ததென்பது தெரிந்த விஷயமே. ஆங்கில அரசாட்சி பாரத நாடெங்கும் பரவி வந்துக்கொண் டிருந்ததனல் ஆங்கிலப் படிப்பு இந்நாட்டிலும் வளர வேண்டியதவசியமென்று அவர் நிச்சயித்தார். ராபர்ட்டு துரையென்பவரொருவர் அப்பொழுது நாகர்கோவிலில் ஆங்கிலப் பள்ளிக்கூடமொன்றை நடத்திக்கொண்டிருந்தார். அவரைத் திருவனந்த புரத்திற்கு வரவழைத்து, பிள்ளைகளுக்கு இலவச மாக ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஒரு பள்ளிக் கூடம் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வஞ்சி யூர் அதிகாரத்தில் புத்தன்சந்தையில் ஆங்கிலப் பள்ளிக்கூடம் வைப்பதற்கு ஒரு கட்டிடம் கட்ட, சர்க்காரால் நிலம் விலைக்கு வாங்க 1010 ஞு விருச் சிக மீ 6-உ உத்தரவாயிற்று.

ராபர்ட்டு துரைக்கு முதன் முதல் 100-ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. 1012-ஞுத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தை சர்க்கார் வகையாக நடத்தவா ரம்பித்து, இலவசக் கல்லூரியாக அமைத்தார்கள். துரையின் சம்பளம் ரூபாய் இருநூருக உயர்த்தப் பட்டது. ரெஸிடெண்ட் ப்ரேஸர் துரையின் அபிப் பிராயத்திற்கிணங்கி, இப்பள்ளிக் கூடத்துடன்,

நாட்டின் பலபாகங்களிலும் ஆங்கிலப்பள்ளிக் கூடங்கள் நிறுவப்பட்டன. திருவனந்தபுரத்தில் நிலைத்து வளர்ந்து வந்த ஆங்கிலப் பள்ளிக்கூடம் நாளடைவில் மகாராஜா அவர்களின் காலேஜாக உயர்ந்தது. தற்காலத்தில், ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகாராஜாவின் ஆதரவினால் அது திருவிதாங்கூர் ஸர்வகலா சாலையாக வளர்ந்து உச்ச நிலைக்கு வந்திருக்கிறது. இவைகளை எல்லாம் பார்க்கும்போது இந்தியா முழுதும் கல்வித்துறையில் முன்னணியில் நின்று ஓர் சிறந்த மேற்கோளாகி விளங்கும் இந்நாட்டிற்கு, அப்படிப்பட்ட உயரிய நிலையையடையும் உரிமையை முதன் முதல் இந்நாட்டிற்கு உண்டாக்கித் தந்தவர் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாதான் என்பதற் கையமில்லை.

இக்காலங்களில் நாட்டிற்கெல்லாம் பேரருளாகத் தீர்ந்திருக்கும் வேறொரு அவசியமான சீர்திருத்தமும் ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் காலத்தில் தொடங்கப்பட்டது. அது மேல் நாட்டு முறை வைத்திய சௌகரியம். இப்பொழுது இவ்வித சிகித்சைமுறை நாட்டு மக்கட்கு இன்றியமையாததாக விருக்கிறது. பல நல்ல ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. இந்நாட்டில் முதன் முதலாக உண்டாயிருந்த ஆஸ்பத்திரி, திருவனந்தபுரத்தில் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவினால் ஸ்தாபிக்கப்பட்ட தரும ஆஸ்பத்திரிதான்.

அரண்மனையில் வைத்தியம் பார்ப்பதற்காக ஒரு டாக்டரை நியமித்ததுடன், மேல்நாட்டு வைத்

திய முறையின் சிறப்பு மகாராஜாவுக்குத் தெளிவா யிற்று அவ்வனுபவத்தை மனதில் வைத்து, பிரஜை களின் நலனேயே முக்கிய நோக்கமாகக்கொண்டு மேற் கூறப்பட்ட இலவச ஆஸ்பத்திரியை ஸ்தாபிக்க மகாராஜா உத்தரவு கொடுத்தார். 1016-ம் வருஷத் தில், நாகர்கோவிலில் ஒரு தரும ஆஸ்பத்திரியை நிலைப்பதற்காக பாதிரி மீட்துரையவர்கள் மனுக் கொடுத்தார். அதற்கிணங்கி மகாராஜா அவ்வாஸ் பத்திரியைத்திறக்க உத்தரவு கொடுத்தார். அதே வருஷத்தில் ஆலப்புழையில் ஏழைகளுக்காக ஏற்ப டுத்தியிருந்த ஆஸ்பத்திரியின் செலவுக்காக ரூ. 100 அதிகமாகக்கொடுக்கப்பட்டது. 1018-ஷ த்தில் தைக்காட்டு ஆஸ்பத்திரியின் கட்டிட வேலை தீர்ந்து அதிக அளவில் வேலையாட்கள் நியமிக்கப்பட்டதா கவும் தெரிகிறது. மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்கறிந்த மகாராஜா ஒரு மராமத்து (Engineering) வகுப்பையும் ஏற்படுத்த நிச்சயித்தார். லெப்டெ னண்டு ஹார்ஸ்லீ என்கிற பிரபல எஞ்சினீயர் ஒரு வரை 4698 பணம் மாதச் சம்பளத்தில் மராமத்து காரியங்களை மேற்பாற்வை பார்க்க நியமித்தார்கள். கரமனைப்பாலம் அப்பொழுது கட்டப்பட்ட பாலங்க ளிலெல்லாம் முக்கியமானது நாஞ்சில் நாட்டு வேளாண்மைக்கு உதவும்படியாக ஒரு நீர்ப்பாசன வகுப்பும் வகுக்கப்பட்டது அரண்மனைக் கட்டிடங் களையும், கோவில்களையும் பழுதுபார்க்கத் தனி உத் தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதே சம யத்தில் வேறொரு நிலையம், அதாவது ஓர் நக்ஷத்திர சாலை (**Astronomical Observatory**) திருவனந்த

புரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. மகாராஜாவுக்கு வான சாஸ்திரத்திலும், சோதிடத்திலும் நல்ல பயிர்ச்சியுண்டு. 1011-ஆண்டில் ஆலப்புழைக்கு அவர் விஜயம் செய்தபோது, அங்கு வியாபார ஏஜண்டாகவிருந்த கால்டு காட்டு துரையின் வசமிருந்த வானசாஸ்திர இயந்திரங்களை அவர் பார்க்க நேர்ந்தது. அக்கருவிகளைப் பார்த்ததும் அவருக்கு வானசாஸ்திரத்தில் மிக்க விருப்பமுண்டாயிற்று. அதைத் தொடர்ந்து 1012-ஆண்டில் தலைநகரில் மேற்கூறிய நக்ஷத்திர சாலையை ஸ்தாபித்து அதற்கு மேலதிகாரியாய், கால்டுகாட்டு துரையை, "அரசாங்கவான சாஸ்திரி" என்கிற உத்தியோகப் பெயருடன் நியமித்தார். இந்த துரை முகாந்திரம் ஒரு தியோடோலைட்டும் (நிலம் அளக்க உதவும் இயந்திரம்), இரண்டு டெலெஸ்கோப்புகளும் (தூரதரிசிக்கண்ணாடி) வாங்கியதாக 1013-வருஷத்திய கணக்குகளில் குறிப்பிருக்கிறது. இந்த நிலையத்தின் உபயோகத்திற்காகவே ஒரு அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. இதுதான் திருவிதாங்கூர் சர்க்கார் அச்சுக்கூடத்தின் ஆரம்பம். அந்நிலையத்தில் முதன் முதலாக அச்சடித்து வெளிவந்த நூல் 1015-வருஷத்திய பஞ்சாங்கம்.

வியாபாரத்துறையில் சௌகரியங்களை அதிகரிப்பதிலும் மகாராஜா பெரும் உற்சாகம் கொண்டார். 1011-ஆண்டில் 165 இனம் பொருள்களின் தீர்வைகள் குறைக்கப்பட்டன. இச்செயல் மேலதிகாரிகளாகிய ஆங்கில அரசாங்கத்திற்கு அதிக திருப்தியையளித்தது. இதைப்போலுள்ள பல நன்மைபயக்கும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர மகாராஜா மிக

ஊக்கம் கொண்டார். 1012-ஆண்டு த்திலேயே ராஜ்ஜி யத்தின் ஜனத்தொகைக் கணக்கு ஒன்று எடுக்கப் பட்டது. அதின் மூலியமாய் நாட்டில் அன்றைய ஜனத்தொகை 12 80 668 ஆகும். குற்றம் செய்த பெண்களை தலைமொட்டையடித்து நாடு கடத்திவிடும் துர்வழக்கத்தை மகாராஜா ஒழித்துவிட்டார் நல்வழி தவறிய நம்பூதிரி ஸ்தீரிகளைச் சுசீந்திரத்திற்குக் கொண்டு வந்து கொதிக்கும் நெய்யில் கையை யமிழ்த்தி சத்திய சோதனை செய்வது என்கிற கொடூரமான பழக்கத்தையும் மகாராஜா நிறுத்தி விட்டார் இவ்விதமாய்ப் பல சௌகரியங்களையும், நன்மைகளையும், சீர்திருத்தங்களையும் செய்து கொடுத்து பொது நலத்தை வளர்ப்பதற்கு மகா ராஜா கடும் உழைப்பு உழைத்து முழு வெற்றியடைந்தார்.

## 5. இடையூறுகள்.

இராஜ்ஜியத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் முழுமனதுடன் உழைத்து வந்த மகாராஜாவின் ஆட்சி 1012-ஆண்டுத்திற்குப் பிறகு ஓர் புதிய நிலையையடைந்தது. அவருடைய குருவும், நம்பிக்கைக்குகந்த திவானுகவும் இருந்த ஸுப்பாராயர் தன் பதவியை ராஜிநாமா செய்தது முதல் ராஜ்ஜியத்தின் போக்கு மாறுதலடையவாரம்பித்தது. அது முதல், உத்தேசம் பத்து வருஷ காலம் நீண்டு நின்ற அந்த சிக்கலான நிலை, பல துன்பங்களால் மகாராஜாவின் மன நிலையையும், அமைதியையும் குலைத்துப் பாழாக்கத் தொடங்கியது. அடிக்கடி

திவான்கள் மாறுவதும், பிரிடிஷ் ரெஸிடெண்டுடன் ஏற்பட்டுக்கொண்டிருந்த சச்சரவுகளும், ரெஸிடெண்டின் காதைக் கடித்துக் கோள் சொல்பவர்களுடைய சதிகளும், மகாராஜாவுக்குக் கடும் துன்பத்தைத் தந்து மனதை அலட்டின. இடைஞ்சல்கள் நிறைந்த அக்காலத்தில் அரசியல் துறையில் பெரும் செயல்கள் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. இவ்விடைஞ்சல்களிலிருந்து ஒழிந்து, முன்னைக் காட்டிலும் தீவிரமாகக் கலைப்பயிற்சியிலும் கடவுள் தொண்டிலும் மனதைச் செலுத்தி, தனியாக ஒதுங்கிவிட்டார். இவைகளைப் பற்றிய வரலாறுகள் எவ்வாறென்று பார்ப்போம்.

கண்டன் மேனவனுடைய மறைவு நாட்டில் பல வித அவதூறுகளுக்கும் சமிசயங்களுக்கும் ஏதுவாயிற்று. திவான் ஸுப்பராயரால் செய்விக்கப்பட்ட செய்வினைதான் கண்டன் மேனவனுடைய மரணத்திற்கு காரணம் என்று பலரும் சொல்லிக்கொண்டார்கள். திவான் ஸுப்பராயர், திவான் பேஷ்கார் கொச்சுசங்கரப்பிள்ளை, ஜட்ஜி நாராயணன் கேசவன் இவர்களைப்பற்றியெல்லாம் குற்றமான செய்திகள் மகாராஜாவுக்கு எட்டிக்கொண்டிருந்தன. லஞ்சம், அதிகார துர்வினியோகம் இவைகளிலெல்லாம் கடும் துவேஷம் கொண்டிருந்த மகாராஜாவுக்கு, இக்குற்றங்களைப் பொறுத்து மன்னித்துவிட மனம் சற்றும் இணங்கவில்லை மிகவும் நம்பிக்கையுடன் மதித்திருந்த தன் குருவும் திவானுமாகிய ஸுப்பாராயரே லஞ்சத்திற்கு ஆளாகிவிட்டார் என்று கேட்டதும் மகாராஜா அடைந்த அயாத்

திற்கு அளவில்லை. "பாம்பு கடித்த விரலையும், அயோக்கியனுகிய நண்பனையும் அறவே விட்டொழிக்க வேண்டியதுதான் கடமை" என்கிற காளிதாஸ கவியின் வாக்குகளின் கருத்தை அவர் நன்குணர்ந்திருந்தார் அரசியலில் முக்கியப் பொறுப்புப்பெற்றிருந்த ஸுப்பராயரே பேராசை கொண்டு அநீதிகளுக்குட்பட்ட பிறகு, அவர் நம்பிக்கைக்குரியவரல்லவென்று தீர்மானித்து, அவரையும், திவான் பேஷ்கார் கொச்சு சங்கரப்பிள்ளையையும், உத்தியோகத்திலிருந்து ஸஸ்பெண்டு செய்து விட்டார். அப்பீல்கோர்ட்டு ஒன்றும் ஜட்ஜியாயிருந்த நாராயணன் கேசவன் என்பவரை ஏற்கெனவே உத்தியோகத்திலிருந்து விலக்கிவிட்டிருந்தார். குற்றம் சுமத்தப்பட்ட இம்மூன்று உத்தியோகஸ்தர்களின் செயல்களைப்பற்றி விசாரணை செய்து தீர்ப்புக் கொடுப்பதற்காக இரண்டு யூரோப்பியர்களும், இரண்டு சுதேசிகளும் கொண்ட ஒரு கம்மிட்டி நியமிக்கப்பட்டது. கம்மிட்டியின் தலைவர் காட்டிலாகா கன்ஸர்வேட்டராயிருந்தவரும், பழைய ரெஸிடெண்டு கர்னல் மன்ரோ துரையின் குமாரருமாகிய மி. மன்ரோ துரைதான். விசாரணை முடிய இரண்டு மாதமாயிற்று. விசாரணைக்குட்பட்டவர்கள் குற்றவாளிகளல்லவென்று தீர்ப்பாயிற்று. இத்தீர்ப்பு மகாராஜாவுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஸஸ்பெண்டு செய்யப்பட்டிருந்த ஜட்ஜியும், திவான் பேஷ்காரும் ஸ்திரமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஸுப்பராயர் வேலையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவருக்கு

மாதம் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் உதவிச் சம்பளம் விதித்துக் கொடுக்கப்பட்டது. (1013-ஆடு துலாம் மீ 3உ ய ராஜ சாஸனம்).

திவான் பேஷ்காராகவிருந்த ரங்கராயரை ஸுப்பராயருக்கு பதிலாக தற்கால திவானாக நிய மித்தார்கள். இவர் ஆயில்லியம் திருநாள் மகாரா ஜாவின் காலத்தில் திவானாகவிருந்து பெரும் புகழ் பெற்ற ஸர் டி. மாதவராவின் தகப்பனார். முன்பு திவானாகவிருந்த வெங்கடராயரின் தம்பியும் ஆவார். ரங்கராயரின் அதிகாரம் சொல்ப காலத்திற்குத் தான் நிலைத்திருந்தது. ஆனாலும் அச்சிறுகால அளவில் அவர் ராஜ்ஜியத்திற்காக நன்றாக உழைத் தார். முன்பு திவானாயிருந்த வெங்கடராயரை யே மீண்டும் அப்பதவிக்குக் கொண்டு வரவேண்டும் என்று மகாராஜா விருப்பம் கொண்டார். இளைய மகாராஜா மார்த்தாண்டவர்மரும் இதை ஆமோதித் தார். அதன் மேல், மகாராஜாவின் கட்டளைப்படி இளைய மகாராஜா, வெங்கடராயருக்குக் கடிதம் எழுதியனுப்பினார். வெங்கடராயரும் திரும்பவும் திவானாக வருவதற்குச் சம்மதித்தார். மகாராஜாவும் தன்னுடைய சொந்த ஆளாகிய வைக்கத்து குஞ் சன் தம்பானை, கும்பகோணத்தில் வசித்து வந்த வெங்கடராயரிடம் அனுப்பிவைத்தார். வெங்கட ராயர் 10 3 ஆடு திருவனந்தபுரத்திற்கு வந்து பதவி யேற்றுக்கொண்டார். திறமை வாய்ந்த ராயருடைய திடமான செயல்கள் மகாராஜாவுக்குத் திருப்தியளித் தன. ஆனால் ரெஸிடெண்டாயிருந்த காப்டன் டக் லஸ் துரைக்கும், திவான் வெங்கடராயருக்கும் வெகு

சீக்கிரத்திலேயே மனஸ்தாபங்கள் உண்டாயின. ரெஸிடெண்டுடன் ஒத்துப்போய் நட்புடன் நடந்து கொள்வது சாத்தியமில்லை என்று வெகு சீக்கிரத்தில் உணர்ந்து, ராயர் ஒரு வருஷம் மாத்திரம் உத்தியோகத்திலிருந்து விட்டு, விலகிக்கொண்டு மறுபடியும் கும்பகோணத்திற்கே போய்விட்டார் அதற்குப் பிறகு இந்த ஸ்தானத்திற்குத் தகுதி வாய்ந்த வேறொருவரைக் கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. வெங்கடராயர் திவானாக வந்தபோது, அவருடைய தம்பியும் தற்கால திவானாகவிருந்தவருமாகிய ரங்கராயர் உத்தியோகத்தை விட்டு விலகியிருந்தார். மகாராஜாவுக்கு சம்மதமாகிய உத்தியோகஸ்தர்கள் எவரும் அப்பொழுது நாட்டிலிருக்கவில்லை. அதற்காகவே, பழைய திவான் ஸுப்பராயரையே மீண்டும் கூப்பிட மகாராஜா தீர்மானித்தார் அதன்படியே திரும்பவும் வந்து திவான் உத்தியோகத்தில் பிரவேசிக்கும்படி ஸுப்பாராயருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஸுப்பராயருக்குக் கடந்துபோன பழைய விஷயங்களைக் குறித்து மனதில் யாதொரு அருவருப்பும் இருக்கவில்லை. முன்னைக் காட்டிலும் அதிக பிரீதியுடன் பதவி ஏற்றதுவுமல்லாமல், மகாராஜாவின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற முயன்று வெற்றியடைந்தார். மகாராஜாவுக்கும் ஸுப்பராயரிடத்தில் மிக திருப்தியும் சந்தோஷமும் உண்டாயின. முன் காலங்களில் ஸுப்பராயரிடத்தில் தனக்குண்டாயிருந்த வெறுப்பு முழுதும் ஒழிந்துவிட்டதென்று வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டுமென்று மகாராஜா விரும்பி, 1015-ஆம் ஒரு

MADURAI UNIVERSITY LIBRARY

விசேஷ விளம்பரம் பிரஸித்தப்படுத்தி, திவானு டைய அதிகாரத்தை அதிகரித்தார். அதற்குப் பிறகு, திவான் ஒருவர் தவிர வேறு எந்த உத்தி யோகஸ்தனும் மன்னருடன் எழுத்து மூலியமாய் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. எல்லாம் திவான் மூலியமாகத்தான் மகாராஜாவுக்கு அனுப் பப்பட வேண்டியதென்று உத்தரவாயிற்று. இத ணல் திவானுடைய பொறுப்பு அதிகமாயிற்று. அவ ருடைய அந்தஸ்தும், அதிகாரமும் உயர்ந்து அர சாங்க அமைப்பு கெட்டிப்பட்டது. இதைப் பற்றிய ராஜசாஸனம் இவ்வாறு:—

"நீட்டு—கொடுத்துட்ட ஸாதனவும், வாயிச்சு கேட்டவஸ்தையும் அறிஞ்சு. ஈ ராஜ்யத்து எல்லா கார்யங்கள்க்கும் ஹஜூர் கச்சேரியில் நின்னும் ஒரு வழியாயிட்டு எழுத்துக் கொடுத்தயச்சு நடன்னு வந்ததிண்டெ சேஷம், மும்பில் கொல்லத்து கச்சேரி யாயிரிக்கும்போள் நடன்னுவன்ன மாதிரிபோலெ சில நடப்புகள் உண்டாக்கணமென்னு விசாரிச்சு 1006-ஆடு முதல்க்குள்ள நடப்புகள்க்கு விரோதமா யிட்டும் மற்றும் 1013-ம் ஆண்டு இடவ மீ 15-உ எழுதியயச்ச ஸாதனம் வந்ததின்மண்ணம், தேவஸ் வம், ஊட்டு, சௌக்கி, கலால், போலீஸ் முதலாய வகையிலும், முளகு, புகையில, உப்பு சோதன உள் பெட்டவகையிலும் பதிவுபோலெ நடப்பானுள்ள காரியங்கள் அதுவரையில் உள்ள உத்தியோகஸ் தன்மார்க்கு திவான் பேஷ்காருடெயவும், முளகு மடிச்சீல ஸர்வாதிக்கார்யக்காரண்டெயும் எழுத்து கள் கொடுத்தயச்சும், விசேஷால் உள்ள காரியங்

கள்க்கு திவானே போதிப்பிச்சு எழுதிக் கொடுத்த யச்சு நடக்கத்தக்கவண்ணம் சட்டம் கெட்டி நடன்னு வருன்னப்ரகாரவும், இதின் மண்ணம் பல வழியாயிட்டு எழுத்துக் கொடுத்தயக்க என்னுவச்சால் அழிமதிக்கும் ஆவலாதிக்கும் இடவருன்னதும் ஆயது நிறுத்தி எல்லா வகய்க்கும் ஹுஜூர்கச்சேரியில் நின்னுதன்னே எழுத்து கொடுத்தயச்சு நடத்திப்பான் ஒள்ளதுமாக கொண்டு அப்ரகாரம் நிதானம் வரணமென்னும் எழுதிவன்னதிலாகுன்னு. அதின்மண்ணம் தன்னே ஈவகய்க்கு 1013-வருஷ இடவ மீ 15-உ முதல்க்கு வச்சிரிக்குன்ன சட்டம் நிறுத்தி 1006-வருஷ முதல் நடன்னுவன்னதுபோலெ எல்லா காரியங்கள்க்கும் திவான்டெ எழுத்தாயிட்டு தன்னே கொடுத்தயக்கத்தக்க வண்ணம் நிதானம் வருத்திக்கொள்ளுகையும் வேணம் என்னும் இக்காரியம் சொல்லி 1015-ஆண்டு கன்னி மீ 9-உ திவான் சேஷா பண்டிதர் ஸுப்பராயர்க்கு நீட்டு எழுதிவிட்டு—என்னு திருவுள்ளமாய நீட்டு.

(ராஜமுத்திரை)"

நமபிக்கைக்குகந்தவனுயும், சத்திய சந்தனுகவும் இருக்கும் ஒரு புத்திசாலியை திவானுக நியமித்தால், தன் சொந்த அலுவல்களைக் கவனிப்பதற்குச் சற்று அதிக சமயம் கிடைக்குமென்றெண்ணி, மேற்கூறிய ஏற்பாடுகளை மகாராஜா செய்தார். 1012-ஆண்டிற்குப் பிறகு இராஜ்ஜியத்தில் வெகு சிறிய காரியங்களையும் கூட அவரே கவனிக்கவேண்டி நேர்ந்து மிகவும் சிரமப்பட்டார். அதனுல் தான் கலைப் பயிர்ச்சி கல்விப்பயிர்ச்சி இவைகளுக்குப் போதிய

அளவு அவகாசம் கிடைப்பது அரிதாயிற்று. ஆயினும் அத்துறைகளில் மகாராஜாவின் ஊக்கம் குறையவில்லை. வளர்ந்துக்கொண்டே வந்தது. கூடியமட்டில் அதிக நேரம் அச்செயல்களில் ஈடுபட்டுவந்தார். அவருடைய புகழ் எங்கும் பரவிற்று. சீனம் முதலிய வெளி நாடுகளிலிருந்தும், பாரதத்தில் காசி, வங்கம், தஞ்சை, ஸ்ரீரங்கம், மைசூர், ஹைதராபாத், காளஹஸ்தி, கும்பகோணம் முதலிய இடங்களிலிருந்தும் பல வித்துவான்களும், பாடகர்களும், கலைவல்லுனர்களும், மகாராஜாவின் பேராதரவைப் பெற, வந்து, இங்குவசிக்கவாரம்பித்தார்கள். ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி தரிசனத்திற்காக வெளியூர்களிலிருந்து வரும் யாத்திரீகர்களுக்கு விஷயங்களைத் தெளிவாகக் கூறுவதற்கு 1013-ஆண்டு விருச்சிக மீ 6-உயில் ஓர் தகுந்த ஆளை நியமித்ததிலிருந்து அக்காலத்தில் வெளியூர்களிலிருந்து பல பேர்கள் வந்துக்கொண்டிருந்தார்கள் என்பது தெளிவு. இதைப் பற்றி விவரங்கள் பிறகு கூறப்படும். புலவர்கள், கலைஞர்கள் முதலியவர்களுடைய தொடர்பு தனக்கு அதிகமாய் வேண்டியதென்றும், அவர்களை நன்கு ஆதரிக்க வேண்டுமென்றும் மகாராஜாவுக்கு மிகுந்த ஆர்வமிருந்தது. ஆனால் அதை நிறவேற்றும்படி செய்துக்கொள்ள அவருக்குச் சாத்தியப்படவில்லை. அரசாட்சி, முன்பைக் காட்டிலும் அதிக இடைஞ்சல்களுக்குள்ப்பட்டது. ராஜ்யகாரியங்களைத் தானாகவே கவனித்துப் பார்த்துக்கொள்வார் என்று மகாராஜா எண்ணியிருந்தும், ஸுப்

ராயருக்குத் தன் உத்தியோகத்தின் பொறுப்பை நிர்வகிப்பதே மிகக் கடினமாகவிருந்தது.

தன்பால் மகாராஜா காட்டிய அன்பின் காரணமாய், முன்னிருந்ததைக் காட்டிலும் அதிக ஊக்கத்துடன் ராஜ்யகாரியங்களை ஸுப்பராயர் கவனித்து வந்தார். செயலாற்றுவதில் கண்டிப்பாகவும் பாரபட்சமின்றியும் நடந்துக் கொண்டார். அக்காலத்தில் அரண்மனையில் சில முக்கியமான விசேஷச் சடங்குகளை நடத்தவேண்டியிருந்ததால், அவைகளை செவ்வனே நடத்தி மகாராஜாவுக்குத் திருப்தியளித்தார் பூராடம் திருநாள் லக்ஷ்மிபாயி ராஜகுமாரிக்கு 1015-ஆண்டு சித்திரை மீ 23-உ ஸகல விபவங்களுடன் விவாகம் நடத்தப்பட்டது. இவ்விளவரசி, மகாராஜாவின் மூத்த சகோதரி ருக்மணீபாயியின் மகள். 1015 ஆண்டு மகர மீ 22-உ யன்று திலபர்வததானம் நடத்தப்பட்டது. அப்பொழுது, மகாராஜாவின் கட்டளைப் பிரகாரம் புத்தன்மாளிகை அரண்மனையின் கட்டிட வேலையும் ஆரம்பமாயிற்று. இம்மாளிகையின் கிரகப்பிரவேசம் 1021 ஆண்டு ஐப்பசி மீ 8-உ யன்று நடந்ததைக் குறிப்பிட வேண்டியது. சில வருஷங்களுக்கு முன் "ரங்கவிலாஸம்" அரண்மனை கட்டப்பட்ட விஷயத்தையும் இச்சமயத்தில் நினைக்க வேண்டியது. இவ்வரண்மனையில் கிரகப்பிரவேசத்தின் சம்பந்தமாய் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி ஸன்னிதியில் விலையுயர்ந்த பல பொருள்களைக் காணிக்கையாகச் சமர்ப்பித்ததாய் 1013 ஆண்டு ஆனி மாதத்திய கோயில் கணக்கு இருக்கிறது.

அரசியலை சீர்படுத்த வேண்டிய செயல்களை யெல்லாம் செய்துக் கொண்டு வந்தும், தவிர்க்க முடியாத பல இடைஞ்சல்களும் இருந்துக் கொண்டிருப்பதை ஸுப்பராயர் வெகு சீக்கிரத்திலேயே கண்டு கொண்டுவிட்டார். காப்டன் டக்லஸ் உத்தியோகத்தை விட்டு கல்லன் துரை ரெஸிடெண்டாக வந்திருந்தார் இது கி. பி 1840 வருஷத்திலாகும். பரம்பரையாக வந்திருந்த பழக்கத்தையொட்டி கல்லன் துரைக்கும் அடிமையாளாய் ஒரு பரதேசப் பிராம்மணர் இருந்தார். இவர் தெலுங்கு தேசத்தில் மச்சலீபட்டணத்தைச் சேர்ந்த கிருஷ்ணராயர் என்பவர். இவர் கல்லன் துரை சென்னையிலிருக்கும் போதே அவருடன் அதிகப் பழக்கமுள்ளவர். ஆங்கில மொழியில் வெகு சாமான்னியமான பரிசயம் மாத்திரம் இருந்தபோதிலும், துரையைத் தன் கைக்குள் போட்டுக்கொள்வதற்குப் போதிய சாமர்த்தியமிருந்தது. திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திற்கு வந்ததோடு ராஜ்ஜியத்தின் மந்திரி பதவியை எவ்விதத்திலாவது கைப்பற்றிவிட வேண்டிய நோக்கம் கொண்டார் அவர். அது சாத்யமாவதற்கு, தன்பால் ரெஸிடெண்டு அன்புடனிருப்பதனல் உண்டாயிருந்த செல்வாக்கை முழுதும் பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்டார் கிருஷ்ணராயருடைய இப்படிப்பட்ட துராசையானது மகாராஜாவின் மிகுதி வாழ்நாட்களைத் துன்பம் நிறைந்தவைகளாக ஆக்கியது. தவிர, ஜனரல் கல்லனுக்கு சுயேச்சாதிகாரி என்கிற கெட்ட பெயரையும் உண்டாக்கித்தந்தது.

கல்லன் துரையும் மகாராஜாவும் முதன் முதல் சந்தித்த பொழுது துரைக்கு மகாராஜாவிடம் பெரும் மதிப்பும் கௌரவமும் உண்டாயின. மகாராஜாவின் ஆங்கிலப் பேச்சின் அழகும், நடையும் துரையை வியக்கச் செய்தன. மன்னரின் கல்வித் திறமையும், இலக்கிய உற்சாகமும் துரைக்கு சந்தோஷத்தைத் தந்தன. மேல்நாட்டுக் கலைகள், சாகித்தியங்கள் இவைகளின் விஷயத்தில் மகாராஜா வெளிப்படுத்திய ஊக்கமும், உற்சாகமும் துரையை மேன் மேலும் ஆச்சரியத்திற்காளாக்கின. இராஜ்ஜியத்தில் மேல்நாட்டு முறைகளில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தி நன்மை அதிகரிக்க, வேண்டிய உதவிகளைத்தான் செய்வதாக துரை வாக்களித்தார். இது மகாராஜாவுக்கு பெரும் திருப்தியளித்தது. ரெஸிடெண்டு துரையை பிரீதிப்படுத்துவதற்காக, அவருக்கு வேண்டப்பட்ட ஆளாகிய கிருஷ்ணராயரை திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் தகுந்த உத்தியோகம் ஏற்படுத்திக் கொடுக்க, மகாராஜா எண்ணங்கொண்டார். அம்மாதிரி ஓர் உத்தியோகம் தற்காலத்தில் இல்லாததனால் ஹஜூர் கச்சேரியில் ‘டெப்யுடி பேஷ்கார்’ என்கிற புதிய உத்தியோகம் ஒன்றை சிருஷ்டித்து மாதம் 300 ரூபாய் சம்பளத்தில் கிருஷ்ணராயரை நியமித்தார். தேவஸ்வம்களையும் போஜனசாலைகளையும் (ஊட்டுப்புறைகள்) மேற் பார்வை பார்க்கும் வேலை ராயர்வசம் விடப்பட்டது. இந்நியமனத்தினால் கிருஷ்ணராயருக்கு அச்சமயம் திருப்தியுண்டாயிற்று. ஆனாலும் பேராசைகொண்ட கிருஷ்ணராயர் விஷ

யத்தில், "இது வெறும் வாயை மெல்கிறவனுக்கு அவல் கிடைத்தாற்போல்" ஆயிற்று. ஸுப்பராயரை எவ்விதத்திலாவது பதவியிலிருந்து நீக்கினல் தான் தனக்கு திவான் உத்தியோகம் கிடைக்கும் என்பதுதான் கிருஷ்ணராயரின் மனப்பால். இந்த உத்தேசம் கைகூடுவதற்காக சதா சர்வகாலமும் ரெஸிடெண்டினிடம் கோள் சொல்லிக் கொண்டே இருந்தார். அப்படிச் செய்ய, போதுமான சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் வேண்டிய அளவு இருந்து வந்தன- ரெஸிடெண்டுக்கு இயற்கையாகவே காது சற்று மந்தமாகவிருந்ததனல், அவருடன் சத்தம் போட்டுத்தான் பேசவேண்டியிருந்தது. மகாராஜாவுக்கு இது மிகவும் கஷ்டமாகவிருந்தது. அவருடைய உடல் நிலேயும் திருப்திகரமாக இருக்கவில்லே. சத்தம் போட்டுப் பேசுவது உடல் நிலேயை பாதித்தது. இந்த காரணத்தினல், ரெஸிடெண்டை நேரில் கண்டு பேசும் பழக்கத்தை கூடிய வரையில் குறைத்துக்கொண்டார். ஒரு வேளே ரெஸிடெண்டே மகாராஜாவை நேரில் காணவேண்டுமென்று விரும்பினலும், ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார். மகாராஜா இப்படியிருப்பது கிருஷ்ணராயருக்குப் பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. ரெஸிடெண்டுக்கு உதவியாளென்கிற நிலேயில், சர்க்கார் காரியங்களேயும், மகாராஜாவுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களேயும் நிர்வகித்து வந்தது கிருஷ்ணராயரே தான். ரெஸிடெண்டை அடிக்கடி பார்க்க மகாராஜா விரும்பாதது திவான் ஸுப்ப

ராயருடைய துர்போதனையினல் தான் என்று கல் லன் துரையின் மனதில் ஓர் தவருன எண்ணத்தை கிருஷ்ணராயர் பலமாகப் பதியவைத்திருந்தார். இதனுல் அதிகார மதம் தலைக்கேறியிருந்த கல்லன் துரை கடும் சினம் கொண்டார். மகாராஜா எந்த காரியம் செய்தாலும், ரெஸடெண்டு அதைத் தவ ருகவே எண்ணலானுர். திருவிதாங்கூர் இராஜ் ஜியம் சம்பந்தப்பட்ட மட்டில் ரெஸிடெண்டினு டைய நீதியும் நெறியும் மறைந்துவிட்டன. திருவி தாங்கூர் சர்க்கார் செய்து வந்த ஒவ்வொரு சிபா ரிசையும் கல்லன் துரை உதரித்தள்ளினுர். திருவி தாங்கூர் அரசாங்கத்தைப் பொருட்படுத்தாமலே எல்லா உத்தரவுகளும் ரெஸிடெண்டு முகாந்திரம் போடப்பட்டன. மேலால் சகல மனுக்களையும் பிர ஜைகள் ரெஸிடெண்டுக்கே நேராக அனுப்ப வேண் டியதென்று உத்தரவாயிற்று. அப்பீல் கோர்ட் டில் நடந்துவந்த வியாஜ்ஜியங்களின் ரிக்கார்டுகளை யும் வரவழைத்து ரெஸிடெண்டே தீர்ப்புக்கூறவா ரம்பித்தார். பிரஜைகள் கொண்டுவரும் குற்றச் சாட்டுகளுக்கு திவான் பதில் சொல்லியாக வேண்டு மென்கிற நிலை வந்து விட்டது. ஆகவே திருவிதாங் கூர் அரசாங்கத்திற்கு யாதொரு அதிகாரமும், உரி மையும் இல்லையென்று வந்துவிட்டது. இனிமேல் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் கூட ரெஸிடெண்டு உத்தரவு போட்டார். இந்நிலையில் திவான் ஸுப்பாராயருக்குத் தன் உத்தியோகப் பொறுப்புக்களை நிர்வகிப்பது எவ்வளவு கஷ்டமாயி ருந்ததென்பதை நன்ருகத் தெரிந்துக்கொள்ளலாம்.

தர்மத்தைக் கடைபிடித்து ஒழுகும் மகாராஜா தனக்கு நியாயமாக உரிமையுள்ள காரியங்களில் யாரும் காரணமில்லாமல் தலையிடுவது கட்டோடு பிடிக்கவில்லை. நாட்டின் அரசாட்சியின் முழுப் பொறுப்புரிமை தனதாகவிருக்க, ரெஸிடெண்டு கல்லன் அதில் தலையிடுவது மிகவும் அக்கிரமம் என்று அவர் எண்ணினார். கல்லன் துரையின் போக்கைப்பற்றி சென்னை அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க மகாராஜா நிச்சயித்தார். செய்யவும் செய்தார். ஆனால் அது பயன்படவில்லை. இதற்கு முன்பாகவே திருவிதாங்கூரின் அரசாட்சியைப்பற்றி கல்லன்துரை சென்னை அரசாங்கத்திற்கு அடிக்கடி எழுதியனுப்பிய கடிதங்கள் அவ்வரசாங்கத்தின் மனதை விரோதமாக மாற்றிவிட்டிருந்தன. கோர்ட் ஆப்டைரெக்டர்ஸ் எனப்படும் கம்பெனி மேலதிகாரிகள் ஏற்கெனவே திருவிதாங்கூர் அரசரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்ருக்கவில்லையென்பது தெரிந்த விஷயமே.

ரெஸிடெண்டு அடிக்கடி எழுதியனுப்பிய ரிப்போர்ட்டுகளை அனுசரித்து, திருவிதாங்கூருக்கு எதிராகப் பல உத்தரவுகளையும் சென்னை சர்க்கார் போட்டது. அதனால் இந்நாட்டிற்கு பிரிடிஷ் அரசாங்கத்திலிருந்து நீதியும் நியாயமும் கிடைப்பது அசாத்தியமென்றாயிற்று. இந்நிலையில் பிரிடிஷ் அரசாங்கத்தையும், அதன் பிரதிநிதியாகிய ரெஸிடென்டையும் பிரீதிப்படுத்திக் கீழ்ப்படிந்து நடந்தாலல்லாமல் கதிமோக்ஷமில்லை யென்பது தெளிவாயிற்று. இது கிருஷ்ணராயருக்கு முன்பைக் காட்

டிலும் அதிக செளகரியமாகிவிட்டது. திவானுடைய அதிகாரம் குன்றி, பலம் குறைந்துபோயிற்று. அவ ராகச் சொந்தப் பொறுப்பின் மேல் ஒன்றும் செய்ய இயலவில்லை. இது தான் தக்க சமயம் என்று சுய காரியப் புலிகளாயிருந்த பல துராசைக்காரர்களும் கிருஷ்ணராயருக்குத் துணையாகச் சேர்ந்துவிட்டார் கள். இனிமேல் திவானைத் தொடர்ந்து போவது சாத்தியம் என்றுணர்ந்து ஸுப்பராயர் ராஜிநாமா கொடுத்துவிட்டார். அவருக்கு ரூ. 500 ஓய்வுச் சம் பளமாகக் கொடுக்கப்பட்டது. (1017-ஆம் மிதுன ஸ்ரீ 2-உ)

இவ்விதமாக கிருஷ்ணராயரின் குயுக்தியும், சதியும் பலித்தன. ராஜ்ஜிய காரியங்கள் எப்படியா வது நடந்தால் போதும் என்றெண்ணி, கிருஷ்ண ராயரை ஹெட்திவான் பேஷகார் உத்தியோகத்தில் 1017-ஆமத்தில் மகாராஜா நியமித்தார். கிருஷ்ண ராயருக்கு உத்தியோகப் பொறுப்புக் கொடுத்தும் மகாராஜாவின் துன்பங்கள் தொலைந்தபாடில்லை. அவருடைய அதிகாரத்தையும் அந்தஸ்தையும் எப் படியாவது அடக்கிக் கீழ்ப்படுத்திவிட ரெஸிடெண்டு செய்த கடும் முயற்சிகளை மகாராஜாவால் சகிக்க முடியவில்லை. ஒரு நாள் தந்தை கோயில் தம்பி ராணியும், தம்பி மார்த்தாண்டவர்ம இளைய மகா ராஜாவையும் கூட வைத்துக்கொண்டு ராஜ்ஜியத் திற்கு ஏற்பட்டிருக்கும் அடிமைத்தனத்தையும், வீழ்ச்சியையும் விஸ்தாரமாக விளக்கிக் கூறினர். துராசைப் பேய் பிடித்த கேவலம் ஒரு ஊழியனு டையக் கோழ்ச்சொற்களுக்கு மாத்திரம் செவி

சாய்த்து ரெஸிடென்டு இப்படி அநியாயமாக நடந்துக்கொள்வதைப் பொறுத்துக் கொண்டிருப்பதைவிட ராஜபதவியையே உதரித்தள்ளி விடுவதே மேல் என்று அவர் உறுதியாகக் கூறினர். அந்தத் தீர்மானத்தை சென்னை அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதென்றெண்ணி முழு விபரங்களும் அடங்கிய பெரிய லிகிதம் ஒன்று தயாராக்கப்பட்டது. அநீதியிலும் அக்கிரமத்திலும் வெறுப்பும், கடும் கோபமும் நிறைந்து ததும்பும் அக்கடிதம், கேவலம் அடிமை நிலைக்கு வந்திருந்த நாட்டு அரசாங்கத்தின் கண்களைக் கூடத்திறந்து உண்மை நிலையை உணரும்படிச் செய்யப் போதுமாகவிருந்தது. ஆனல் கோயில் தம்பிரானும், இளைய மகாராஜாவும், ராணி பார்வதீபாயும் ஏகமனதாய் அக்கடிதத்தை அனுப்புவது உசிதமல்லவென்று மன்ருடினர்கள். அவர்களின் கட்டாயத்தினல் மகாராஜா அக்கடிதத்தை அனுப்பாமல் நிறுத்திக்கொண்டார் இப்படித் தீர்மானித்தும், கிருஷ்ணராயரை இனிமேல் உத்தியோகத்தில் வைத்திருப்பதில்லை என்று கண்டிப்பாய்க்கூறி விட்டார் ரெஸிடென்டு துரை கிருஷ்ணராயரை எவ்வளவோ புகழ்ந்து உயர்த்தி வைத்தும், மகாராஜா ராயருடைய செயல்களைப் பற்றித் தீராவெறுப்புக் கொண்டார் தனக்கு நம்பிக்கையில்லாத ஒருவரை திவானக ஸ்திரப்படுத்துவது முடியவே முடியாது என்று சென்னை சர்க்காருக்குத் தெரியப்படுத்திவிட்டார் பிறகு திவானகத் தெரிந்தெடுக்கப்பட்டவர், ராணி பார்வதீபாயியின் காலத்தில் திவானயிருந்து ஓய்வுச் சம்பளம் பெற்றுப்

பிரிந்திருந்த வெங்கடராயர் (ரெட்டிராயர்) தான். இவரும் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார். சென்னை அரசாங்கமும் சம்மதித்தது. அப்படியிருந்தும், ரெஸிடெண்டுக்கு இந்நியமனம் பிடிக்கவில்லை சென்னை அரசாங்கத்தின் உத்தரவை ரெட்டிராயருக்குத் தெரிவித்தபோது 4-2-1843 ல் எழுதிய கடிதத்திலிருந்து ரெஸிடெண்டுக்கு வெங்கடராயரைப்பற்றி அபிப்பிராயம் எவ்வாறிருந்ததென்பது தெரியவரும்:—

"திவான் பதவியை ராஜிநாமா கொடுப்பதற்கு அனுமதியைக் கோரி கர்னல் மக்டாள், நியூவாள் என்கிற ரெஸிடெண்டுகளுக்கு தாங்கள் எழுதிய பல கடிதங்களிலும் கூறியிருக்கிற காரணம்—வயதாகிவிட்டது, உடம்பு சரியாயில்லை, வேலைப் பொறுப்புக்கள் கடுமை என்பவையாகும். இருபது வருஷ காலம் ஓய்விலிருந்த பிறகு, இப்பொழுதும் தங்களுக்கு உத்தியோகம் பார்க்கப் போதிய தேகபலம் இருக்குமா என்று சர்க்கார் சந்தேகப்படுகிறது. திவான் பொறுப்பை வகித்திருந்த பொழுது, முடிவடையாமல் அரைகுறையாய்க் கிடந்த ராஜகாரியங்களையெல்லாம் சரிவரச்செய்து தீர்த்து நற்பெயர் சம்பாதித்து நாட்டிற்கு மிக்க நற்பயனை உண்டாக்கித் தந்திருப்பதாக, சென்னை சர்க்காருக்கு ரெஸிடெண்டவர்கள் திவான்பேஷ்கார் கிருஷ்ணராயரைப் பற்றி சிலாகித்து எழுதியிருக்கிறார். தங்களுடைய காரிய நிர்வாக விஷயத்தில் கிருஷ்ணராயருடைய பூர்ண ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும் என்று சர்க்கார் அபிப்பிராயப்படுகிறது. மகாராஜா அவர்

களுக்கும், சென்னை அரசாங்கத்திற்கும் சகலவித த்திலும் திருப்தியளிக்கும் விதத்தில் உதவி புரிவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நண்பர்கள், அடுத்துவந்தவர்கள், உறவினர்கள் முதலியோரைக் கொண்டு கச்சேரிகளை நிறைக்கும் பழக்கம் சில பெரிய உத்தியோகஸ்தர்களிடத்தில் காணப்படுகிறது. அதை நான் கடுமையாக எதிர்ப்பவன். அதனால், அவ்விதமாகிய நோக்கத்துடன் நீங்கள் யாரையும் அழைத்துவரப் போவதில்லையென்று நான் உறுதியாக நம்பியிருக்கிறேன். தங்களுடைய சொந்த சௌகரியத்திற்கும், பணிவிடைக்கும் எவ்வளவு குறைவாக ஆட்கள் வேண்டி வருமோ அதோடு நிறுத்திக்கொண்டு அவ்வாட்களை உங்களுடைய குடும்பத்தினர்களிலிருந்து பொருக்கியெடுத்து அழைத்து வருவீர்கள் என்று நான் எண்ணுகிறேன்".

இக்கடிதத்திலிருந்து ரெட்டிராயரைப் பற்றி ரெஸிடெண்டுக்குண்டாயிருந்த அபிப்பிராயமும், மதிப்பும், ராயருடைய சுயஜன பக்ஷபாதமும் நன்கு விளங்கும்.

இருபது வருஷகாலம் சும்மா இருந்துவிட்டுப் பிறகு திவான் வேலையில் மீண்டும் புகுந்தார் ரெட்டிராயர். கிருஷ்ணராயர் திவான் பேஷ்காராகத் தொடரும்படி உத்தரவும் ஆயிற்று. ஆனால் பெரும் அலுவல்கள் ஒன்றும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. சில அற்ப விஷயங்கள் தான் அவருடைய மேற்பார்வையிலிருந்தன. கிருஷ்ணராயரை உடனே வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று மகா

ராஜா ஆசை கொண்டார். அது ராஜரீகத்திற்கு நன்றாயிருக்காது என்று இளைய மகாராஜா அபிப்பிராயப்பட்டதனால் கிருஷ்ணராயரை வேலையிலிருந்து தள்ளிவிடவில்லை. ரெட்டிராயர் சற்றேறக் குறைய இரண்டு வருஷங்கள் தான் உத்தியோகம் வகித்திருந்தார். துராசையும் சொந்த உறவினர் பால் பக்ஷபாதமும் கொண்டிருந்த அவருடைய போக்கு வெகு சீக்கிரத்தில் நாட்டினர்க்கு வெறுப்பை உண்டாக்கிவிட்டது. ரெஸிடென்டு முன்னறிவு கொடுத்திருந்தும், பல உறவினர்களையும், அடுத்து வாழ்பவர்களையும், நண்பர்களையும் தன்னுடன் கூட்டிக்கொண்டுதான் வந்திருந்தார் ரெட்டிராயர். அவர்களுக்கெல்லாம் தோன்றியபடி உத்தியோகங்களையும், பிழைப்பிற்கு வழிகளையும் உண்டாக்கிக் கொடுப்பதிலேயே ராயர் சதா ஊக்கம் கொண்டார். தாமதமில்லாமல் தன்னுடைய இரண்டு குமாரர்களுக்கும் ஹுஜூர் கச்சேரியில் பெரும் உத்தியோகங்களைக் கொடுத்து நியமித்ததைப் பார்த்தால், உத்தியோக நியமன காரியங்களில் அவர் பின்பற்றிய நயம் தெளிவாகும்.

ரெட்டிராயர் திரும்பி வந்தது கிருஷ்ணராயருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அதனால் ரெட்டிராயருடைய அக்கிரமச் செயல்கள், கிருஷ்ணராயருக்கு விஷமம் செய்வதற்கும், சண்டைக்கு வழி தேடவும் காரணமாயின. திவானுக்கு விரோதிகளான பலரும் திவான் பேஷ்காரின் கக்ஷியில் சேர்ந்தார்கள். கிருஷ்ணராயர் பேரிலுள்ள விரோதத்தினால், முதன் முதல் மகாராஜா ரெட்டிராய

ருக்கு உதவியாகவிருந்தார். ரெஸிடெண்டோ நேர்மாருக கிருஷ்ணராயருக்குத் துணை புரிந்தார். திருவிதாங்கூரில் நேர்மையுடனும், சத்தியத்துடனும் ராஜ்ஜியத்திற்கு உழைப்பவன் கிருஷ்ணராயன் ஒருவன் தான் என்பதாக கல்லன் துரை சென்னை அரசாங்கத்திற்கு ஏற்கெனவே எழுதிவிட்டிருந்தார். அந்த கிருஷ்ணராயர் விஷயத்தில் மகாராஜா விரோதம் கொண்டிருப்பது ரெஸிடெண்டுக்குச் சகிக்கவில்லை. அதனால் மகாராஜா செய்யும் ஒவ்வொரு உத்தியோக நியமனத்திலும் ரெஸிடெண்டு தலையிடவாரம்பித்தார். ரெட்டிராயரைத் திவானாக நியமிப்பதற்குச் சற்று முன்பு கேசவபிள்ளையும், கொச்சு சங்கரப்பிள்ளையும் முறையே ஹுஜூர் திவான் பேஷகாராகவும், அரண்மனை பேஷ்காராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவ ரிருவர்களும் உத்தியோகத்திலிருந்து விலகிக் கொஞ்சகாலம் தான் ஆகியிருந்தது. அரண்மனை பேஷ்கார் என்கிற உத்தியோகம் புதிதாக மகாராஜா ஏற்படுத்தியதனால் கல்லன் துரை அதை எதிர்த்தார். சற்றும் உரிமையில்லாமல், ரெஸிடெண்டு இம்மாதிரி காரியங்களில் தலையிடுவது பெரும் அனியாயம். அதைப் பொறுக்கவே முடியாது என்று மகாராஜா பிடிவாதம் கொண்டார். அரண்மனையைச் சம்பந்தப்பட்ட உத்தியோக நியமனம் தன் சொந்த வீட்டு விஷயமென்றும், அதைப்பற்றி ரெஸிடெண்டுக்கு யாதொரு அதிகாரமுமில்லையென்றும் ரெஸிடெண்டுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. இத்துடன் மகாராஜா தன் பொறுமையை இழந்து விட்டார். இத்

துன்பங்களுக்கெல்லாம் ஆதிகாரணமாகிய கிருஷ்ணராயனை உடனே உத்தியோகத்திலிருந்து தள்ளிவிடக் கடைசியாகத் தீர்மானித்துவிட்டார். அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த மார்க்விஸ் ஆப்ட்வீட்டேல் துரைக்கு 1843-ம் வருஷம் மகாராஜா விபரமடங்கிய கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினார். அக்கடிதத்தில் அரசியல் துறையில், தான் அனுபவித்து வரும் துன்பங்களையும், தனக்கு ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியையும், தன்னுடைய சுதந்திரம் நிலைகுலைந்திருப்பதையும், ராஜகல்பனைகளை திக்காரம் செய்துக் கொண்டு ரெஸிடெண்டு நடத்தும் துரதிகார முறைகளையும், ரெஸிடெண்டைத் தவறான வழியில் கொண்டுபோகும் கிருஷ்ணராயரைப் பற்றியும் விளக்கமாக விவரித்திருந்தார். இதற்கெதிராக கல்லன் துரை எவ்வளவோ சதி செய்து பார்த்தும், மகாராஜா தான் வெற்றியடைந்தார். பேஷ்காரைப் பிரித்து விடும் உரிமையும், அதிகாரமும் மகாராஜாவினுடையது தான் என்று சென்னை அரசாங்கம் தீர்ப்புக் கூறிற்று. 1010-ஆம் ஆண்டு த்திய ஆரம்பத்தில் கிருஷ்ணராயரை வேலையிலிருந்து தள்ளி, அவர் திருவனந்தபுரத்திலேயே வசிக்கக் கூடாது என்று மன்னரின் கட்டளையாயிற்று. ராயர் மனம் இடிந்து போய், கொல்லத்தில் வசித்து வந்தார்.

சென்னை அரசாங்கத்தின் தீர்ப்பும், மகாராஜாவின் உத்தரவும், கல்லன் துரையின் மனத்தாங்கலைப் பன் மடங்கு அதிகரித்தன என்று சொல்ல வேண்டியதில்லை. கிருஷ்ணராயரை வேலையிலிருந்து

தள்ளிவிட்டதற்கு எப்படியாவது பழி வாங்கி விட வேண்டியதென்று நிச்சயித்து, துரை தக்க வழிகளைத் தேடவாரம்பித்தார். திவான் உத்தியோகத்தைவிட்டு, ஸுப்பராயர் திருவனந்தபுரத்தில் ஓய்வெடுத்து வசித்து வந்தார் அவர் மகாராஜாவுக்கு குரு, சமயோசிதமாய் நல்லுபதேசங்களை நல்குபவர், உற்ற நண்பர் அவரை எவ்விதத்திலாவது ஊரை விட்டுத் துரத்தி, அவ்வழியில் மகாராஜாவுக்கு மனோவேதனையை உண்டாக்கிவிட கல்லன் துரை முனைந்தார். மகாராஜாவுக்கும், சென்னை அரசாங்கத்திற்கும் இவ்விஷயத்தைப்பற்றி அடிக்கடி எழுதிக்கொண்டே இருந்தார் கடைசியில் ரெஸிடெண்டுடைய வற்புறுத்தலை ஆதரித்து, ஸுப்பராயர் திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தை விட்டு வெளியே போய்விட வேணடியதென்று சென்னை அரசாங்கம் உத்தரவு போட்டுவிட்டது. மகாராஜா அந்த உத்தரவை தற்காலம் ஒப்புக்கொண்டு கீழ்ப்படியவும் வேண்டியதாயிற்று.

ஆங்கிலேயர்களின் நேர்மையில் மகாராஜாவுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் இந்த உத்தரவினால் பூராவும் சிதைந்து விட்டது அவ்வரசாங்கம் எப்படியாவது அதிகாரம் செலுத்துவதில் கண்ணும் கருத்தும் ஆகியிருக்கிறதே தவிர, நியாயத்தையும் நீதியையும் பாதுகாப்பதில் இல்லவே இல்லை என்பதை மகாராஜா தெளிவாக உணர்ந்தார். இதன் பயனாக அவருக்கு அரசியல் அலுவல்களில், நாளுக்குநாள் ஊக்கமும் உற்சாகமும் குன்றிக்கொண்டுவந்தன. அவருடைய மன அமைதி

உருக்குலைந்தது. ஸுப்பராயரை நாட்டை விட்டு விரட்டியும், சென்னை அரசாங்கத்தின் அவ்வுத்தரவு மாற்றமுடியாததல்லவென்று அவர் எண்ணினர். இதைப் பற்றிய விவரங்கள் பிறகு கூறப்படும். சென்னை அரசாங்கமும் இவ்விஷயத்தைத் திரும்பவும் ஆராய்ந்து ஆலோசித்து மகாராஜாவுக்குச் சாதகமாக உத்தரவு போட்டார்கள். ஸுப்பராயர் திரும்பவும் திருவனந்தபுரத்திற்கு வந்து சேர்ந்தார். இவ் விஷயத்தில் வெற்றியடைந்தும், மகாராஜாவின் மனம் அரசியல் காரியங்களில் செல்லவில்லை உடல் வலிமையும் படிப்படியாகக் குறையவாரம்பித்தது. மனத்துயரம் தாங்க முடியாத நிலையிலாயிற்று. பெரும் பாலும் விரதம், தியானம், பிரார்த்தனை முதலியவைகளில் ஈடுபட்டு காலம் கழிக்கத் தொடங்கினர். பல நாட்களிலும் உபவாஸமிருந்து பூஜைகளைச் செய்வார். அச்சமயங்களில் யாரும் அவரைக்காண முடியாது. நெருங்கிய உறவினர்கள் கூட எளிதாக மகாராஜாவைப் பார்க்க இயலவில்லை. திவானுக்கோ மகாராஜாவை நேரில் காண சந்தர்பமே கிடைக்காமல் போய்விட்டது. வைத்தியனைப் பார்க்கக்கூட மகாராஜா மறுத்தார். ரெஸிடெண்டைக் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை என்று சபதம் பூண்டார். மற்ற வெள்ளையர்களைப் பற்றிக் கூறுவானேன். சென்னை கவர்னராகவிருந்த ட்வீட்டேல் பிரபுவின் மகன் ஹேப்பிரபு அச்சமயம் திருவனந்தபுரத்திற்கு விஜயம் செய்தார். கோயில் தம்பிரானும், இளைய மகாராஜாவும் கட்டாயப்படுத்தியதின் மேல் ஹே துரையைச் சந்திப்

பதற்கு மகாராஜா விருப்பமே இல்லாமல் கடைசியில் ஒப்புக்கொண்டார். அப்பொழுதெல்லாம் மகாராஜா சதா ஈச்வரத்தியானத்திலும் பஜனையிலும் காலம் கழித்து வந்தார்

1019-ஞ சுசீந்திரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு மகாராஜ யாத்திரை போனர். கோயில்களிலெல்லாம் பூஜைகள், காணிக்கைகள், ஆராதனம் முதலிய வகைகளில் பணம் ஏராளமாகச் செலவு செய்யப்பட்டது அரண்மனை, ஹுஜூர் கச்சேரி இவைகளின் உத்தியோகஸ்தர்களும், ராஜாக்கினையின் பேரில் கூடவே சென்றூர்கள். அச்சமயம் நாஞ்சில் நாட்டு வாசிகள் தங்கள் அன்பு, பக்தி இவைகளுக்குத் தக்கபடி மகாராஜாவை வரவேர்த்து மரியாதைகள் செய்ய அனுமதி கேட்டார்கள். ஒருவேளை அவர்கள், ரெஸிடெண்டின் அனுவசியமான அநியாயப் போக்கைப்பற்றி பிரஸ்தாபிக்கக் கூடும் என்று சந்தேகித்து மகாராஜா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவில்லை என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. இது ஒருவாறு உண்மைதான். மகாராஜாவுக்கு ரெஸிடெண்டின் பெயரையெடுத்தாலே பிடிக்காமல் போயிருந்தது. கல்லன் துரையைப் பற்றி பிரஸ்தாபம் வரும்போதெல்லாம் "சுவேதன்", "வெள்ளை", "பண்டாரம்" என்கிற ஏளனப் பெயர்களைத்தான் உபயோகிப்பார்.

இனிமேல் ஈச்வரப்ரீதி ஒன்றுதான் உய்யும் வழி என்று மன உறுதி கொண்டு மகாராஜா திவ்விய தேசயாத்திரை, பகவத் தரிசனம், விரதாநுஷ்

டாணம் இவைகளில் பூராவும் கவனம் செலுத்தி ஞர். தேவாலயங்களில் பெரும் துகைகளைக் காணி க்கையாகச் சமர்ப்பித்தும் அவருடைய மனம் சாந் தியடையவில்லை ஒரு சமயம், ஸ்ரீ பத்மநாபஸ்வாமி கோயிலுக்கு லக்ஷம் ரூபாய் காணிக்கை செலுத்த நிச்சயித்தார். மஞ்சள் துணியில் முடிப்புகளாகக் கட்டி பகவான் முன்பாக வைத்திருந்த பணத்தை, ஒவ்வொரு முடிப்பையும் தன் கைகளைக்கொண்டே எடுத்து வெள்ளிப் பாத்திரங்களில் வைத்தார். ஒவ் வொரு முடிப்பையும் அவிழ்த்துத் தட்டுவது மிகவும் சிரமமாகவிருந்தும் அதையெல்லாம் வேறுயாரையும் செய்யச் சம்மதிக்காமல் மகாராஜாவே செய்து முடித் தார். பல சந்தர்ப்பங்களிலும், லக்ஷக்கணக்காய்ப் பணத்தையும், விலையேறிய பொருள்களையும் கோ யில்களுக்குச் சமர்ப்பித்ததாகக் கணக்குகளிருக் கின்றன. 1005-ஆம் தனு மீ 8-உ "தாயாருக்குப் பாபபரிகாரத்திற்காக ஸர்வப் ப்ராயசித்தம் செய்த போது 1009 பசுக்கள் தானம் கொடுக்கப்பட்டன". தானம், தக்ஷிணை முதலிய இனங்களில் அன்றைய தினம் லக்ஷத்திப் பதினெண்ணாயிரத்து நூற்றி எட்டேகால் பணம் செலவாயிருப்பதாகத் தெரிய வருகிறது. 1009-ஆம் த்திலிருந்து 1015-ஆம் வரை கோயிலுக்குச் சமற்பிக்கப்பட்ட மொத்தத் துகை, பழைய கணக்குகளில் கண்டிருப்பதிவ்வாறு:—

| | |
|---|---|
| வலிய அனந்தராமன் பணம் | 10,75,000 |
| ரூபாய் | 4 24,569 |
| தங்கக் காசு | 1230 |
| அனந்த வராகன் | 2630 |

| | |
|---|---|
| இக்கேரி வராகன் | 327 |
| தங்க மொகரா | 293 |
| மேற்படி அரை மொகரா | 164 |
| மூன்றிலொன்று மொகரா | 1420 |
| கால் மொகரா | 2 |
| சக்ரம் (பணம்) | 465003 (சில்லரை) |

பணவிஷயத்தில் இவ்விதமாகிய அலக்ஷியமனப் பான்மை வந்துவிடவே, தர்மகாரியங்களுக்கு மாத்திரமல்லாமல் ஆடம்பரமான செயல்களிலும் அதிகப் பொருள் செலவாயிற்று. பட்டாள சீர்திருத்த விஷயத்தில் தாராளமாக பணம் செலவானதைப் பற்றி முன்பே கூறப்பட்டது. பட்டாள சிப்பாய்களுடைய ஆடை அணிகலங்கள் புதிய விதத்தில் அமைக்கப்பட்டன. இத்துடன் புதுமாதிரியாக ஒரு ரதம் செய்விக்கப்பட்டது. இந்த ரதத்தை முதன் முதல் பட்டினப்ரவேச ஊர்வலத்தில் உபயோகித்தது 1017-ஆம் சிங்க மீ 20-உ.

1005-ஆம் மேட மீ முதற்கொண்டு (அதாவது ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் ஜன்ம நக்ஷத்திரநாள்) பெரிய கோயிலில் அனந்த வாகனத்திற்கு பதிலாக இந்திர விமானத்தில் ஸ்வாமி ஊர்வலம் நடத்தப்பட வேண்டியதென்று உத்தரவாயிற்று.

அரசியல் துறையில் மேன்மேலும் வெறுப்பு அதிகரிக்கவே, மகாராஜா அதிக செலவாளியாக மாறிவிட்டார். விலையுயர்ந்த பட்டாடைகளும், இரத்தினங்களும், ஆபரணங்களும், அரண்மனையின் அவசியத்திற்கும், கோயில் காணிக்கைகளுக்காகவும் வாங்கப்பட்டன. நிரந்தரமாக உபயோகமுள்ள காரி

யங்களுக்கும் பணச்செலவு நிச்சயிக்கப்பட்டு உத்தர வாயிற்று. பெரும் கட்டிடங்களும் மாளிகைகளும் கட்டித்தீர்ப்பதற்கும், பிரஜைகளுக்கு உதவும் படியான ஸ்தாபனங்களை நிறுவுவதற்கும், பொது மராமத்து வேலைகளுக்கும் தாராளமாகப் பணம் செலவழிக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட அதிகச்செலவிஞல் பண நெருக்கடி ஏற்படலாம் என்று நினைத்து முன் ஜாக்கிரதையுடன் மகாராஜா சர்க்கார் கடன் வகையில் நான்கு லக்ஷம் ரூபாய்கள் போட்டு வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலில் மகாராஜா அசிரத்தை காண்பிப்பதுஅதிகரித்து வரவே, ரெட்டிராயருக்கு இஷ்டம் போல் செய்ய சௌகரியம் அதிகரித்தது. ராயருடைய சுஜன பக்ஷபாதமும், அடுத்துள்ளவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதும், இவர்களுக்கெல்லாம் சர்க்காரில் நல்ல உத்தியோகங்களை உண்டாக்கிக் கொடுக்கும் பழக்கமும், முன்பே கூறப்பட்டன. முதன் முதல் மகாராஜா இவ்விஷயங்களைத் தெரிந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. ஆயினும் நாளடைவில் திவானுடைய அக்கிரமச் செயல்கள் அவருக்குக் கடும் வெறுப்பைத் தந்தன. உத்தியோகஸ்தன் யாதொரு அப்பழுக்கும் இல்லாதவனுக இருக்கவேண்டியதவசியம் என்கிற எண்ணம் கொண்டவர் அவர். அதனுல்தான், ரெட்டிராயருடைய இரண்டு குமாரர்களையும் ஹுஜூர்கச்சேரி உத்தியோகத்திலிருந்து உடனே நீக்கிவிட வேண்டுமென்று கல்லன் துரை மகாராஜாவுக்கு எழுதியதை சந்தோ

ஷத்துடன் சம்மதித்தார். நாளுக்கு நாள் ரெட்டிரா யருடைய அக்கிரமப்போக்கு மகாராஜாவுக்குக் கோபத்தையும், துயரத்தையும் உண்டாக்கியது. 1020-ஆம் ரெட்டிராயர் வடக்குத் தாலூக்குகளுக்கு உத்தியோக விஷயமாய் ஸர்கியூட் சென்றிருந்தார். பறவூர் தாலூக்கில் தாசீல்தார் மீது சுமத்தப்பட்டிருந்த சில குற்றங்களைப்பற்றி விசாரிப்பதற்காக திவான் பறவூருக்குப் போய்ச் சில நாள் தங்கினர். அப்பொழுது பழய கொச்சி திவான் நஞ்சப்பய்யனுடைய மகன் அனந்தராமய்யன் திவான் ரெட்டிராயரை விருந்துக்கு அழைத்தார் ரெட்டிராயரும் நஞ்சப்பய்யனும் முன்பு ரெஸிடெண்டாகவிருந்த மன்ரோ துரையின் கீழ் வேலையிலிருந்து அவருக்கு வேண்டியவராக இருந்தவர்கள். ராணி பார்வதீபாயியின் காலத்தில் நஞ்சப்பய்யன் ரெட்டிராயருக்காக மகாராணியினிடத்தில் பல சிபாரிசுகள் செய்திருந்தார். ரெட்டிராயருடைய சிபாரிசின் மேல் பறவூர் தாலூக்கில் 700 ஏக்கரா நிலம் தானமாக நஞ்சப்பய்யருக்குக் கொடுக்கப்பட்டிருந்ததாம். திவானும், அவருடைய சிப்பந்திகளும் அனந்தராமய்யனிடத்திலிருந்து பல பரிசுகளைப்பெற்றனர்கள். தாசீல்தாரின் மேலுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரித்த காரியத்திலும் இவர்களெல்லோரும் செம்மையாக பணம் பிரித்திருந்தார்கள். அங்கு நாயித்தோட்டம் தேவஸ்வத்தின் எல்லை நிர்ணய விஷயத்திலும் இவர்களைப்பற்றி பல அபவாதப் பேச்சுக்களும் எழுந்தன. அச்சமயம் பால்கெட்டியிலிருந்த ரெஸிடெண்டுக்கு இவ்விஷயங்களை

ல்லாம் செவிக்கெட்டின. மகாராஜாவுக்கும் வெகு சீக்கிரத்தில் விஷயம் தெரிந்துவிட்டது.

திவான் ரெட்டிராயர் ஸர்க்கியூட் முடிந்து தலை நகருக்குத் திரும்ப வந்ததும், மகாராஜாவைக் காண அனுமதி கோரினர். மகாராஜா பார்க்க முடியாதென்று சொல்லியதுடன், உடனே உத்தியோகத்திற்கு ராஜிநாமா கொடுக்காவிட்டால் அவருடைய நடத்தையைப்பற்றி வெளிப்படையான விசாரணை நடத்தப்படும் என்றும் உத்தரவைப் போட்டார். மகாராஜா போட்ட இவ்வுத்தரவின் உறுதியை நன்கறிந்த ராயர் உடனே ராஜிநாமா எழுதிக் கொடுத்துவிட்டு ஆபத்திலிருந்து தப்பிப்பிழைத்தார். ரெட்டி ராயரை உத்தியோகத்திலிருந்து விலக்கி விட வேண்டிய அவசியம் என்று மகாராஜாவுக்கும், சென்னை அரசாங்கத்திற்கும் வற்புறுத்தி எழுதிக்கொண்டிருந்த கல்லன் துரைக்கு இது பெரு மகிழ்ச்சியைத் தந்தது என்று கூறவும் வேண்டுமோ!

ரெட்டிராயர் வேலையை விட்டுப் போனதும் அவருடைய ஸ்தானத்தில் கிருஷ்ணராயரை நியமிக்க வேண்டுமென்று கல்லன் துரை ஆசைப்பட்டார். அதை மகாராஜா ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார் என்பது தெரிந்த விஷயமே. அப்பீல்கோர்ட் பிரதம நீதிபதியாயிருந்த ஸ்ரீநிவாஸராயரை ஹெட் திவான் பேஷ்காராக நியமித்து திவான் உத்தியோகத்தின் பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைத்தார். ஸ்ரீநிவாஸராயர் மிகவும் சாந்தமான சுபாவமுள்ளவர். நேர்வழியில் நடப்பவர். ஆனாலும் ஒவ்வொரு

விஷயத்திலும் ரெஸிடென்டுடைய விரோதத்தையே அவர் எதிரிட நேர்ந்ததனால் ஒரு காரியமாவது செவ்வனே செய்ய அவருக்குச் சாத்தியப்படவில்லை. அதோடுகூடி அரசியல் காரியங்களில் மகாராஜா காட்டிவந்த அசிரத்தையும், வெறுப்பும், திவானுக்குச்சரிவர வேலை செய்ய முடியாமல் ஆக்கிவிட்டன. வரிவசூலிப்பதிலும், உத்தியோகஸ்தர்களின் சம்பள பட்டுவாடாவிலும் அதிக பாக்கி விழுந்துவிட்டது. அப்போதிய செல்வ நிலையும், பாக்கி வசூல் ஆகாமலிருப்பதும் ராஜ்ஜியத்திற்கு எவ்வளவு துன்பங்கள் நேர்ந்திருந்தன என்பதும் அடுத்த அரசாட்சியின் ஆரம்பத்தில் உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்ம மகாராஜா அவர்கள் திவான் லிங்கய்யன் கிருஷ்ணராயருக்கு 1022-ஆண்டு இடவ மீ 10-உ எழுதிய ஓர் கடிதத்தினால் தெளிவாகிறது. ஸுப்பாராயர் காலத்தில் சர்க்காரிலிருந்து அரண்மனை கஜனாவுக்குக் கொடுத்திருந்த முப்பத்தி நான்கு லக்ஷம் ரூபாய் தவணை முழுதும் செலவாகிவிட்டிருந்தது. இந்நிலையில் ராஜ்ஜியத்திலும், அரண்மனையிலும் செலவுகளைச் சமாளிப்பது புதிய திவானுக்கு அசாத்தியமான காரியமாயிற்று. இப்படிக் கஜனா வறண்டு போயிருந்த சமயத்தில் தவிர்க்க முடியாத பல பெரும் செலவுகள் வந்து சேர்ந்தன. 1020-ஆண்டு தனு மீ மகாராஜாவின் தந்தை ராஜராஜவர்ம கோயில் தம்பிரான் பரலோக ப்ராப்தி யடைந்தார். இதைப்பற்றி ரெஸிடெண்டு கல்லன் துரை திவானுக்கு எழுதிய கடிதம் இவ்வாறு. (ஆங்கிலத்தில்)

*Trichur.*
*24th December 1844.*

"*My dear sir,*

I beg to acknowledge receipt of your note of 20th inst: with the melancholy intelligence of the death of the Valiakoil Thampuran, His Highness' father. I have heard of the distressing news with deep and sincere sorrow, because, I have been perfectly aware of the strong attachment of His Highness' family to that individual, and have often noticed with great interest the affectionate care he appeared to bestow on all the younger branches of the family.

Very faithfully yours,
S/d- W. Cullen"

*To*
R. R. Vencetta Row,
Diwan.

எல்லா விதத்திலும் உபதேசங்கள் கொடுத்துக் கொண்டும் உதவி செய்தும் வந்த தன் அருமைத் தந்தையின் பிரிவு மகாராஜாவுக்கு சொல்லொணுத் துயரத்தை உண்டாக்கியது. இதை மறப்பதற்காகவே சில காலம் இடம் மாறி வசித்தால் நல்லது என்று அவருக்குத்தோன்றி, கொல்லத்தில் வசித்தார். இந்த இனத்திலும் அதிகச் செலவாயிற்று. அவ்வாண்டு திருவிதாங்கூருக்குப் பல விதத்திலும் பொல்லாத வேளையாயிருந்தது. பயங்கரமான புயல் காற்றுக் கிளம்பி ராஜ்ஜியம் முழுதும் பெரும் பொருள்ச்சேத முண்டாயிற்று. உயிர்ச்சேதமும் அதிகம். மரங்களும், வீடுகளும் காற்றடித்து விழுந்தன. ஆயிரக்கணக்கில் ஜனங்கள் மாண்டார்கள். புயலைத்

தொடர்ந்து கடும் மழை பெய்து பெரும் வெள்ளம் உண்டாயிற்று. புயலுக்குத் தப்பி மிஞ்சிய வீடுகளும் மரம் முதலியவைகளும் அடியோடு நசித்துவிட்டன. இவ்விதமாகிய கோர சம்பவம் நடந்த சமயத்தில், பொருளாதார நிலை ஏற்கெனவே சீர்குலைந்து விட்டிருந்ததனுல், குடிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க அரசாங்கத்திற்குச் சாத்தியப்படவில்லை.

## 6. அரசாட்சியின் கடைசிப்படி.

இயற்கை யன்னைகூடத்தனக்கு விரோதமாகி விட்டதை யுணர்ந்து மகாராஜாவின் மனம் உடைந்துவிட்டது. மனோவேதனையும், நிராசையும் நாளுக்குநாள் அதிகரித்தன. “அவனன்றி அணுவும் அசையாது,” நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்பது மகாராஜாவுக்கு உறுதியாயிற்று. ஆண்மையுடன் ரெஸிடென்டினுடைய அதிகாரச் செருக்கையும், அவசியமில்லாத கைகடத்தலையும், எதிர்த்துப்போனதனுல்தான் இவ்வளவு துன்பங்கள் நேர்ந்தன. இனிமேலாவது எதிர்ப்பு மனப்பான்மையை விட்டுவிடுவதே நலம் என்று அவருக்குத் தோன்றியது. இளைய மகாராஜாவும் இவ்வெண்ணத்தைப் பின்தாங்கினர். கிருஷ்ணராயரைத் திரும்பவும் திவானுக நியமித்துவிட்டால் ரெஸிடென்டினுடைய ஒத்துழைப்பும் உதவியும் கிடைத்து அரசியல் காரியங்கள் ஒழுங்காக நடத்தச் சாத்தியமாகக் கூடுமென்று இளைய மகாராஜா அபிப்பிராயப்பட்டார். தன்னைச்

சூழ்ந்திருக்கும் இக்கட்டான நிலையை அறிந்து, தாழ்ந்து போகாமலிருந்தால் இன்னும் அதிகமாகக் கேடு விளையக் கூடுமென்றுணர்ந்து இளைய மகாராஜாவின் ஆலோசனைக்கு மகாராஜா இணங்கினார். சில நாட்களுக்கு முன், ரெஸிடென்டின் அபிப்பிராயத்திற்கிணங்கி, கிருஷ்ணராயரைத் திரும்பவும் திருவனந்தபுரத்திற்கே வந்து தங்கும்படி மகாராஜா உத்தரவு போட்டிருந்தார். 1022-ஆம் விருச்சிக மீ 26-உ கிருஷ்ணராயரை திவான் பேஷ்காராக நியமித்து உத்தரவு போடப்பட்டது. அன்று காலை அரண்மனைக்குச் சென்று மகாராஜாவை நேரில் காண வேண்டியதென்று கிருஷ்ணராயருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. திடீரென்று எதிர்பாராத விதத்தில் ராஜாக்கினையானதும், என்ன நடக்கப் போகிறதோ என்று ராயர் பதறிப்போனார். உத்தரவு பிரகாரம் ராஜ சன்னிதியில் போய் வணங்கியதும், மகாராஜா புன்முறுவலுடன்– "கிருஷ்ணராவு! நான் திரும்பவும் இரண்டாம்தரம் உங்களை உத்தியோகத்தில் நியமிக்கப்போகிறேன். நடந்துபோன விஷயங்களை நான் மறந்து விட்டேன்- உங்களை மன்னித்திருக்கிறேன். இன்று முதல் நீங்கள் என்னைச் சேர்ந்தவர்-கல்லன் துரையின் ஆளில்லை. நாட்டின் நன்மைக்காகச் சத்தியமாகவும் நீதியுடனும் வேலை செய்யுங்கள். ஸ்ரீநிவாஸராயருக்கு உங்களாலியன்றவரைக்கும் சகல உதவிகளையும் செய்யுங்கள்".

ராயர் மகாராஜாவின் கருணைவாய்ந்த மொழிகளைக் கேட்டுத் தூண்போல் அசைவற்று நின்றுவிட்டார். பேசநாவெழவில்லை. கண்களிலிருந்து

ஜலம் தாரை தாரையாக வடிந்தது. தழுதழுத்த குரலுடன், தெலுங்கில் "மகாப்பிரபு! நான் அவ்விடத்திய ஊழியன், அடிமை. அடியேனைக் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிட்டார்.

கிருஷ்ணராயர் திவான் பதவிக்கு வந்தது ரெஸிடெண்டுக்கு வெகு திருப்தியையும் சந்தோஷத்தையும் உண்டாக்கியது. ஆனால் ரெஸிடெண்டினுடைய நல்லபிப்பிராயத்தையும், கிருஷ்ணராயருடைய செயல் திறமையையும் சரியாக பயன்படுத்திக்கொள்ள முடியாத விதத்தில் மகாராஜாவினுடைய உடல் நலம் கேடடைந்தது. சில நாட்களாகவே துன்பப்படுத்திக்கொண்டிருந்த நோய், 1022-ஆம் ஆண்டின் ஆரம்பத்துடன் கடுமையாகிவிட்டது. அவ்வருஷம் ஆவணி மீ 26-ம் வ எழுதப்பட்ட குறிப்பொன்றில்— "வழக்கம்போல் பெரிய மகாராஜா அவர்கள் பெரிய கோவிலில் பூஜை செய்து வருவது, இப்பொழுது அவருக்குக் காய்ச்சல் கண்டு ஆனி மீ 31-வ யிலிருந்து நடத்த முடியாமலிருப்பதனால், உடல் நலம் ஏற்பட்ட பிறகு பூஜைகளைத் திரும்பவும் ஆரம்பித்துக்கொள்ளலாம் என்று உத்தரவு ஆயிருப்பதனால்.........." என்று இருக்கிறது. ஸ்ரீ பத்மநாபஸ்வாமி கோவிலில் வெகு முக்கியமான ஒரு நித்தியச் சடங்கிற்கு எழுந்தருள முடியாமல் போயிற்றென்றால் மகாராஜாவின் உடல்நிலை எவ்வாறிருந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கலாம்.

நாளுக்குநாள் மகாராஜாவின் நோய் அதிகரித்து தேகபலம் குறைந்து வந்தது. ஆனால் இதை யாருக்கும் சொல்லாமலே அவர் காலம் கழித்து

வந்தார். மார்கழி மீ 12-வ நிலை மோசமாகிவிட்டது வழக்கம்போல் குளிக்கப் போகவில்லை. விடிந்து ஆறு ஏழு நாழிகை கழிந்தும் பள்ளியறையிலிருந்து வெளியில் வராதது கண்டு சுற்றத்தார் பயந்து போனார்கள். இச் செய்தி இளைய தம்பிரானுக்கெட்டியது. ஆனால் உத்தரவில்லாமல் பள்ளியறைக்குள் பிரவேசிக்க இளைய தம்பிரான்கூடத் துணியவில்லை சற்றுக் கழிந்ததும் பார்வதீபாயிராணிக்குச் சொல்லியனுப்பினார்கள். ராணியும், இளைய தம்பிரானும் ருக்மிணீபாயின் கணவர் கோயில் தம்பிரானும் பள்ளியறையின் வாசர்ப்படியில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் மெள்ளப் பேசும் சத்தம் மகாராஜாவின் செவிகளில் பட்டது "மகாராணி வந்து நிற்கிறார்களா" என்று மகாராஜவினவினார். காவற்காரர்களிலொருவன் அறைக்குள் சென்று மகாராணியும் மற்றுள்ளவர்களும் வந்து காத்திருப்பதை அறிவித்தான். மகாரஜா படுக்கையை விட்டெழுந்து நடந்து வர முயன்றார். ஆனால் கால்கள் நிலைக்காமல் விழுந்து விடும்போலாயிற்று. உடனே வேலைக்காரன் அவரைத் தாங்கி நிறுத்த முன் வந்தான். மகாராஜாவுக்கு அது பிடிக்கவில்லை. "இதென்ன விளையாட்டு! நான் விழுந்துவிட மாட்டேன். எனக்கு அவ்வளவு பல ஈனம் ஒன்றுமில்லை" என்று கோபத்துடன் கூறினார். பிறகு அறைக்கு வெளியே வந்து மகாராணியைக் கண்டு "காலை ஆகாரம் ஆயிற்று" என்று புன்முறுவலுடன் கேட்டுவிட்டு, தம்பியுடனும் உபசார வார்த்தைகள் பேசினார்.

குளியறைக்குப்போக சக்தியில்லாமலிருப்பதை யுணர்ந்து அடுத்திருந்த அறையிலேயே குளித்து நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டார். சற்று உணவு அருந்தி, உறவினர்களுடன் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுத் திரும்பவும் பள்ளிய றைக்குப்போய்ப் படுத்துக்கொண்டுவிட்டார்.

மகாராஜாவின் தேக நிலையைப்பற்றி இளைய மகாராஜா டாக்டருடன் பேசி ஆலோசித்தார். டாக்டருக்கு மகாராஜாவை நேரில் பார்த்துப் பரி சோதிக்க முடியவில்லை. பல தடவை முயற்சி செய் தும் இளைய மகாராஜாவுக்கு மகாராஜாவைப் போய் நேரில் காண தைரியம் உண்டாகவில்லை. மாலைப் பொழுது வந்துகூட அவர் எழுந்திருக்கா ததைக் கண்டு இளைய மகாராஜா பயந்துபோய் கடைசியில் பள்ளியறைக்குள் போய்ப் பார்த்தார். சில சில்லரை சமாச்சாரங்களைப் பற்றி தம்பியு டன் பேசி விட்டு அவரை மகாராஜா சொல்லி யனுப்பிவிட்டார்.

இருட்டிபத்து நாழிகையாயிற்று. வேலைக்கா ரன் கொண்டுவந்து வைத்த பாலில் சற்று அரு ந்தி விட்டு, மகாராஜா படுத்துத் தூங்கிவிட்டார். பொழுது விடிந்து ஐந்து நாழிகையானதும் வேலைக் காரன் சந்தடியில்லாமல் மெள்ள உள்ளேபோய்ப் பார்த்தான். மன்னர் அசைவற்று படுத்திருந்தார். ஏதோ சந்தேகம் தோன்றி மற்றொரு வேலைக்கா ரனையும் கூப்பிட்டான் இருவருக்கும் சந்தேகம் அதிகரித்தது. கட்டிலுக்கருகில் போய் கூர்ந்து பார்த்தார்கள். அந்தோ! அப்புண்ணியாத்மா மண்

ணுலகை விட்டுப் போய் சற்று நேரம் ஆகிவிட்டி ருந்தது. தாங்க முடியாத துயரத்துடன் இளைய மகாராஜாவின் அரண்மனைக்கு ஓடிப்போய் விஷ யத்தைத் தெரிவித்தார்கள். அப்பொழுது அரண் மனையில் உண்டாகிய துயரத்தை விவரித்துக் கூறச் சாத்தியமில்லை.

அரண்மனைக் குறிப்புக்களில் மகாராஜாவின் மறைவைப்பற்றி எழுதியிருப்பது கீழ்வருமாறு:—

"1022-ஆம் மார்கழி மீ 13-உ சனிக்கிழமை இரவு, அசுவினி நக்ஷத்திரமும், பூர்வ பக்ஷம் தச மிதிதியும் கூடிய நாள் இரவு 25 நாழிகை அள வில் விருச்சிக ராசியில் ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சி பால ராம வர்ம குலசேகரப் பெருமாள் ஸ்வாதித் திருநாள் மகாராஜா, ஸ்வர்க்காரோகணம் செய்து விட்டார்." பெரிய அரண்மனை முல்லை மூட்டில் தெற்கு பள்ளியறையில் தேகவியோகமானர். கோ யிலிலிருந்து, மகாராஜாவின் உடலின்மேல் சார்த் துவதற்கு பட்டுத்துணி கொடுத்த விவரம் கோயில் குறிப்புக்களில் காண்கிறது:— "1022-ஆம் மார்கழி மீ காணிக்கை நடைவரவு வகை: 14-உ ஸ்ரீ பத் மநாப தாஸ வஞ்சி பாலராம வர்ம குலசேகரப்பெரு மாள் மூத்த மகாராஜா 1021-ஆம் ஆனி மீ 31-உ பத்திரதீபம் ஏற்றுவதற்கு கோயிலில் எழுந்தருளிய பிறகு, அந்நாள் முதல் காய்ச்சலும், பித்த வாயு வும், வாந்தியும், தேகத்தில் தளர்ச்சியும், சக்திக் குறைவும் உண்டாகவே, நாளது மாஸம் 5-உ முதல் உடல்நோய் அதிகமாய் 13-உ யன்று அஸ்த

மித்து 25 நாழிகை ஆன பிறகு விருச்சிக ராசி வேளையில் நோய் அசாத்தியமாய் ஸ்வர்க்கலோக ப்ராப்தியானர். ஸ்ரீ பத்மனபப் பெருமாள் கோயிலிலிருந்து நாட்டின் செங்கோல் வாங்கி குலசேகரப் பட்டம் ஏற்று, முடிசூடி, ஸ்ரீ பத்மநாபதாஸனென்கிற பெயர் பூண்டு செங்கோல் செலுத்தி வருகையில், மேற்கூறிய பெரிய மகாராஜா விண்ணுலகைச் சேர நேர்ந்தபோது, ஸ்ரீ பத்மநாபஸ்வாமி திருமேனியில் சார்த்தியிருந்த வீரகாளிப்பட்டு ஒன்றும், கோயில் பண்டாரத்திலிருந்து, ஒழிந்த நம்பியிடம் கொடுத்து அரண்மனைக்குக் கொண்டுபோய் இளைய மகாராஜாவினிடத்தில் சமர்ப்பித்து மகாராஜாவின் உடல்மேல் சார்த்துவதற்காக, நித்தியாரியோகம் கூடி அனுஜ்ஞையும் கழித்து ஸ்ரீ பத்மநாபப் பெருமாளின் சாற்றுபடி வகையில் பதினெட்டு முழம் இரண்டு வீதியில் வீரகாளிச்சேலை உரு ஒன்றும், ஸ்ரீ பண்டாரத்தில் பிராயச்சித்தம் முதலான வகையிலிருந்து 15 பணம் வாங்கி, 18 முழம் $2\frac{1}{4}$ வீதியில் கோடிக்கச்சை உரு ஒன்றும் வாரியம் கூவக்கர பத்மநாபன் தத்தன் வாங்கிக் கொண்டு தெக்கேடத்து ஒழிஞ்ச நம்பி இடவாடி விஷ்ணு ராமன் வசம் கொடுத்து மேல்படியான் அரண்மனைக்குக் கொண்டு வந்து இளைய மகாராஜாவின் திருக்கைகளில் சமர்ப்பித்து குலசேகரப் பெருமாள் அவர்களின் திருமேனியில் சார்த்தி யருளியதாகச் செலவு............''

அரண்மனையிலிருந்து எழும்பிய அழுகை ஓசை ஊரெங்கும் எதிரொலித்தது. ராஜகுடும்பத்திலுள்ள

வர்களும், பரிவாரங்களும், ஊழியர்களும், வாய்விட்டுக் கதறினார்கள், வெகு சீக்கிரத்தில் உத்தியோகஸ்தர்களும், பெரிய மனிதர்களும். பல்லாயிரக்கணக்கான பிரஜைகளும் அரண்மனையின் சுற்றுப்புறங்களில் திரளாகக் கூடினார்கள். முறைப்படி ஸகலச் சடங்குகளும் நடத்தப்பட்டு, மகாராஜாவின் பூத உடல் அடுத்தநாள் விதிப்படி ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது பிறகு புண்ணியாகமும், மாஸிகமும் மற்றச் சடங்குகளும் முறையே நடந்தன. 1023-ஆம் மகாராஜாவின் அஸ்தி காசி க்ஷேத்திரத்தில் கங்கையில் போடப்பட்டது (குறிப்புக்களில் 1025-ஆம் என்றும் இருக்கிறது) அஸ்தியை அரிக்காரர் வீரநாகபுரம் சுப்பராமய்யன் முதலியவர்கள் காசிக்குக் கொண்டுபோய் கங்கையில் போட்டு விட்டு, கங்காஸ்னானம் செய்து கங்கா ஜலத்தை எடுத்துக் கொண்டு வந்து அரண்மனையில் சேர்த்தார்கள். கங்கைக்குப் பூஜையும் நைவேத்தியமும் அர்ப்பிக்கப்பட்டன.

இப்படிச் சிறுவயதில் எதிர்பாராத விதத்தில் மன்னர் இவ்வுலகை விட்டு நீங்கியது நாட்டிற்கெல்லாம் பெரும் துயரத்தை உண்டாக்கியது. முறைப்படி குறித்த காலம் வரையில் நாட்டு மக்கள் துக்கம் கொண்டாடினார்கள். இளைய மகாராஜாவும் சாஸ்திர விதிப்படி கர்மங்களைச் செய்து ஒரு வருஷகாலம் தீக்ஷையும் கொண்டார்.

திருவிதாங்கூர் ராஜ்ஜியத்திலேயே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டிருந்த அந்த காலத்தில் பதினெட்டு வருஷ காலம் துன்பம் நிறைந்த

அரசாட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த மகாராஜா வின் வாழ்க்கை அவருடைய முப்பத்திநான்காம் வயதில் அவ்வாறு முடிவடைந்தது. எல்லா விதத் திலும் மேன்மை வாய்ந்த இம் மகானுடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றி நினைப்பவனெவனுக்கும், கொ ஞ்சமாவது ஆசைக் குறைவு உண்டாகாமலிருக் காது. அக்காலத்தில் வாழ்ந்திருந்த நாட்டுக்குடி களுக்கோவென்றால், அக்குறை சற்று அதிகமெ ன்றே கூறலாம். அக்காலத்திய திருவிதாங்கூ ரின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அம்சமென்ன வென்றால், மகாராஜாவின் இயற்கையான சுபா வப்பெருந்தன்மையும், அக்கால நிலையின் விரோ தமான போக்கும் ஒன்றுக்கொன்று தமக்குள் முட்டியதினால் விளைந்த இடைஞ்சல்கள் தான். பிறப்பதற்கு முன்பாகவே ராஜ்ஜிய உரிமையைப் பெற்று அவதரித்த அவரிடத்தில் ஓர் நல்லரசரி டம் இருக்க வேண்டிய லக்ஷணங்களும் குணங்களும் குடிகொண்டிருந்தன. “சக்தன் தம்பிரான்'' என் றும் ‘நரஸிம்மாவதாரம்'' என்றும் பிரஜைகள் அழைக்கும் விதத்தில் அவர் திடமான சுபாவமும், உண்மையான மனோபலமும் உள்ளவராகவிருந்தார். எவருக்கும் எவ்விதத்திலும் கீழ்ப்படிந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையில்லாதவர் அவர். இதற்கு உதாரணமாக—1005-ஆண்டில் சென்னை கவர்னர் திருவிதாங்கூருக்கு விஜயம் செய்ததைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டது. கவர்னரை நேரில் சந்திக்கும் பொழுது, துரை கேட்கக் கூடிய கேள்விகளுக்கு எப்படி பதில் கூறவேண்டுமென்

பதைப் பற்றி, கோயில் தம்பிரான் மகனுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார். சுயபுத்தியைப்பற்றி நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருந்த மகாராஜா வுக்கு தகப்பனரின் உபதேசங்கள் ரஸிக்கவில்லை. ஆனல் தந்தையின் பால் அளவிலா அன்பும், பக்தி யும் கொண்டிருந்த மகாராஜா எதிர்த்துப்பேச விரும்பாமல், தந்தை சொல்வதையெல்லாம் அமை தியுடன் கேட்டுக்கொண்டிருந்ததுடன், தனக்கு அச்சொற்கள் ரஸிக்கவில்லையென்பதை ஜாடையா கவும், நயமாகவும், அவருக்குத் தெரியும்படி செய்ய உபாயம் தேடிக்கொண்டிருந்தார். தந்தையின் போதனைகள் முழுதும் முடிந்ததும், "தாங்கள் எனக்கு சொல்லிக்கொடுக்காத விஷயம் ஏதாவ தொன்றை கவர்னர் பிரஸ்தாபித்தால், அதற்கு என் தந்தை விடைசொல்லிக் கொடுக்கவில்லை என்று கூறி விட்டால் போதுமல்லவா" என்று வினயமாகக் கேட்டுவிட்டார். இதனல் மகாராஜா வின் தன்னறிவின் சக்தி எவ்வாறிருந்ததென்று தெளிவாகிறது. ஆனலும், உயரிய பண்புவாய்ந்த மகாராஜா, மற்றவர்களுடன் அளவளாவும் போது வினயமாகவும், மரியாதையுடனும் பேசுவார். அதைக்கொண்டு அவர் வெகு சாந்த சுபாவமுள்ள வர், இன்பமாகவும், நட்புடனும் பேசுபவர் என்று பலரும் நினைத்ததில் வியப்பில்லை. ரெவரண்டு ஆப்ஸ் என்கிற கிருஸ்தவப் பாதிரியொருவர், தான் எழு திய "திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் இருபத்தி ரண்டு வருஷத்திய அனுபவங்கள்" என்கிற நூலில் மகாராஜாவைப் ப்பற்றி விவரிக்கும்போது, அவரை,

சாந்த சுபாவமுள்ளவர், படாடோபம் ஆடம்பரம் இவைகளில் விருப்பமுள்ளவர், மத அனுஷ்டானங்களில் மிகப் பற்றுள்ளவர் என்று கூறியிருக்கிறார். இவ்வித அபிப்பிராயங்கள் எல்லாம் விஷயம் நன்றாகத் தெரியாததனால் தான் உண்டாயிருக்கக் கூடும். பெரும் பக்தனும், ஆசாரசீலனுமாகிய மகாராஜாவின் தருமக் கொட்பாடு, பாதிரிக்கு நன்கு புலப்படவில்லையென்றால் ஆச்சரியப்படவேண்டியதில்லை.

மகாராஜாவாகப்பிறந்து ஸ்ரீ பத்மநாப ஸ்வாமிக்கு தாஸனாய் செங்கோலேந்தி வாழ்ந்தருளிய தான், அறம் வளர்த்துக் காப்பதற்கும் அதர்மத்தை நிர்மூலமாக ஒழிப்பதற்கும் கடமைப்பட்டவன் என்று உறுதியாக எண்ணியிருந்தார். தனக்கு குருநாதனாகிய ஸுப்பாராயரே அநீதியில் செல்கிறார் என்கிற சமிசயம் உண்டானதும், அவரை திவான் பதவியிலிருந்து விலக்கி விட சற்றும் தயங்கவில்லை. ரெட்டிராயர், மற்று சில உத்தியோகஸ்தர்கள் இவர்களின் விஷயத்திலும் இப்படியே நடந்துக்கொண்டார். மற்றொரு சமயம், ஒரு பேஷ்கார் லஞ்சம் வாங்குகிறவன் என்று அறிந்தவுடன், அவ்வுத்தியோகஸ்தனுக்குக் கீழ்வருமாறு கடிதம் எழுதினார்:—

"நீங்கள் சிறிய உற்தியோகத்திலிருந்த சமயத்தில், பொது காரியங்களை நிர்வகிப்பதில் காண்பித்த சாமர்த்தியத்தையும், உங்களுடைய நீடித்த உத்தியோக அனுபவத்தையும் கவனித்து உங்களை நாம் திவான் பேஷ்காராக உயர்த்தி நியமித்தோம். ஆயினும் நாளடைவில் துஷ்டர்களாகிய மற்றவர்களைப் போலவே

நீங்களும் முறைக்கு விரோதமாய் துராசைக்காரனுக மாறி விட்டீர். அதன் பயனுய் உங்கள் உத்தியோக நிர்வாகத்தில் பல தவறுகளும் ஏற்பட்டுவிட்டன. அதனால் உங்களை தற்போதிய உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டிருக்கிறது".

மகாராஜாவின் தூயமனப்பான்மையும், மன உறுதியும் இப்படிப்பட்டவை. அநியாயமான ஒரு செயலையும் பொறுக்கமாட்டார். மன்னிக்கவும் மாட்டார். ஆனால் அப்போதிய நிலை விபரீதமாக விருந்தது. பாலராம வர்ம மகாராஜாவின் அரசாட்சியின் கடைசிப்படி வரை, திருவிதாங்கூர் ராஜ்ஜியம் சுதந்திர ராஜ்ஜியமாகவிருந்தது அக்காலத்திலுண்டாகிய குழப்பங்களும் உள் நாட்டுப் பூசல்களும், இவ்விராஜ்ஜியத்தில் பிரிடிஷ் அரசாங்கம் தன் அதிகாரத்தை நிலைக்கச் சௌகரியமாயின. முதல் ரெஸிடென்டாயிருந்த கர்னல் மக்காலீ, அதிகார மமதையும், துர் அகங்காரமும் கொண்டவர். அவர் இச் சம்ஸ்தானத்தின் அதிகாரப் பொறுப்புக்களைச் சரிவர கவனிக்காமல் ஆங்கில அதிகாரத்தைச் செலுத்தி வந்தார். அவருடைய காலம் கழிந்து ஸ்வாதித் திருநாள் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்வரை, இடையில் 18 வருஷ காலம் இருந்தது. அந்த சிறிய கால அளவிற்குள் இவ்விராஜ்ஜியத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. மெக்காலீ துரைக்குப் பிறகு கர்னல் மன்றோ ரெஸிடெண்டாகவும், திவானுகவும், மகாராணிக்கு நெருங்கிய உதவியாளராகவும் இருந்தார். அத்துடன் ஆங்கிலேயரின் அதிகாரம் இந்நாட்டில் நன்றாக வேரூன்றிவிட்டது. பிற்காலத்திய ரெஸிடென்டு

கள் திவான் பதவியையும் வகிக்காமலிருந்த போதி
லும், அவர்களுக்கு அடைக்கலமாயிருந்த வேண்டப்
பட்டவர்கள்தான் வழக்கமாக திவான் உத்தியோகத்
தில் நியமிக்கப்பட்டுவந்தார்கள். அப்படிப்பட்டவர்
கள்தான் அவ்வுத்தியோகத்திற்குவரக்கூடும் என்
றும் ஆகிவிட்டது. மன்றோ துரையின் நண்பர்களா
கிய ஆரியங்குழி தேவன் பத்மநாபனும், ரெட்டிராய
ரும், வெங்கட்டராயரும் திவான் பதவிக்கு வந்தது
இதற்கு சான்றாகும். அக்காலத்தில் ரெஸிடென்
டின் மூலியமாயல்லாமல் சுதந்திரமாக ராஜாவால்
திவானாக நியமிக்கப்பட்டவர் ராமன் மேனவன் என்
பவர் ஒருவர்தான். இவரும் சொற்பகாலமே திவா
னாகவிருந்தார் ஆலப்புழை கம்மெர்ஷியல் ஏஜண்டு
காப்டன் கார்டனை, உத்தியோக சம்பந்தமாகிய சில
தவறுகளுக்காக சிக்ஷித்தார் என்கிற காரணத்தி
னால் ராமன் மேனவன் பேஷ்காரி கம்மிஷனராக
தரம் தாழ்ந்து திரும்பிப் போகவேண்டியதாயிற்று.
இப்படியிருந்த நிலையில் மகாராஜாவின் சுதந்திர
புத்திக்குச் சரியான போம்வழியில்லாமல்போனதில்
ஆச்சரியமொன்றுமில்லை. அவரோ, தனக்கு நம்பி
க்கையுள்ள திறமை வாய்ந்த மனிதர்களை மாத்திரமே
உத்தியோகத்தில் நியமிக்க ஆவல்கொண்டவர். ஆங்
கில அரசாங்கம் அதற்கு நேர் எதிராக, உத்தியோக
நியமன விஷயங்களில் மாறான முறைகளைக் கைக்
கொண்டிருந்தது. சகல விஷயங்களிலும் தங்களைப்
பின்பற்றி சொற்படி கேட்டு நடப்பவர்கள் தாங்கள்
பொறுக்கி எடுப்பவர்கள்தான் என்று ஆங்கில அர
சாங்கத்தார் நினைத்தார்கள். ஸுப்பாராயரின் நிய

மனத்தில் ரெஸிடெண்டு கர்னல் மாரிஸன் காட்டிய விரோத மனப்பான்மையைப்பற்றி முன்பே கூறப் பட்டது. உத்தியோக நிர்வாகத்தில் ஸுப்பாராயர் திறமையுடன் செயலாற்றி திருப்தியளித்திருந்தும், திருவிதாங்கூரில் அரசியல் சரியாக நடத்தப்படுகி றதா என்பதை நேரில் பரிசோதித்துப் பார்க்க சென்னை கவர்னரே இங்கு வந்தார். 1013-ஆம் வருஷத் தில் ஸுப்பராயர் வேலையை விட்டு வெங்கட்டராயர் திவானாக வந்தும், அவருடைய செயல்கள் ரெஸிடெ ண்டு டக்லஸ் துரைக்குப் பிடிக்காமல் போய் வெங்கட ராயர் பதவியிலிருந்து விலக வேண்டியதாயிற்று. பிறகு ஸுப்பாராயர் மீண்டும் பதவிக்கு வந்தது டக் லஸ் துரைக்கு வெகு திருப்தி. கல்லன் துரை ரெஸி டென்டானவுடன் நிலை முழுதும் மாறிவிட்டது. தனக்கு வெண்டியவராகிய கிருஷ்ணராயரை திவான் பதவிக்கு உயர்த்தும் வரைக்கும், துரை மகாராஜா வை மிகவும் துன்பப்படுத்திவிட்டார். ராஜாவாகப் பிறந்து சொந்த அதிகாரத்தையும், உரிமையையும் எவ்விதத்திலும் இழக்கமாட்டேன் என்று மகாராஜா பிடிவாதம் கொண்டார் அவருக்கேற்பட்ட பல துன் பங்களுக்கும் இடையூறுகளுக்கும் காரணம் அனேக மாய் இந்த பிடிவாத குணம்தான். திருவிதாங்கூரு க்கும் ஆங்கில அரசாங்கத்திற்கும் தொடர்பு ஏற் படுவதற்குமுன் ஸ்வாதித் திருநாள் அரசுபுரிந்திருந் தால் அவருடைய வாழ்க்கை எவ்வளவோ இன்பமா கவும் பயனுள்ளதாகவும் இருந்திருக்கும். ஏன்! ஆங்கிலேயர்களின் மேலதிகாரத்தை எப்படியாவது ஒப்புக்கொண்டு, அவர்களுடன் பழகவேண்டியதெ

ன்று மகாராஜாவுக்குத் தோன்றியிருந்தாலே போதுமாயிருந்திருக்கும். அவருடைய தம்பியாகிய உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்ம மகாராஜாவின்பால் இதே கல்லன் துரை பாராட்டி வந்த நட்பு மேற்கூறியதைத் தெளிவாக்கும். இப்படி ஆலோசித்துப் பார்த்தால், ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் வாழ்க்கை, காலநிலையில் ஒரு பெரும் மாறுதல் உண்டாகும் சமயத்தில் உயர்ந்து விளங்கி இந்நாட்டிற்கு ஓர் புகழ்ச்சுடராக சோபித்தது. இவ்வுணர்ச்சியினால் நாட்டுமக்கட்கு ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்களின் பால் மதிப்பு அளவு கடந்தது.

## 7. கலை வளர்ச்சி

அரசியல் துறையில் மகாராஜா அவர்கள் செய்து முடித்த அரிய செயல்களையும், அவர் ஆங்கில அரசாங்கத்தின் பால் கைகொண்ட உறுதியான நிலையையும் பற்றி முன்பே விவரிக்கப்பட்டது. அவருடைய அரசாட்சியின் மிகக் குறைந்த கால அளவில் அரசியல் துறையிலிருந்தது போலவே, அதற்கும் அதிக அளவில் கலைகளைப் பாதுகாப்பவர் என்கிற புகழைச் சம்பாதித்துவிட்டார். அவருடைய புகழ் பாரத நாடெங்கும் பரவி சிறப்புற்றோங்கியது. கல்வித் துறையிலும், கலைவளர்ச்சியிலும் அவர் செய்த அரும் தொண்டைப்பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

சிறு பிராயத்திலேயே, இசை, இலக்கியம், ஓவியக்கலை, பல பாஷைகள் இவைகளிலெல்லாம் பார்

ப்போர் வியக்கத்தக்க தேர்ச்சியையடைந்திருந்தார் அவர், என்பதை உலகம் அறிந்திருந்தது. அதிக துன்பம் நிறைந்த அரசாட்சியை ஏற்றுக்கொண்டு கூட அவருக்கு அவைகளில் ஊக்கம் குறையாமல் கூடிக்கொண்டே வந்தது. 100-ஐ கரமனை சுப்பிரமண்ணிய சாஸ்திரிகளை அரண்மனையில் பாராயணம் செய்வதற்கு நியமித்திருந்தார். பிறருடன் அளவளாவுவதில் மரியாதையும், ஆசார அநுஷ்டானங்களில் உறைந்த நிஷ்டையும், மத விசுவாசத்திலும் ஈச்வரபக்தியிலும் தளராத திடமனதும், புலவர்களுடனும் கலைஞர்களுடனும் அவர் காட்டிவந்த அன்பும் விசேஷமாக சங்கீத வித்துவான்களிடத்தில் அவர் கொண்ட பக்ஷமும் அவருடைய சுபாவத்தைச் சோபிக்கச் செய்தன. அவர் அக்காலத்தில் பாரதத்தில் வாழ்ந்த ஒரு பிரபல வாக்கேயகாரகனுகவும், திறமை வாய்ந்த கவியாகவும் விளங்கினார். எவ்வித கலையையும் அப்பியசித்து கற்றுணர்ந்தவர்களுக்கு அவர் விரும்பியதைக் கொடுக்கும் கல்ப விருக்ஷமாக விளங்கினார். அவருடைய அரசாட்சியின் காலத்தில் ராஜ சபை விக்கிரமாதித்தியன், போஜன் இவ்வரசர்களுடைய சபைகளை நினைப்பூட்டியது. அவரைப் பற்றி ஜே. எ. பிரௌன் துரை—"கல்வியின் பாலுள்ள ஆர்வத்தினாலும், மனதின் பண்பினாலும், அருமையான சிறந்த செய்யுட்களியற்றும் திறமையினாலும், பன்மொழிப் பயிர்ச்சியினாலும் மகாராஜா பாரதநாடெங்கும் புகழ் பெற்றிருந்தார்" (சங்குண்ணி மேனவனுடைய திருவிதாங்கூர் சரித்திரம்) என்று கூறுகிறார்.

இந்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அனேக வித்துவான்கள், கலைஞர்கள் முதலியோர்கள் மகாராஜாவின் ஆதரவைப் பெற்று திருவனந்தபுரத்தில் வசித்து வந்தார்கள். அவருடைய குருவாகிய ஹரிப்பாடு கொச்சுப்பிள்ளை வாரியரைப்பற்றி ஏற்கெனவே கூறப்பட்டது [ஸாகித்தியத்தில் அபாரமானபாண்டித்தியம் வாய்ந்திருந்த இரயிம்மன் தம்பியும், கிளிமானூர் வித்துவான் கோயில் தம்பிரானும் மகாராஜாவின் ஸதஸ்ஸிற்கு திலகம் போல் விளங்கினார்கள். "கவீந்திரன்" என்கிற பட்டப் பெயர் பூண்டு புகழ் வாய்ந்த கிளிமானூர் வித்துவான் கோயில் தம்பிரான், மகாராஜாவின் பிரீதியையும், மதிப்பையும் அதிக அளவில் பெற்றார். மகாராஜா வெளியில் எழுந்தருளும் போதெல்லாம், கூடவே போவது, சமயோசிதமாய் சம்பாஷணை செய்வது; எளிய நடையில் சுலபமாக கவி பாடுவது இவைகளால் மகாராஜாவின் இலக்கிய ஆர்வத்தை கொழுந்துவிட்டு எறியும்படி செய்வதையே தன்கடமையாக அவர் உணர்ந்திருந்தார். ஒரு சமயம், மகாராஜா ஆறாட்டிற்கு எழுந்தருளியபோது கூட இருந்த ஒரு கவி, வீதியின் இருபுறங்களிலும் மாளிகைகளில் கூட்டமாகக் குழுமியிருக்கும் பெண்மணிகளைக் குறித்து—

"ராகாசசாங்க கலிதாயத மாலிகேவ
ஸீமந்தினீவதன பங்க்திரிஹா விபாதி"

(பொருள்– பூர்ண சந்திரர்களைக் கோர்த்துக் கட்டி செய்யப்பட்ட மாலைகளைப்போல்—மாளிகைகளைப்போல் என்கிற பொருள் ஒலியும்படியாக—ஸுந்தரிகளுடைய முகங்கள் இங்குப் பிரகாசிக்கின்றன.)

இந்த ச்லோகத்தைக் கேட்ட மகாராஜா வித்துவான் கோயில் தம்பிரானைப் பார்த்து மிச்சம் இரண்டு வரிகளையும பூர்த்தி செய்யச் சொன்னார். தம்பிரானும் கீழ்வருமாறு அதைப் பாடி முடித்தார்:—

"கிஞ்சாத்ர பங்கஜதியாமதுபாவலீவ
தூராத் ஸமாபததி காமிஜனாக்ஷிபங்க்தி"

(பொருள்—இவை தாமரை மலர்களோவென்று மயங்கிப் போயிருக்கும் வண்டின் கூட்டங்களோ என்பதுபோல காமுகர்களின் கண்கள் தூரத்திலிருந்து நெருங்கி வருகின்றன).

கோயில் தம்பிரானுடைய ஆசு கவிதயை மகாராஜா மிகவும் மெச்சினார்.

கார்த்திகை திருநாள் மகாராஜாவின் காலத்திலிருந்து இரயிம்மன் தம்பி திருவிதாங்கூர் ராஜகுடும்பத்தின் அன்பைப் பெற்றிருந்தார். பார்வதீபாயி மகாராணியைப் புகழ்ந்து, மனதைக் கவரும்படியாகிய கும்மியொன்றை தம்பி இயற்றியிருக்கிறார். அந்தப் பாட்டில் இளவரசர்களாயிருந்த ஸ்வாதித் திருநாளையும், உத்திரம் திருநாளையும் பற்றி வருணித்திருக்கும் விதம் இவ்வாறு:

"ஹிதமொடு ராமவர்மேந்த்ரனென்னும் – நாட்டி
னிளமுற மார்த்தாண்டவர்மனென்னும்
அதிபுகழ்சேரும் — ரூபம் கண்டால்
மதிமதம் தீரும் — ஸ்மரனென்னு
ஸததமெல்லாரும் — கொண்டாடுன்ன
ஸோதரிருபேரும் — ஸ்ரீ ருக்மணி
க்ஷிதிதலேச்வரி ஸோதையும் — இவரொடு
மதிமுதா பார்வதி மகேச்வரி
மேதினிதன்னில் விளங்கிடுவான் — இன்னு
ஸாதரம்கும்மியடிச்சிடேணம்"

மகாராஜாவினிடத்தில் மிகுந்த பக்தியும் மரியாதையும் வைத்திருந்த தம்பி, அவரைப்பற்றிப் பல மூக்தங்களையும், பாட்டுக்களையும் இயற்றியிருக்கிறார். ஸதஸ்ஸில் வித்துவான்களின் கூட்டத்தில் குஞ்சு கிருஷ்ண பாகவதர், ஹரிப்பாட்டு ராமபாகவதர் முதலியவர்களும், முக்கியமானவர்கள். மற்றும் பல வித்துவான்களும் மகாராஜாவின் ஆதரவிற்குப் பாத்திரமாகி சம்மானங்கள் பெற்றிருந்தார்கள். மைசூர் தேசத்திய ஸிம்ஹாத்ரி சாஸ்திரிகள், ஹைதராபாது கிருஷ்ணப்ப சாஸ்திரிகள், கும்பகோணம் வாஸுதேவாச்சாரியர் சோழதேசத்து கிருஷ்ண சாஸ்திரிகள், திருநெல்வேலி வெங்குவய்யர் முதலியோர்களும் இக் கூட்டத்திலுட்பட்டவர்கள். சங்கரநாத ஜோஸியர் என்று புகழ்பெற்ற கேரள நாட்டு வித்துவானொருவர் பாஞ்சாலத்தில் ரஞ்சித் ஸிங்கு மகாராஜாவின் ஆப்த நண்பராகவும், மந்திரியைப் போலவும் இருந்து உயரிய தொண்டாற்றி, பிறகு திருவனந்தபுரத்திற்கு வந்து மகாராஜாவினால் ஆதரிக்கப்பட்டுவந்தார். அப்பெரியாருக்கு, சோதிடத்திலும், தரும சாஸ்திரத்திலும், ராஜ்ய தந்திரத்திலும் அளவு கடந்த அறிவும், தேர்ச்சியும் இருந்தன. அவரை அப்பீல் கோர்ட்டில் முதல் ஜட்ஜியாக மகாராஜா நியமித்தார். குதிரைகளைப் பற்றி நன்கறிந்தவரும், சென்னைவாசியும் ஆகிய வீராஸ்வாமி நாயுடு என்பவரையும் அப்பீல் கோர்ட்டு ஜட்ஜியாக நியமித்தார். நாயுடுவுக்குக் குதிரை லாயத்தின் மேற்பார்வைப் பொறுப்பும் கொடுக்கப்பட்டது. நாயுடுவின் ஆலோசனையின் பேரில் தான் 1017-ஆம ஆண்டில் புதிய தோர்ரதமும் செய்து முடிக்கப்பட்டது.

இலக்கியம் மொழி இவைகளை ஊக்கத்துடன் வளர்ப்பதற்கு மகாராஜா பலப் பிரத்தியேக முயற்சிகளைக் கைக்கொண்டார். ரெவரெண்டு பீட் என்கிற கிரிஸ்தவப் பாதிரியொருவர் அச்சமயத்தில் ஒரு மலையாள இலக்கண நூல் இயற்றியிருந்தார். ரெஸிடென்டினுடைய சிபாரிசை அநுசரித்து பாதிரிக்கு ரூ. 1000 நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது (1016-ஆம் மிதுன மாதம் 27-உ). புத்தன் சந்தையில் ஸ்தாபிக்கப்பட்ட நூல் நிலயமொன்றிற்கு ரூ. 1000 நன்கொடையாக நல்கப்பட்டது (3-2-1012). இந் நூல் நிலையம் பெருகி வளர்ந்து பிற்காலத்தில் "பப்ளிக் லைப்ரரீ" ஆயிற்று. ரெவரெண்டு பெயிலீ தொகுத்த மலையாள-ஆங்கில அகராதியைப் பிரசுரம் செய்வதற்காக மகாராஜா பேருதவி புரிந்தார். தன்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பெயிலீ துரை மகாராஜா அவர்களுக்கு அனுப்பிய கடிதம் இவ்வாறு:—

"மாட்சிமை தங்கிய திருவிதாங்கூர் மன்னர் பிரான்

அவர்களின் சமுகத்தில்:—

சமசத்திய பேராதரவிலும், புகழ் வாய்ந்த பெயரைக் கொண்டும் இந்நூலைப் பிரசுரிப்பதற்கும், அவ்விடத்தில் சமர்ப்பிப்பதற்கும் அடியேனுக்கு தயவு கூர்ந்து சம்மதித்தது மாதுமல்லாமல் பொருளுதவியும் செய்து ஊக்கம் காட்டிய அவ்விடத்திற்கு என்னுடைய குன்றாத நன்றியையும் தீராக் கடனையும் பணிவுடன் அறிவித்துக் கொள்கிறேன். அவ்விடத்திய பிரஜைகளின் இலக்கியச் சுவை வளரவும், பொதுக் கல்வி மேன்மேலும் அபிவிருத்தியடைந்து வரவும், சன்னிதானம் எப்பொழுதும் முயற்சி எடுக்கச் சித்தமாக இருப்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும்.

இதைப்போலுள்ள ஒரு பெரும் செயலில், சிரமும், கடும் உழைப்பும், அடிக்கடி பல்வேறு சொந்த அலுவல்களில் கவனம் செலுத்த வேண்டி வந்ததனால் ஏற்பட்ட காலதாமதமும், இந்நூல் சீக்கிரம் வெளிவர முடியாமல் தடைப்படுத்திவிட்டன.

மகாராஜா அவர்களுக்கு நீண்ட ஆயுளை அனுக்ரகித்து, உயரிய நோக்கங்களைக் கொண்ட நல்ல வித்தியாப்பியாச முறைகளை மகாராஜா இந்நாட்டில் நிலைநாட்டிப் போற்றி அதனால் அடையும் பயன்களைக் கண்டு களிக்குமாறு இறைவன் அருள் புரிவாராக.

சமுகத்திற்கு மிகவும் கடமைப்பட்ட

கோட்டையம்,
ஜூலை மீ 1846.

பணிவுள்ள விதேயன்,
பி. பெயிலி.

பல விஷயங்களிலும் தேர்ச்சிபெற்றிருந்த மகாராஜா அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டதுபோலவே உடற் பயிர்ச்சி முறைகளையும் ஊக்கத்துடன் போற்றிவந்தார். மலையாள முறைப்படி களரிப்பயற்று நன்றாக பரிசயமுள்ள மல்லர்களும், குஸ்தியில் சமர்த்தர்களாகிய பயில்வான்களும் அக்காலத்தில் திருவனந்தபுரத்திற்கு வந்து வசித்தார்கள். பல ராஜ்ஜியத்தினர்களையும், பல வகுப்பினர்களையும் காண்பதிலும், இவர்களைப் பரிசயப்படுத்திக் கொள்வதிலும் மகாராஜா மிகவும் ஊக்கம் கொண்டார். சில அராபியர்களையும், நீக்ரோ ஜாதிக்காரர்களையும், துர்க்கி தேசத்தினர்களையும், மலேயா, ஜப்பான், நேப்பாளம் முதலிய நாடுகளிலிருந்து பல ஆட்களையும் இந்நாட்டிற்கு வரவழைத்துத் திருவனந்தபுரத்தில் தங்கும்படி செய்தார். கைதேர்ந்த சர்க்கஸ் விளையாட்டுக்காரர்களையும், செப்பிடு வித்தைக்காரர்களையும்

அடிக்கடி வரவழைத்து அவர்களின் சாமர்த்தியத்திற்குத் தக்கவாறு சன்மானமளித்து வந்தார். சீனதேசத்திலிருந்துவந்த இரண்டு கண்கட்டி வித்தைக்காரர்களின் வித்தையின் திறமையைக் கண்டு மகாராஜா மிகவும் மெச்சினர் (1014-ஆம் சிங்க மீ 26-உ கணக்கு). சீனத்திலிருந்து இங்கு வசித்திருந்த ஆரம்ஸ்ட்ராப்பீஸுக்கு சைன வேலைகளில் திறமையிருப்பதைக் கண்டு மாதம் ரூ. 15 சம்பளம் கொடுக்க உத்தரவு போட்டார். தெற்குத் தெருவில் சில பிரஞ்சுக்காரர்கள் குதிரை விளையாட்டுக் காண்பித்து மன்னரிடத்திலிருந்து இரண்டு பதக்கங்களையும், மோதிரத்தையும் பரிசாகப் பெற்றார்கள். பிரசித்தி பெற்ற ஜோதிடர்களும் வைத்தியர்களும் மகாராஜாவால் மதிக்கப் பெற்று அவருடைய ஆதரவில் வாழ்ந்து வந்தார்கள். டில்லியிலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் இரண்டு பிரசித்த யுனனி வைத்தியர்களை மகாராஜா இந்நாட்டிற்கு வரவழைத்தார். சித்திரமெழுதுவதிலும் மகாராஜா கவனத்தைச் செலுத்தினர். ஓவியக் கலை வல்லுணர்களுக்கு மகாராஜா அதிக ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். 1012-ஆம் தஞ்சாவூர்க்காரனகிய தாஸினி என்கிற சித்திரமெழுதுவோனை இங்கு மாதம் ரூ 45 சம்பளத்தில் நியமித்தார். 1016-ஆம் கும்பமாதத்தில் கோயில் சுவற்களில் சித்திரங்களைத் தீட்ட ஏற்பாடு செய்தார். சுருங்கச் சொல்லின் மகாராஜாவின் ஆதரவும் உதவியும் பெறாத ஒரு கலையாவது வித்தையாவது இல்லையென்று உறுதியாகக் கூறலாம்.

மகாராஜாவுக்கு சங்கீதத்திலிருக்கும் அபாரப் ரீதியை அறிந்து பற்பல ஸங்கீத வித்துவான்கள் இந்நாட்டிற்கு வந்தனர். மைசூர், தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்து பிரசித்த வித்துவான்களை மகாராஜாவே அழைத்தார். அவர்களுக்குத் தகுந்த சம்பளங்களை விதித்து வசிக்க வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தார். ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த நாகரத்தினம் என்கிற நாட்டியப் பெண்ணுக்கும் தஞ்சாவூர் பிச்சு பாகவதருக்கும், மற்ற நாட்டியக் காரர்களுக்கும், பட்டத்திற்கு வரும் முன்பாகவே மகாராஜா பரிசுகளை வழங்கியதாக முன்பே கூறப் பட்டது திருச்செந்தூர் ராமநாதமாணிக்கம் எனப் படும் மோகினியாட்டக்காரிக்கு ரூ 1400 சம்மானம் கொடுக்கப்பட்டது. (1005-ஆம் கும்ப மீ 11-உ) இதைப்போலவே மைசூரிலிருந்து வந்த அனந்த ராமன், முகுந்த ராமன், தஞ்சாவூரிலிருந்து வந்த தாஸி மங்கம்மாள், காளஹஸ்தி சிவராம சாஸ்திரி கள், குவாலியரிலிருந்து வந்த லக்ஷ்மண தாஸ் முத லிய பல சங்கீத வித்வான்களும் மகாராஜாவினி டத்தில் பல சௌகரியங்களையும் சம்மானங்களை யும் அடைந்தார்கள்.

ராஜ சபையிலிருந்த சங்கீத வித்துவான்களில் முக்கியமானவர்களெல்லோரும் தஞ்சாவூர்க்காரர் கள் அவர்களில் பிரதானமானவர்கள் நட்டுவவடி வேலுவும், ரங்கய்யங்கார் என்பவரும் ஆவார்கள். ஸ்வரஜித்து வாத்தியம் வாசிப்பதில் வெகு சமர்த்த ரன ஸையத் ஸுல்தான் எனப்படும் முஸ்லீம் வித்துவானும் மகாராஜாவின் தனி அன்புக்குப்

பாத்திரமானவர். தஞ்சாவூர்க்காரராகிய சிந்தாமணி என்பவரொருவரை, ஸாரங்கி வாத்தியம் வாசிப்பதற்காக அரண்மனை வித்துவானாக 250 பணம் சம்பளத்தில் நியமித்தார். அதேபோல் தஞ்சாவூர் வல்லபராயர் என்கிற ஒரு சங்கீத வித்துவானை அரண்மனையில் உத்தியோகம் கொடுத்து 50 பணம் மாதச் சம்பளத்தில் நியமித்தார். நீலாள் என்கிற மோஹினியாட்டக்காரி தஞ்சாவூரிலிருந்து வந்து சிலகாலம் திருவனந்தபுரத்தில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. வடிவேலுவுடன் சின்னய்யா, பழனியாண்டி முதலிய வித்துவான்களும் இருந்தார்கள். மேருஸ்வாமி என்று பழக்கத்தில் அறியப்பட்டவராகிய அனந்த பத்மநாப கோஸ்வாமி எனப்படும் பிரபல பாடகரும் அக்காலத்தில் ராஜ சபைக்கோர் திலகமாக விளங்கியவர். தஞ்சை மன்னர்களின் அரச சபையில் பெரும் புகழ்பெற்ற மேருஸ்வாமி, இந்துஸ்தானி சங்கீதத்தில் கரை கடந்த தேர்ச்சியுள்ளவர். அவருக்கு மாதச் சம்பளம் ரூ 110, ஒரு பல்லக்கு, ராஜமரியாதைகள் இவைகளெல்லாம் மகாராஜாவால் அளிக்கப்பட்டன. பாலக்காடு சேஷ பாகவதர் முதலியவர்களுக்கும் தலை நகரில் வசிக்கச் சௌகரியங்கள் செய்யப்பட்டன. அரண்மனையில் ஒரு இந்துஸ்தானி நாட்டியக்குழு ஏற்படுத்தி அதற்காகக் கள்ளிக்கோட்டையிலிருந்து மூன்று தாஸிகளையும், ஐந்து நட்டுவர்களையும், மேளக்காரர்களையும் வரவழைத்தார். மல்யுத்தப்போட்டிகள் நடத்துவதற்காக தஞ்சாவூரிலிருந்து சில மல் வீரர்களையும் மகாராஜாவின்

உத்தரவுபடி இங்கு வரவழைத்திருந்தார்கள். 1016-ஆம் ஆவணி மாதத்திலிருந்து மைஸூர் அல்லாவுத்தீன் என்கிற சங்கீத வித்துவானை அரண்மனை நாட்டியக் குழுவில் ஓர் அங்கமாக நியமிக்க உத்தரவாயிற்று.

மேற்கூறிய விவரங்களினால், மகாராஜாவுக்கு தென்னாட்டு சங்கீதத்திலும், பிற நாட்டு சங்கீதத்திலும் எவ்வளவு அபிமானமும் அன்பும் இருந்தன என்பது தெளிவாகும். பலவித வாத்தியங்களும், இசைக் கருவிகளும், மற்ற இசைப் பொருள்களும் அதிகச் செலவில் வாங்கப்பட்டன. ஸ்வரஜித் செய்து கொண்டு வந்த கடச்சல் நாராயணனுக்கு 1011-ஆம் த்தில் வீரசங்கிலி பரிசாக அளிக்கப்பட்டது. ஆசாரி நாவாயிக்குளம் கொச்சுகுஞ்சு என்பவருக்கும், ஒரு இசைக்கருவி (வாத்தியம்) செய்து கொடுத்ததற்காக வீரசங்கிலி பரிசாக அளிக்கப்பட்டது. இதைப்போல் பல உதாரணங்களும் இருக்கின்றன.

# 8. மகாராஜா அவர்கள் இயற்றிய க்ருதிகள்.

பிரசித்த கவியும், உத்தமவாக்கேய காரகருமாகிய ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் முக்கியமான ஸாகித்தியங்கள் பெரும் பாலும் வடமொழியில்தான் இயற்றப்பட்டவை. "உத்ஸவப் பிரபந்தம்," "அஜாமிளோபாக்கியானம்," "குசேலோ

பாக்கியானம்," "ஸ்யானந்தூர புரவர்ணனம்," "பக்திமஞ்சரி" என்கிற கிரந்தங்கள் அவைகளில் முக்கியமானவை. ஸங்கீதத்திலும், கீர்த்தனங்கள் அநேகமாய் வடமொழியில் தானிருக்கின்றன. மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்துஸ்தானி முதலிய பல மொழிகளிலும் அவர் இயற்றிய கீர்த்தனங்கள் இருக்கின்றன.

அவர் இயற்றிய ஸம்ஸ்க்ரித நூல்களில் முதன்மைவாய்ந்தது "பக்தி மஞ்சரி" என்கிற கிரந்தம். வேலப்புத்தூர்ப் பட்டத்திரிப்பாட்டின் 'நாராயணீய" த்தை ஒரு மேற்கோளாகக்கொண்டு இயற்றப்பட்டது அந்நூல். ஆனல் ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறது அதாவது நாராயணீயத்திலிருப்பது போல் தசகங்களாகத் தொகுத்து இயற்றப்படவில்லை. பத்து சதகங்களைக் கொண்டது. ஸ்ரீ பத்மநாபனுடைய திருவடித் தாமரைகளில் அசைவில்லாத பக்தியுண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்து ச்லோகங்கள் தொடங்கப்படுகின்றன.

"ஆனந்தாம்ருத ஸாரஸந்ததிமய
ஸ்வராஜ்ய மூர்த்தாபிஷி
க்தாத்மன்னயபுஜநாப! தேசரணயோர்
நத்வா முஹுஸ்ஸாதரம்
ஏதாவத் புனரர்த்தயே குருக்ருபா
மாபத்ஸு ஸம்பத்ஸுவா
பூயாத் த்வத் பதபத்மயோரவிரதம்
பக்திர்மமா f சஞ்சலா !!"

(பொருள்—ஸ்வராஜ்ய ஸம்ராட்டாகிய ஸ்ரீ பத்மநாபா! தேவரீர் பாதங்களில் வணங்கி இரைநத்தான் அடியேன் வேண்டிக் கொள்கிறேன்—ஆபத்திலும், ஸம்பத்திலும் தேவரீருடைய திருவடிகளில் அரைவில்லாத பக்தி உண்டாகும்படி கிருபை செய்தருளவேண்டும்)

முதல் நான்கு சதகங்களில் பிரமாணங்களையும், புராண வரலாறுகளையும் ஆராய்ந்து பக்தியின் சிறப்பை நிலைக்கிறார். கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், முதலிய ஒன்பது முறைகளால் பக்தி பிறக்கும் உபாயங்களை திட்டப்படுத்தி ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கதைகளாலும், திருஷ்டாந்தங்களாலும் நிரூபணம் செய்கிறார். பாகவதம் விஷ்ணுபுராணம் முதலிய புராண நூல்களிலிருந்து அரிய விஷயங்களை எடுத்துக்கையாளுகிறார். கிரந்தத்தின் முக்கிய நோக்கம் தனக்கு உண்மையான பக்தி உண்டாகவேண்டும் என்பதே.

"புஷ்பஸங்கவசாத்தி ஸூத்ரமபி
ஊஹ்யதேசிரஸிமானவைர்யதா
வர்ண்ய வைபவவசாத் ஸதாம்முதே
ஸ்யாத்த தேயமபி பக்திமஞ்சரீ"

(பொருள்—பூவினுடன் நாரையும் சேர்த்து மனிதர்கள் தலையில் சூட்டிக்கொள்வது போலவே, வருணித்திருக்கும் கதைகளின் சிறப்பினால் இந்த பக்தி மஞ்சரியானது நல்லோர்களின் மனதிற்கு இன்பத்தைத் தரும்)

லளிதமாகிய பதங்களின் அமைப்பும், பக்தி ரஸம் ததும்பும் பாவங்களும், அழகிய வர்ணனைகளும், புராண நூல்களை நினைப்பூட்டும் நோக்கங்களின் சிறப்பும் ஒன்று சேர்ந்து இந்நூலை ஓர் பெ

ரும் காவ்வியமாக்கிவிடுகின்றன. மகாராஜாவினல் இயற்றப்பட்ட மற்ற கிரந்தங்களைப் போலவே, இதிலும், குலதெய்வமாகிய ஸ்ரீ பத்மநாபனின் அருளை நாடுவதுதான் முக்கிய நோக்கம்.

திருவிதாங்கூரில் பழைய நூல்களை பிரசித்தப் படுத்துவதற்கென்று ஏற்பட்ட நிலையத்திலிருந்து முதன் முதல் வெளிப்பட்ட நூல் இதுதான். ஸ்ரீமூலம் மகாராஜாவின் கட்டளையை அனுசரித்து, ஸ்வாதித் திருநாள் மகாராஜாவினல் இயற்றப்பட்ட ஸ்ரீ பத்மநாப ஸ்துதியே விஷயமாகக் கொண்ட இக் கிரந்தம் வெளிபடுத்தப்பட்து (கி. பி. 1904)

ஸ்வாதித் திருநாளால் இயற்றப்பட்ட மற்ஞெரு பிரசித்த கிரந்தம்– "ஸ்யானந்தூரபுரவர்ணனப் பிரபந்தம்" இதுவும் ஸம்ஸ்க்ரிதத்தில் எழுதப்பட்டது. திருவனந்தபுரத்தின் வரலாற்றைக் குறித்தது இந்நூல் என்பது நூலின் பெயராலே தெளிவாகும். இந்நூலின் அமைப்பு "ராமாயண சம்பு" என்கிற கிரந்தத்தை இயற்றிய போஜராஜனுடைய கவிதையை ஒத்திருக்கிறது இதுவும் ஒரு சம்பு காவியம் தான். இதற்கு ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜாவின் தந்தையாகிய ராஜராஜவர்ம கோயில் தம்பிரான் இயற்றிய "ஸுந்தரி" எனப்படும் உரையுடன் இப்பிரபந்தம் 1920-ஆல் ஓரியண்டல் மானுஸ்க்ரிப்டு லைப்ரரியால் பிரசுரிக்கப்பட்டது. மகாராஜாவின் உத்தரவின்படி, பெரிய கோயிலில் ஒவ்வொரு நாளும் இந்நூல் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

பத்து ஸ்தபகங்களாக வகுக்கப்பட்ட இக்கிரந்தத்தில் அடங்கிய விஷயம்—திருவனந்தபுரத்தில் பத்மநாப ஸ்வாமி கோவில் பிரதிஷ்டையைப்பற்றியது. கோயிலின் ஐதிஹியமும் அடங்கியுள்ளது. பகவான் குழந்தைவடிவத்தில் திவாகர மகரிஷிக்குத் தோன்றுவதும், குழந்தையின் விஷமவிளையாட்டுக்களில் முனிவருக்கு வெறுப்புண்டாவதும், அனந்தன் காட்டில் குழந்தை கண்ணுக்குக் காணுமல் மறைந்து போவதும் முனிவர் பகவானைப் பிரார்த்தித்துச் சந்தோஷப்படுத்தித் திரும்பவும் பகவானின் தரிசனம் காண்பதும், ஸ்ரீ பத்மநாப விக்கிரகப்ரதிஷ்டையும், கோயிலில் வருஷம்தோறும் நடக்கும் உற்சவங்கள், ஆருட்டு, லக்ஷதீபம் இவைகளெல்லாம் மிகவும் மனோகரமாய் இந்நூலில் வருணிக்கப்பட்டுள்ளன. கீழ்வரும் ச்லோகத்தினுல், செய்யுள் நடைச் சிறப்பை எளிதில் அறியலாம்.

"ஜாயாயஸ்ய ஜகத்பதேர் பகவதீஸம்பத் ஸ்வரூபா, க்ரிகம்!
த்ரை லோக்யம், தனயௌ விரிஞ்சமதனௌ,ப்ரித்யாதய:
ஸுரேந்த்ராதய:!!!
திவ்யஜ்ஞானஸமேதநாரத முகாயஸ்யே சிதுர்வந்தினே!
மாகாத்ம்யம் கலுதஸ்யவக்துமமிதம் கோவாபடுஸ்யாத் புவி?

லலிதமாகவும் இன்பமாகவும் கவிபாடுவதில் மகாராஜாவுக்கு அபாரமான திறமையிருந்தது என்பதை கீழ்க்காணும் விருத்தத்தினுல் அறியலாம்.

"கதாசித் ஸம்ப்ராப்த : புனரபிஸபச்சாத்புவி முனே:!
கராப்யாம் பாதோஜஸ்மயஹ்ருதிபராப்யாமதஜவாத்!
பிதாயைனம்நேத்ரத்ரயமிஹ ஸஹாஸோ f திமதுரம்!
முதாபப்ரச்சைனம்தத பிஹிதவான் கஸ்தவத்ரிசௌ!!"

ஸ்ரீ பத்மநாபனுடைய அன்பு உண்டாகப் பிரா ர்த்தித்துக்கொண்டு கவி கிரந்தத்தை முடிக்கிறார்:—

"ஸ்வாதீஜாதேன சூடாத்ருதஸரஸிஜநாபாங்க்ரியுக்மேன லக்ஷ்மீ
ராஜ்ஞீபுத்ரேணவஞ்சீச்வரகுல ஜனுஷாராமவர்மாபி தேன!!
பக்த்யுத்ரே கேணசச்வத் குருவரக்ரிபயாநிர்மிதம் சம்பு காவ்யம்
ஸ்யானந்தூரேச்வரஸ்யப்ரமிதமுபஹ்ரிதம்சம், ஸதாலம் நிதத்யாத்!!

"ஸ்ரீ பத்மநாப சதகம்" என்பது பத்து சதகங்களடங்கிய ஸம்ஸ்க்ரித கிரந்தம். இந்நூலும் ஏறக்குறைய "நாராயணீய"த்தின் நடையைப்பின்பற்றியிருக்கிறது. பத்மநாபனின் மகிமை, பக்திப்பிரார்த்தனே, கேசாதி பாதாந்தவர்ணனம், லோகஸ்ருஷ்டி, மத்ஸ்யாதி அவதாரங்கள், பக்திமார்க்க வர்ணனே இவைகளெல்லாம் இந்நூலில் உள்ளடக்கம்.

"முகனுப்ராஸ, அந்த்ய ப்ராஸவ்யவஸ்தா" என்கிற மற்ருெரு நூலும் மகாராஜாவால் இயற்றப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அதின் மலையாள ரூபத்தைப் பற்றி சிதம்பரவாத்தியாரவர்கள் பிரஸ்தாபித்திருக்கிருர். அதிலிருந்து ஒரு பகுதியையும் அவர் எடுத்துக் கூறுகிருர்:— "சங்கீத சம்பந்தமாகிய ஸாகித்தியங்களில் வழங்கப்பட்டுவரும் சொற்களும், சொல்லணிகளும் (அலங்காரங்கள்) 'முகன' என்றும், 'ப்ராஸம்' என்றும் 'அந்த்ய ப்ராஸமென்றும்' மூன்று விதத்தில் விவகாரம் செய்யப்பட்டிருக்கின்றன அம்மூன்றுவகைகளும் விவரிக்கப்பட்டிருப்பதனல் அவைகளைப்பற்றி விரிவாக அறிய சாத்

தியமாகிறது. ஆனால் இவைகளுக்கு ஒருவிதமாகிய முறை இலக்கணத்துடன் தெலுங்கு தமிழ் பாஷைகளில் இருக்கிறதென்று ஒப்புக்கொண்டாலும், வியாகரணப்பிரயோகங்களுக்கு எட்டிய ஸம்ஸ்க்ரித முறைக்கு, மேற்கூறியவைகளில் சில விரோதமாக இருப்பதனாலும், சேஷய்யங்காருடைய கீர்த்தனங்கள் ஸம்ஸ்க்ரிதத்திலேயே இருப்பதனாலும் ஸம்ஸ்க்ரித முறைகள்தான் ஒப்புக்கொள்ளப்படவேண்டும்." என்று கிரந்தம் ஆரம்பமாகிறது. இந்த மலையாளப் பிரதி அரண்மனை நூல் நிலயத்திலிருந்து கிடைத்தது. அது மகாராஜாவினால் கைப்பட எழுதப்பட்டதென்று சொல்கிறார்கள். இக்கிரந்தத்தின் ஸம்ஸ்க்ரிதப் பிரதி தஞ்சாவூரிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு, திருவிதாங்கூர் யூனிவர்ஸிடி ஓரியன்டல் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரியால் பிரசுரிக்கப்பட்டது- (Vol II No. I. April 1946-Journal of the Travancore University Mss. Library)- ஸங்கீதக்ரிதிகளில் உபயோகிக்க வேண்டிய ப்ராஸங்களைப் பற்றி விவரிக்கும் இந்நூல் மிகவும் உபயோகமானது.

ஸ்ரீ. கெ. சிதம்பரவாத்தியாரவர்கள் 1916-ம் வருஷத்தில் வெளிப்படுத்தியிருக்கும் ஸ்வாதித் திருநாள் க்ரிதிகளில்-கீர்த்தனங்கள், உபாக்கியானங்கள், வர்ணங்கள், பதங்கள், தில்லானக்கள் என்கிற ஐந்து வகைகளை விவரித்துக் கூறுகிறார். கணபதி கீர்த்தனம் ஒன்று, ஸரஸ்வதியைக்குறித்த நவராத்திரிக் கீர்த்தனங்கள் ஒன்பது, விஷ்ணுபரமாகியவை 175. உபாக்கியானவகையில் ஏற்கெனவே கூறப்பட்ட குசேலோபாக்கியானம் முதலியவை உள்பட்டவை.

விஷ்ணுபரமாகிய கீர்த்தனங்களில்—பொதுவாய் விஷ்ணுவைக் குறிப்பவை, ஸ்ரீ பத்மநாபனைப் பற்றிய கீர்த்தனங்கள், ஸ்ரீந்ரிஸிம்ஹ கீர்த்தனங்கள், ஸ்ரீராமபரமாகிய கீர்த்தனங்கள், சிவகீர்த்தனங்கள், ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியவை, ஸுப்ரமண்யக் கடவுளைப் பற்றியவை, தேவியைக்குறிப்பவை, வைராக்கிய விஷயமானவை, நவரத்னமாலிகா கீர்த்தனங்கள், ஹிந்திபாஷையிலுள்ளவை, முதலியவைகளடங்கியுள்ளன. விஷ்ணுபரமாகிய கீர்த்தனங்களின் கூட்டத்தில் சிவபரமாகியவைகளையும், மற்றுள்ளவைகளையும் மகாராஜா ஏன் சேர்த்திருக்கிறார் என்பது தெரியவில்லை. ஸ்ரீகண்டேச்வரன், சுசீந்திரம் ஸ்தாணுமாலயமூர்த்தி, பத்மநாபபுரத்து ஆனந்தவல்லீதேவி, குமாரநல்லூர் பகவதி, வைக்கத்தப்பன், ஹரிப்பாடு ஸுப்ரமண்யஸ்வாமி, ஆற்றுங்கல் பள்ளியறை பகவதி முதலிய இஷ்டதேவதா கீர்த்தனங்களும் இக்கூட்டத்தில் காண்கின்றன. மொழி வழியில் பிரித்தால் ஸம்ஸ்க்ரிதத்தில் 150, ஹிந்தியில் 37, கன்னடத்தில் 1 காண்கின்றன.

உதாரணமாக சில கீர்த்தனங்களின் சிற்சில பகுதிகளை அடியில் காண்க:—

(ஸ்ரீமான் சிதம்பர வாத்தியாரவர்களால் தொகுக்கப்பட்டவைகளிலிருந்து எடுத்தது. கொடுத்திருக்கும் எண்கள் கீர்த்தனங்களின் லக்கத்தைக் குறிப்பவை)

நவரத்திரி கீர்த்தனம்—முதல் நாள். ஜி-4

ராகம்: சங்கராபரணம்--தாளம்: செம்படை

"பல்லவி: தேவி ஜகஜ்ஜனனி தேஹிக்ரிபயா மமதாவக
சரண பக்திம்

அ: பல்லவி : தேவ மகுடமணி தேதீப்யமானபாதே
கேவலானந்த பூர்ணே கீரஸுவாணிவாணி (தேவி

சரணம் : வீணபுஸ்ககரஞ்சிதகரதல
விகஸித கஞ்சவரோ f ம்பிகே!
வேணீமஞ்சிம புஞ்சவிநிர்ஜ்ஜித
வித்தகஞகன மாலிகே!
ஏணீமத வினிவாரண நிபுண
தரேக்ஷண ஹ்ரிதநதபாதகே
சாணோல்லீட மஹாமணிபூஷண
சாலினி புதஜன பாலிகே
ப்ரீணிதமுனிகேயேத்ருஹிணஜாயே
பரமமேயே நிரபாயே (தேவி

* * * * *
* * * * *"

(பாக்கி 2 சரணங்கள் விடப்படிருக்கின்றன)

நவராத்திரியில் ஒன்பது நாட்களும் அரண்மனேயில் ஸரஸ்வதீபூஜை ஸகல வைபவங்களுடன் நடந்து வருகிறதல்லவா? ஒன்பது நாட்களுடைய பூஜையை உத்தேசித்து ஒன்பது கீர்த்தனங்களே மகாராஜா தனியாக இயற்றினர். இன்றைக்கும் நவராத்திரி பூஜா சமயத்தில் அக்கீர்த்தனங்கள் முறையே பாடப்பட்டு வருகின்றன.

குலதெய்வமாகிய ஸ்ரீ பத்மநாபனின்பால் மகாராஜாவுக்கிருந்த அளவுகடந்த பக்தியை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், விஷ்ணுபரமாகிய கீர்த்தனங்களே மகாராஜா இயற்றியருளினர். உதாரணமாய் ஒரு கீர்த்தனம் அடியில் கூறப்பட்டிருக்கிறது

ராகம்: செஞ்சுருட்டி—தாளம்: செம்படை ஜி-23

பல்லவி : கலயே ஸ்ரீகமலநயனசரணே

அ: ப: கலயே கமலாஸனுதி ஸகலவிபுத சரணே

ச. 1. பவபயபரஹரணே பாஸுரருசிபரணே
பஜனசீலஜனமனோபிலஷிதவரவிதரணே (கலயே

2. ஸரஸிஜமதஹரணே ஸாதுமதுவிஹரணே
ஸகலலோகதுரிதஹாரி குலிசகலசஹரணே கலயே

3. ஜகதுருஸுககரணே ஜாதவிபினசரணே
ஜலஜநாப சரணதாஸ விபுலதுசலகரணே (கலயே

வைராக்கிய கீர்த்தனங்கள் (வேதாந்த பரமாகியவை) விஷ்ணுபக்தியின் சிறப்பைக் கைகொண்டவை. உலக இன்பங்களைத் துறந்து விஷ்ணுத்தியானத்தில் ஆழ்ந்திருக்கும் கவியின் நினைவுகள், பக்தி ததும்பும் விதத்திலிருக்கின்றன.

உதாரணம்: ராகம்: சுத்தபைரவி—தாளம்: அடந்தை ஜி-135

பல்லவி: விஹரமானஸ ஸதா தேவே நித்யம்

அ: ப: வஹஸி கிமுத மமதாம்வத ஹாஸம் ஸாரே (விஹர

ச: 1. க்ஷணபங்குரம் அவேஹிதேஹம் ஹந்த
சஞ்சலதாம் ஜஹிமாகுருமோஹம்
ப்ரணயம் குருமாதவ சரிதே திவ்ய
பாவனதர லீலா ரஸாம்ரித பரிதே (விஹர

2. கலயமாமா வித்யா டோபம், ஸாது
ஹலஹலமாம்ஸ்மரதாருணபாபம்
கலஸௌஹ்ரிதம் மாகுருஹீனம்
கோரகலுஷநிரயபாதபரமநிதானம் (விஹர

3. கருணம் குருஸததம், லோகம் ஸர்வம்
கலபாத்மம ஸமயே; ஸந்த்யஜ சோகம்
ஸரஸஜலத ஸந்நிசாபம் நித்யம்
ஸர்வாத்மனு பஜ ஸ்ரீ பத்மநாபம் (விஹர

நவரத்னமாலிகா கீர்த்தனங்கள் விவரிக்கும் விஷயங்கள் திருமாலின் திருநாமத்தைக் கேட்பது,

பாடுவது, நினைப்பது, திருவடி பணிவது, அருச்சனை செய்வது, வந்தனம், தொண்டாற்றுவது, நட்பைய டைவது, தன்னையே அர்ப்பிப்பது என்பவையாம்.

ச்லோகம்:— "ச்ருதிர்வரத கீர்த்தனம் ச்ரவண மங்க்ரிஸம் ஸேவனம்
ரமாவர! ததார்ச்சனம் தவபிசவந்தனம் தாஸதா
த்வயைவஸஹஸக்யமச்சயுத! நிவேதனம் சாத்மன
ஸ்த்வயீதி நவதா ஸ்மரிதாபவதி பக்திரத்யுத்தமா"

என்கிற பிரமாணத்தை ஒட்டிய முறையில் இக் கீர்த்தனங்கள் அமைந்திருக்கின்றன.

ஹிந்தி பாஷையில் மகாராஜா இயற்றியிருக்கும் கீர்த்தனங்கள் கேட்பதற்கு இன்பமாகவும், மனதைக் கவருபவைகளாகவும் இருக்கின்றன.

உதாரணம்: ராகம்—தன்யாசி: தாளம்—சௌதாளம். ஜி-138

1. ஜமுனகினாரே ப்யாரேகதமதர மோஹன
பாஸுரீ பஜாவே ஸகி குஞ்சபவன்மேம்

2. மோர்பிஞ்சகனே மாலமகராக்ருதிகுண்டல
மகுடாதிகபூஷணசோபாதேததனமேம்
பத்மநாபதீனபந்து மேரோதாபஹரோ
ப்ரபுகோபீநாத கிரிதர ராஜோமேரேமன்மேம்

மகாராஜா இயற்றியருளிய கீர்த்தனங்களின் முடிவிலெல்லாம் ஸ்ரீ பத்மநாபனுடைய திருநாமம் முத்திரையாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

குசேலோபாக்யானம், அஜாமிளோபாக்யானம், உத்ஸவப் பிரபந்தங்கள் இவைகளெல்லாம் பிரபந்தக்ரந்தங்களிலுட்பட்டவை. இக்காலங்களில் ஹரி கதாகாலக்ஷேபம் எனப்பட்டு உலகப்பிரசித்திய டைந்திருக்கும் கதாப்பிரசங்கங்களில் இவை உப

யோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மகாராஷ்டிர தேசம் முதலிய இடங்களில் வெகுகாலமாக பழக்கத்திலிருந்த இக்கதாகாலக்ஷேபங்களை, ஸ்வாதித் திருநாள் மகாராஜாதான் முதன் முதலாக இந்நாட்டிற்குக்கொண்டுவந்தார். அவைகள் வெகு சீக்கிரத்தில் பழக்கத்தில் வந்தன. தஞ்சாவூரில் அரசு புரிந்த ஸ்ரீசரபோஜி மகாராஜாவின் சபையில் புகழுடன் ஓர் திலகம்போல் விளங்கிய மேருஸ்வாமிகளை, மகாராஜா திருவிதாங்கூருக்கு வரவழைத்தார். ஸ்வாமிகள்தான் இப்பிரபந்தங்களை அறங்கேற்றினர். குசேலோபாக்யானத்தை மகாராஜாவின் முன்னிலையில் காலக்ஷேபம் செய்ததற்காக, ஸ்வாமிகளுக்கு 1013-ஹு தை மீ 29-உ இரண்டுதோடாக்களும், பொற்சங்கிலியும், இரண்டு சால்வைகளும், 3500 பணமும் பரிசாக அளிக்கப்பட்டன. இருபத்தி எட்டு ச்லோகங்களும், பன்னிரண்டு பாட்டுக்களும் அடங்கிய ஒரு சிறு ஸம்ஸ்க்ரித நூல் குசேலோபாக்யானம். குசேலனுடைய கதையென்பது பெயராலே விளங்கும். “பஜ பஜ மானஸஹரிமனவரதம், பக்தபராயணமதிசுப சரிதம்'' என்றுவரும் முதற்பாட்டின் அடிகள் கவியின் நோக்கத்தை விளக்குகின்றன. பாட்டுக்களின் போக்கைக் காண்பிப்பதற்காக ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். குசேலன் கிருஷ்ணபரமாத்மாவை தரிசித்துத் தன் வீட்டிற்குத் திரும்பிப்போய்ப் பார்த்தபோது, வீடு ஸகல ஐசுவரியத்தையும் அடைந்து விளங்கும் தருணம்:

ராகம்—தோடி : தாளம்-ஆதி ஜீ–198

ப: ஸாதுததா நிஜபாமினீம் ஸபதிததர்ச விமோஹினீம் (ஸாது

ச: 1. வாத்யகீதவரவனிதாநிகரைஃ
பரிசரிதாமதிவிலாஸினீம் (ஸா து

2. ரமணநிரீக்ஷணஸப்ப்ரம களதுரு
பாஷ்பமுகீம் ம்ருதுபாஷிணீம் (ஸா து

3. ஸகலாபரண விபூஷித தேஹாம்
திவ்யதராம்பர சாலினீம் (ஸா து

4. மனஸாநிஜபத நமனம்
ஸஹஸா ரசயந்தீம் கஜகாமினீம் (ஸா து

5. பங்கஜநாபக்ரிபாச்ரித வர்ஷா
தமரவதூமிவ பாஸினீம் (ஸா து

"அஜாமிளோபாக்யானம்" 23 ச்லோகங்களும் 9 பாட்டுக்களும் அடங்கிய ஸம்ஸ்க்ரிதப் பிரபந்தம். இக்கதையின் கருத்து விஷ்ணுபக்தியின் சிறப்பை விளக்குவது-அதனால் இப்பிரபந்தத்தில் பக்தி ரஸம் ததும்புகிறது. மேற்கூறிய இரண்டு பிரபந்தங்களும் மகாராஷ்டிரப் பிரபந்தங்களின் போக்கை ஒட்டியவை மகாராஷ்டிர தேசத்தில் பழக்கத்திலிருக்கும் ராகங்களையும் அத்தேசத்திய நடையையும் ஒத்திருக்கின்றன.

இவ்விரண்டு பிரபந்தங்களுக்கும், "உத்ஸவப்பிபிரபந்தத்திற்கும் பல வித்தியாசங்களிருக்கின்றன. "உத்ஸவப்பிரபந்தம்" பத்மநாபஸ்வாமி கோவிலில் நடக்கும் உற்சவங்களைப்பற்றி விவரித்து எழுதப்பட்ட நூலாகும். இது 'மணிப்ரவாள' நடையில் எழுதப்பட்டது 42 மணிப்ரவாள ச்லோகங்களும் 12 பாட்டுக்களும் உட்கொண்டது. 1014-ஆம் ஆண்டு த்திய கணக்குக் குறிப்புகளில், இப்பிரபந்தத்தை அறங்கேற்றிய பாலக்காடு பரமேச்வர பாகவதருக்குச் சம்மானங்கள் அளிக்கப்பட்டதாகக் கண்டிருப்பதனால், இந்

நூல் அந்த வருஷத்திலோ அதற்கு முன்பாகவோ இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அடியில் காணும் மணிப்ரவாள ச்லோகத்தினால் நூலின் உத்தேசம் என்னவென்று ஒருவாறு அறியலாம்:—

"ஸந்தாபத்தெயொழிப்பதின்னு ஜகதாமஸ்மின்புரே மேவும
ச்செந்தார்மானினிகாந்தனையபகவான் தன்னாலயத்தில்பரம்!
சந்தம் சேர்ன்னுவிளங்குமுத்ஸவயுகப்ப்ராப்யப்தமுண்டுத்தமம்
ஸந்த: கௌதுகமோடு கேள்க்கணமிதம்தெல்லிங்கு
சொல்லா மஹம் !!

பத்துநாட்களின் உற்சவங்களையும் தனித்தனியாக விவரித்துப் புகழ்கின்றது இந்நூல். விவரிக்கப்பட்ட விஷயத்தின் மேன்மையாலும் அமைப்பின் சிறப்பினாலும், மலையாள இலக்கியத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்குத் தகுந்த நூல்.

அடுத்தபடியாக, மகாராஜாவின் கிருதிகளில் விவரிக்கப்படவேண்டியது வர்ணங்கள். ஸ்வராக்ஷரங்கள் அதிகமாகப் பிரயோகிக்கப்படுவதனால் இம்மாதிரி ஸாகித்தியங்களுக்கு "வர்ணம்" என்கிற பெயர் வந்திருக்கக் கூடும் என்பது சிலரின் அபிப்பிராயம். கடவுள் ஸ்துதிவிஷயமாக பக்திரஸத்திலும், சிருங்கார ரஸத்திலும் 21 வர்ணங்கள் மகாராஜாவினால் இயற்றப்பட்டன. வர்ணங்களில் 'சௌகவர்ணங்கள்' என்றும், 'தானவர்ணங்கள்' என்றும் இரண்டு விதம். மகாராஜா இயற்றிய வர்ணங்களில் தானவர்ணங்கள் இரண்டேதான். அவை தெலுங்கு பாஷையிலுள்ளன. மற்றவை 19-ம் சௌகவர்ணங்கள். இவைகளில் 17 ஸம்ஸ்க்ரிதத்திலும், 1 மணிப்ரவாள

த்திலும், 1 தெலுங்கிலும் இருக்கின்றன. மொத்த மாக வர்ணங்கள் எல்லாம் மனதைக் கவரும்படி அமைந்திருக்கின்றன.

ஜி–238

உதாரணம்; ராகம்–சங்கராபரணம்: தாளம்–அடந்தை

ப: இந்துமுகீ நிசமய என்னமூல் நீசமய

அ: ப: ஸுந்தராங்கனுயிட்டும் ஸ்ரீ பத்மநாபன்
தானென்னிஹ வனனு புணருன்னு?

ச: ஸாரஸலைதனே ஸரஸஸேடைபே நீ கதய ஸா ஸுமசராஸன
ஜனிதவிஷமராகாதிவிகளித ச்ருதி கதாஹமிஹ
பஹுசோசாமி, ருதபமிகிடமி பரப்ருதசுகமிர
ஸரளமதுபகலி தமிஹ ஹிதர–
ஸாருஜமுபாகலயதே ஹே கமனீ (இந்துமுகீ

*  *  *

*  *  *

(நான்கு சரணங்கள் விடப்பட்டிருக்கின்றன)

அடுத்தபடியாக 'பதங்களை'ப்பற்றி சற்றுச் சிந்திப்போம். மன்னர் இயற்றிய 65 பதங்களை ஸ்ரீ சிதம்பரவாத்தியார் பிரசுரித்திருக்கிறார். அவை 10 ஸம்ஸ்க்ரிதத்திலும், 5 தெலுங்கிலும், 50 மலையாள த்திலும் உள்ளன. கோயில்களில் தேவதாஸிகளின் நாட்டியத்திற்குதவும்படியாக அமைக்கப்பட்டவை. மகாராஜாவுக்கு நாட்டியக் கலையில் எவ்வளவு உற்சாகம் இருந்ததென்பது இதனால் தெரியவரும் இக் கலையை முறைப்படுத்தி பிரசித்தப்படுத்த ஆர்வம் கொண்டு வடிவேலுவை இந்நாட்டிற்கு அவர் வரவழைத்தார். வடிவேலு ஓர் சிறந்த நடன ஆசிரியர், சங்கீத மும்மணிகளில் ஒருவராகிய முத்துஸ்வாமி திக்ஷிதருடைய சீடரும் ஆவார். பிடில் வாத்தியம்

வாசிப்பதில் கைதேர்ந்தவரும்கூட. பொன்னய்யா, பழனியாண்டி என்பவர்களும் வடிவேலுவுக்கு ஒத்தாசை செய்ய நியமிக்கப்பட்டவர்கள். மகாராஜா இயற்றிய பதங்களைக்கொண்டு, வடிவேலுவும், அவருடைய துணைவர்களும் பல தடவைகளில் நாட்டியக் கச்சேரிகள் செய்து காண்போரை பிரமிக்கச் செய்தார்கள். இப்பதங்கள் இந்நாட்டில் மாத்திரம் அல்லாமல் கேரளத்தின் பல பாகங்களிலும், சென்னை மாகாணத்தில் பலவிடங்களிலும் அதிகமாக வழங்கப் பட்டுவந்தன. விரகதாபத்தினால் துன்புற்றிருக்கும் தலைவி தன் தலைவனிடம், தோழியின் மூலியமாய் தூதனுப்பும் விதத்தில் நாயக நாயகீ பாவத்தில் இப் பதங்கள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பதத்திலும் ஸ்ரீ பத்மநாபனைத்தான் தலைவனாக வைத்திருக்கிறது வெளிக்குச் ச்ரிங்கார ரஸம் தோன்றினாலும் உண்மையில் இன்பமான பக்தி ரஸம் விளங்குகிறது. உதாரணமாக ஒரே ஒரு பதத்தைப் படித்துப்பாருங்கள்:—

ராகம்—தன்னியாசி: தாளம்—அடந்தை ஜி-264

ப: குளிர்மதிவதனே கிந்துசெய்வூ நான் குருவிந்த ரதனே?

அ: ப: களகண்ட வேகாதாகமிப்பன் நின்னரிகென்னு
களியோ ஸாரஸநாபன் கதிச்சதும் தருணீ— (குளிர்

ச: கணவனென்னெ வெடிஞ்சோ
முன்னமிருன்ன கருணயில் குறஞ்சோ
மணயார்ன்னு விலஸுன்ன மந்தமாருதமேற்று
மணிமதிபிம்பம் கண்டுமெல்லலியுன்னய்யோ! (குளிர்

* * *

* * *

(இரண்டு சரணங்கள் விடப்பட்டிருக்கின்றன)

இனி மிச்சமிருப்பது "தில்லாஞ"க்கள். இவை தாளத்தை முக்கியமாகக்கொண்டவை. ஐந்து தில்லாஞக்கள் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கின்றன.

உதாரணம்: தில்லாஞ — ஆனந்தபைரவி
தீம்தீம்தீம் ததநித உதநித தநதரஞ
கிடதகதோம் கிடதகதோம் கிடதகதோம் கிடதகதோம்
நாதரதானிதோம்-தரிதானி ததநிதானி
தானிதானிதகதீம்தக—தோம்தில்லானயலயெலரி
தோம்தஞதி தத்திகிட தகதோம்.

இப்படி ஆகமொத்தம் 311 பாட்டுக்களை ஸ்ரீ சிதம்பரவாத்தியார் வெளிப்படுத்தியிருக்கிருர் இக்காலத்தில் "ஸ்ரீ ஸ்வாதித்திருநாள் சங்கீத வித்தியாலைய"த்திலிருந்து மகாராஜாவின் பல கீர்த்தனங்களும் சீர்படுத்தப்பட்டு வெளிவந்திருக்கின்றன. வெளிவராத பல கீர்த்தனங்களும் இருப்பதாகத் தெரியவருகிறது. இவைகளும் வெளிவந்தால் மிகவும் உபயோகமாகவிருக்கும்.

ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் கீர்த்தனங்கள் இசையழகுடன் விளங்குவதுமல்லாமல் நடையழகுடனும் மிளிர்கின்றன. பல அபூர்வ ராகங்களைக் கையாண்டு ஸாகித்தியங்களை இயற்றுவதில் அவர் வெகு சமர்த்தர். கோபிகா வஸந்தம், ஸைந்தவி, லலிதபஞ்சமம், பிபாஸ், க்கட்டா, காக்கி, ஜர்ஜரி, ஹமீர்கல்பம், த்ருபத், கியால், டப்பா முதலிய பல ராகங்களிலும் அவருடைய ஸாகித்தியங்கள் இருக்கின்றன. கர்ஞடக, இந்துஸ்தானி, மகாராஷ்டிர ஸங்கீத முறைகளிலெல்லாம் அவருக்கு சமமான தேர்ச்சியிருந்தது. இதை அவர் கையாண்டமுறை

களால் நன்கறியலாம். ஸங்கீத சக்ரவர்த்தியென்று உலகெங்கும் புகழ்படைத்த ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு போட்டியிடுவது போல ஸ்வாதித் திருநாள் மகாராஜாவும் உலகெங்கும புகழ்பெற்றூர். ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் அவதரித்த காலத்தில் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிக்கு ஐம்பத்திரண்டு வயது முடிந்திருந்தது. அவருடைய புகழ் எண் திசைகளிலும் பரவியிருந்தது. தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் என்கிற சங்கீத திக்கஜங்களும் அக்காலத்தில் தென்ஞட்டில் பிரசித்தமாக விளங்கினர்கள். அப்பேர்பட்ட சமயத்தில்தான் ஸ்ரீ ஸ்வாதித் திருநாளும் இசை உலகில் சஞ்சரிக்கத் தலைப்பட்டார். மேற்கூறப்பட்ட ஸங்கீத மும்மணிகளின் கீர்த்தனங்களும் மகாராஜாவை சங்கீதக் கலையில் முன்னேறத் தூண்டியிருக்கவேண்டும் என்பது திண்ணம். இது ஆராய்ச்சிக்குரிய விஷயம். இறைவன் அவருக்கு 34 வருஷ ஆயுளைத் தான் தந்திருந்தார். எண்பது வருஷங்களுக்குமேல் வாழ்ந்திருந்தது, நாதோபாஸனை செய்து, ஸ்ரீ தியாகராஜர் ஆற்றிய செயலுக் கொப்பாக ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் 34 வருஷத்திய செயலாற்றலைக் கூர்ந்து ஆராய்ந்தால் மகாாாஜாவின் செயல் எவ்வளவு அற்புதமானது என்பதை நன்கு ஊகிக்கலாம். தவிர, மிகவும் துன்பமேறிய அரசியல் நிகழ்ச்சிகளுக்கிடையில், இசைத் துறையில் அவர் செயலாற்ற நேர்ந்தது என்பதை நினைக்கும்போது நம்முடைய வியப்பு அதிகமாகிறது.

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா கேரளநாட்டுச் சங்கீதக் கலைக்குப் புரிந்திருக்கும் தொண்டு விலை

மதிக்க முடியாதது. கேரளநாட்டின் ஸாகித்தியங்க ளெல்லாம் பெரும் பாலும் இசை உள்ளடங்கியவை என்பதில் யாதொரு ஐயமுமில்லை ஏனென்றால், திருவாதிரைப்பாட்டு, ஸர்ப்பப் பாட்டு, அம்மானைப்பாட்டு, புள்ளுவன்பாட்டு, நந்துணிப்பாட்டு, தும்பிப்பாட்டு முதலிய பலவிதப் பாட்டுக்களும் கேரள இலக்கியத் தின்செல்வங்கள். தேசீயப் பிரஸ்தானங்களாகிய துள்ளல் பாட்டும், கிளிப்பாட்டும், வஞ்சிப்பாட்டும் இசையுடனுள்ளவை. ஆனால் சுத்த சங்கீதம் என்கிற அளவுகோலை வைத்துப் பார்த்தால், மேற் கூறியவைகள் எவ்வளவுக்கு விலைமதிக்கப்படலாம் என்கிற ஒரு சந்தேகம் எழும்புகிறது. "ஆட்டப்பாட்டு"க்களின் நிலை அவைகளுக்கு மாறுபட்டிருக்கிறது. ஆட்டப்பாட்டு பதங்கள் சுத்த சங்கீதத்தைச் சேர்ந்தவை. உண்ணாயிவாரியருடைய "நளசரித்திரத்தில்" வரும் பாட்டுக்கள் இலக்கியச் சிறப்பினாலோ அல்லது இசைச் சிறப்பினாலோ முன்னணியில் நிற்கின்றன என்பதை சீர்தூக்கிக் கூறுவது மிகக் கடினம். ஆயினும், பழக்கத்தில், அவைகளைப் பொதுவாக இலக்கியத் துறையில்தான் சிறப்பித்துக் கூறுகிறார்கள். அதனால்தான், "குசேலவிருத்த"த்தின் கர்த்தாவாகிய ராமபுரத்து வாரியர் இயற்றிய "பாஷாகீத கோவிந்த"மும், அசுவினித்திருநாள் அமைத்த சில கீர்த்தனங்களும் மட்டுமே, ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் காலத்திற்கு முன், மலயாளத்தில் பாட்டுக்களாகப் பிரசாரம் அடைந்திருந்தன. இந்நிலையை முழுதும் மாற்றி, கேரளநாட்டிற்கு, எல்லோரும் மதிக்கக் கூடிய பெரும் இசைச் செல்வத்தைப் பெ

பெருக்கிக் கொடுத்த பாக்கியம் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவினுடையதே. அவர் இயற்றிய கீர்த்தனங்கள் இந்நாட்டில் சங்கீதக் கலையை உயர்த்தியது மாத்திரமல்லாமல், இந்தியா முழுவதுமே பரவி பழக்கத்தில் வந்தன. தெலுங்கு, கர்னடகம், மகாராஷ்டிரம், இந்துஸ்தானி, ஸம்ஸ்க்ரிதம் முதலிய மொழிகளையெல்லாம் கீர்த்தனங்களை இயற்றக் கையாண்டது இக்கீர்த்தனங்கள் பாரதநாடெங்கும் விஸ்தாரமாக வியாபித்து மேன்மேலும் பழக்கத்தில் வருவதற்குச் சாத்தியமாயிற்று. இம்மொழிகளைப் பேசும் நாடுகளிலெல்லாம் இப்பாட்டுக்கள் பிரசாரத்தில் வந்து மகாராஜாவுக்கும், அவருடைய ராஜ்ஜியத்திற்கும் என்றுமழியாப் புகழைச் சம்பாதித்துத் தந்தன. அவர் மலையாள மொழியில் மாத்திரம் கீர்த்தனங்களை இயற்றியிருந்தால், வாஸ்தவத்தில் அவைகளுக்கு இவ்வளவு பிரசாரம் இருந்திருக்காது தான். அதைப்போலவே உள்நாட்டுச் சங்கீத வித்துவான்களை மாத்திரம் ஆதரிப்பதோடு அவர் நின்றுவிட்டிருந்தால், இவ்விடத்திய சங்கீதக் கலைக்கு அன்றுண்டாகிய வளர்ச்சியும், புகழும் வேண்டுமளவு கிடைக்காமல் போயிருக்கும். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பாடகர்களை இங்கு வரவழைத்ததனல், அவ்விடங்களிலெல்லாம் பிரயோகத்திலிருக்கும் சங்கீத முறைகளும், சம்பிரதாயங்களும், இந்நாட்டிலும் உபயோகத்தில் வந்தன. ஹரிகதா காலக்ஷேபம் அவ்விதமாகத்தான் இங்கு பழக்கத்தில் வந்ததென்று முன்பே சொல்லப்பட்டது. பலவிதமாகிய இசைக் கருவிகளை உபயோகிக்கும் முறைகள், அபூர்

வமாகிய நாட்டிய முறைகள் இவைகளெல்லாம் வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு வந்த சங்கீத, நாட்டிய வித்துவான்களால்தான் இங்கும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டன. மகாராஜாவினுல் சம்மானிக்கப்பட்டுப் பரிசுகள்பெற்றுச் சென்ற வெளிநாட்டு வித்துவான்கள், இந்நாட்டின் மேன்மையையும், மன்னரின் கலையார்வத்தையும், உதாரகுணத்தையும், தம் நாடுகளில் விளக்கிப் புகழ்ந்துப் பிரசித்தப்படுத்தினுர்கள்.

வெளிநாட்டுச் சங்கீத முறைகளிலும் மகாராஜாவுக்கு அதிகப் பரிசயமும் தேர்ச்சியும் இருந்தன. இக்காரணத்திஞல் தான் இவ்விடத்திய பண்டை காலத்திய சங்கீத சம்பிரதாயங்களை சீர்படுத்தி அமைக்க அவருக்குச் சாத்தியமாயிற்று. அக்காலத்தில் இங்கு பழக்கத்திலிருந்த சங்கீத சம்பிரதாயம், "ஸோபான ஸம்பிரதாயம்" எனப்படும். கர்னுடக சங்கீத சம்பிரதாயம் மிகவும் குறைவாகத்தான் வழங்கப்பட்டுவந்தது. இந்துஸ்தானி சம்பிரதாயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. மகாராஜா அம்முறைகளையெல்லாம் நன்ருகப்பயின்று நுட்பங்களை வசப்படுத்தியிருந்ததனுல், இந்நாட்டு முறைகளை பரிஷ்கரித்து சுத்த கர்னுடக முறையில் சங்கீதத்தை அமைத்து விடஅவருக்கு எளிதில் முடிந்தது. அவர் ஆற்றிய கலைத்தொண்டில் இதுவும் ஓர் சிறந்த பகுதியாகும்.

ஓர் சிறந்த அரசியல் நிபுணன், வாக்கேயகாரகன், கலாபோஷகன் என்கிற பல துறைகளிலும் ஒப்பிலா புகழ் பெற்று விளங்கி மேன்மையையடைந்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜாவை கே

ரள ராஜ்ஜியம் என்றென்றும் மறக்கவியலாது. அவருடைய புகழ் பாரத நாடெங்கும் வியாபித்திருக்கிறது ஆயினும் அவருடைய அரும் செயல்களைப் பற்றி இந் நாட்டினர் போதிய அளவு அறிந்துக் கொள்ளாமலிருந்தார்கள். அக்குறையைத் தீர்த்து அவருடைய பெருமையை உலகத்திற்குத் தெளிவாகத் தெரியும்படி செய்தது ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகாராஜாவும் அவருடைய அன்னை மாட்சிமை தங்கிய ஸ்ரீ ஸேது பார்வதீபாயி மகாராணியும் ஆவார்கள் இதற்குக் காரணம் அவ்விரிருவர்களின் கலையன்பும், கலையைப் போற்றும் மனப்பான்மையும், கலைப் பண்பும், முயற்சிகளும் தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதை நாம் நன்றியுடன் நினைப்பிலிருத்துவதுடன், அவர்களுக்குக் கடமைப் பட்டவர்கள் என்பதை பக்தியுடன் குறிப்பிடவேண்டியது. இக்காலங்களில் திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தில் ஸங்கீதம் முதலிய கலைகளுக்கெல்லாம் ஓர் புத்துணர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பதற்கு ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகாராஜா ஆற்றியிருக்கும் பெரும் செயல்கள், பல பெரிய ஸ்தாபனங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கின்றன. ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா தனிப் பிரீதி வைத்திருந்த சங்கீதக் கலைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துத் தூண்டி வளர்ப்பதற்காக "ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஸங்கீத வித்தியாலய"த்தை நிறுவியதும், கர்னாடக சங்கீதத்தின் கரைகடைந்து காயகோத்தமர்களாய் விளங்கும் பல வித்துவான்களை ஆஸ்தான வித்துவான்களாக நியமித்து ஆதரித்து

கௌரவித்து வருவதும் ஆகிய இரண்டு குறிப்பான உதாரணங்களே சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஸங்கீத வித்தியாலயத்தின் மூலியமாய், ஆதியில் பிரும்ம ஸ்ரீ ஹரிகேச நல்லூர் முத்தய்யா பாகவதர், பிறகு இராஜ்ஜிய ஸேவா நிரத, ஸங்கீத கலா நிதி ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் இவர்களின் முயற்சியிலும் மேற்பார்வையிலும் ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் பல கீர்த்தனங்களும் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்துள்ளன. எந்த சங்கீதக் கச்சேரியிலும், ஸ்ரீ ஸ்வாதித் திருநாளின் கீர்த்தனங்களில் சில தவறாமல் பாடப்பட்டு வருகின்றன என்பதனால் அக்கீர்த்தனங்களுக்கு எவ்வளவு பிரசித்தி கிடைத்திருக்கிறதென்பது தெளிவாகும். இப்படியாக சங்கீதக் கலை இந்நாட்டில் மேன் மேலும் முன்னேறி வருகிறது. பொதுவாக பல துறைகளில் நாட்டினர் அடைந்திருக்கும் நன்மைகளுக்கும், குறிப்பாக சங்கீதக் கலைத்துறையில் நாட்டிற்குக் கிடைத்திருக்கும் முன்னேற்றத்திற்கும், இந்நாட்டு மக்கள் தங்கள் மனமார்ந்த நன்றியை, மாட்சிமைதங்கிய ஸ்ரீ சித்திரைத்திருநாள் மகாராஜா அவர்களுக்கும், அம்மை மகாராணி ஸ்ரீ ஸேது பார்வதீபாயி அவர்களுக்கும் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். அந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கும் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்களின் மேன்மையை நினைப்பில் கொண்டு வருவதற்கும், சங்கீதக் கலைக்கு இந்நாட்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதற்கும், 1122-ம் வருஷத்தில் கொண்டாடப்பட்ட ஸ்ரீ ஸ்வாதித் திரு

நாள் நூற்றாண்டு விழா பயன்படுத்திக்கொள்ளப் பட்டது.

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்களின் புகழ் நிரந்தரமாக வளர்ந்தோங்க இறைவன் அருள் புரிவாராக!

சுபம்:

முற்றும்.

# அனுபந்தம்

# 1

(8-ாம் பக்கம்)

நமுக்கு ஸஹோதர துல்யமாயிரிக்குன்ன மகா ராஜ மான்யராஜஸ்ரீ கர்னல் ஸாகிப் அவர்கள்க்கு:-

அரிக்காறருடெ பற்றில் கொடுத்தயச்ச கட தாஸு இவிடெ கொண்டுவன்னு வாயிச்சு கேட்ட வஸ்தையும் அறிஞ்சு. நம்முடெ கர்ப்பஸ்தனுயிட்டு இப்போள் உண்டாயிரிக்குன்ன குஞ்சினு பட்டம் கெட்டேண்ட ஸங்கதிக்கு நாம் கவர்மெண்டிலேக்கு எழுதி அயச்சாறெ அவிடெ நின்னும் ராஜ்ஜியத் தினு அவகாசம் குஞ்சினு தன்னெ என்னும் அவனு ப்ராப்தியாவோளம் நம்முடெ கல்பன ப்ரகாரம் விசா ரிச்சுக்கொள்ளத் தக்க வண்ணமும் கௌணர்மெண் டில் நின்னும் நிச்சயிச்சு மறுபடி எழுதி வன்னி ரிக்க கொண்டு ரண்டு மூன்று திவஸத்தினகம் கர் னல் தன்னெ திருவனந்தபுரத்து தன்னெ வன்னு நம்மயும் கண்டு குஞ்சினு பட்டம் கேட்டு (பொடிவு) விளம்பரம் எழுதிச்சு கொடுத்தயச்சு பிரஸித்தப்ப டுத்தத் தக்க வண்ணம் நிச்சயிச்சிரிக்குன்னு என் னும் எழுதியிரிக்க கொண்டு நமுக்கு வளரெ ஸந்தோ ஷமாகையும் செய்து. ஆயது எந்து கொண்டென் னல் எனனெனனேய்க்கும் ரக்ஷிதாவாயிட்டிரிக் கேண்டுன்னதினு இப்போள் காணப்பெட்ட ஆளுக ளில் பகுமானப்பெட்ட இங்கிரேஸ்கும்பஞ்சிக்கு ஸமம் ஸத்யவும் ஞாயவும் தர்மா தர்ம விசாரவும் ஒண்டாயிட்டு மற்றாரும் தன்னெ இல்லென்னு அவ தார சக்தி என்னபோலெ எழுன்னள்ளியிருன்ன அம்மாமன்மார் ஒள்ளப்போள் தன்னெ மனஃபூர்வ

மாயிட்டு கருதி நிச்சயிச்சு கொம்பஞுசியெ மித்ரமா யிட்டு வச்சிரிக்க கொண்டும் அங்கனெ ஒள்ள இங்கி ரேஸு கௌனர்மெண்டிலேக்கும் ஈ பரமார்த்தம் போதம் ஒண்டாயிட்டு, இப்போள், ஈ ஸம்ஸ்தானத் தெக்குறிச்சும், ஆளுகளெக்குறிச்சும் தயவு வெச்சு, ஸந்தோஷமாயிட்டு விசாரிச்சு ஸம்ரக்ஷண செய்து வருன்ன கர்னலினும் ஹிதமாயிட்டு நடத்துன்ன எண்ணங்கள் ஒக்கெயும் நமுக்கு ஸந்தோஷமாக கொண்டும் எழுதி வன்னிரிக்குன்னதின் வண்ணம் கர்னலும் கூடெ இவிடெ வன்னிரின்னும் கொண்டு தன்னெ ப்ரஸித்தம் செய்யணும் என்னத்ரே.........

லக்ஷ்மீபாயி மகாராணி அவர்களின் நிருபம்.

## 2

(பக்க்ம் 14)

ஸ்வாதித் திருநாள் திருமனஸ்ஸிலேக்கு பாலப் ராயமாக கொண்டு டி-பண்டாரத்திலும், டி-பண்டா ரத்திலே ஆயில்லியம் திருநாள் திருவவதாரம் செய் தருளிய ஆற்றங்கல் மூத்த அம்ம பண்டாரத்தில் நின்னும் 990 கன்னி மாஸம் 5-ம் தியதி நாடு நீங்கி ஸ்வர்க்க ப்ராப்தி ஆகையில், டி-அம்ம பண்டாரத் திலெ அனுஜத்தி உத்ரட்டாதி திருநாள் திருவவதா ரம் செய்தருளிய அம்ம பண்டாரத்திலேக்கு ஆற் றுங்கல் மூப்பு வரிகையில் டி-அம்ம பண்டாரத்திலும் கூடி திருவாம்பாடியில் திருவற வடக்கும் முறியில் எழுன்னருளி இருன்னருளிய பில்பாகம்............... ...............சோதித் திருநாள் திருவவதாரம் செய்தரு ளியக்ரூப்பாப்பூர் கீழ்ப்பேரூர் ஸ்ரீ வீரபால ராமவர்ம்ம

രായ ചിറവാ മൂത്ത തിരുവടി ഇരുന്നരുളിയേടത്തില്‍ പണ്ടാരത്തിലെ തിരുവറ തെക്കും മുറിയില്‍ എഴുന്നരുളിച്ചു കൂട്ടക്കുറ തീര്‍ത്തിരുന്ന തിരുമുമ്പിലാമ്മാറു കിഴക്കുനോക്കി ഒന്നു നമസ്കരിപ്പിച്ചു എഴുനിന്നും വന്തിച്ചു ത്രുക്കലചമാട്ടിനു അനുജ്ഞയും കൊണ്ടരുളി.

3. (മതിലകം ചുരുണ 2003-ഓല 240) (പക്കം 24)

திருமனஸ்ஸிலே காலத்து இவிடெ உண்டாயிருன்ன பல ஸங்கீத வித்வான் மாருடெயும் பேருகள் கிட்டிட்டுண்டு. அவ தாழெ கொடுக்குன்னு.

ஸங்கீதரத்னாகரம் ராமசாஸ்திரிகள்
கரமண ஸுப்ரமண்ய பாதவதர்
ஆச்ராமம் அண்ணாஸ்வாமி பாகவதர்
தஞ்சாவூர் கதிர்காமதாஸன்
பாலக்காட்டுச்சேரி சாமு பாகவதர்
கூனியூர் சேஷ பாகவதர்
ஆற்றுங்கல் சங்கரநாராயண பா—ர்
சாலெயில் வெங்கிட்டராம பா—ர்
கரமண சுப்பு பாகவதர்
,, சேஷ பாகவதர்
,, ராமசந்திர பாகவதர்
புத்தன்தெருவில் பகவதி பாகவதர்
,, அனந்தசுப்பு பாகவதர்
அவனவன்சேரி ஹரிஹர பா—ர்
சுசீந்திரம் ஹரிஹர பாகவதர்
கரமண பத்மநாப பாகவதர்
,, சந்து பாகவதர்
திருப்பதிஸாரம் நாராயணன் பாகவதர்
பூதப்பாண்டி ராமஸ்வாமி பாகவதர்

ஆச்ரமம் சங்கர பாகவதர்
,, சங்கரநாராயண பாகவதர்
,, வெங்கிடகிருஷ்ண பாகவதர்
கரமண பாகவதம் வெங்கிடேசுவர பா—ர்
,, வெங்கிடேசுவர பாகவதர்
,, பத்பநாப பாகவதர்
,, திருவேங்கிட பாகவதர்
,, செறிய வெங்கிடேசுவரன் பா—ர்
,, கிருஷ்ண பாகவதர்
,, குளத்தூரான் பாகவதர்
கோட்டையம் ராமசந்திர பாகவதர்
கல்குளம் ஸுப்பராம பாகவதர்
,, சாலிவாடீச்வர பாகவதர்
அகஸ்தீசுவரம் க்ருஷ்ண பாகவதர்
வத்திக்கம்பில் க்ருஷ்ண பாகவதர்
புலியூர்க்குறிச்சி பத்மநாப பா—ர்
நெய்யாற்றின்கர பத்மநாப பா—ர்
கோதவர்மபுரம் ஸோமஸுந்தர பா—ர்
இலத்தூர் ஹரிஹர பாகவதர்
சுசீந்திரம் பத்மநாப பாகவதர்
கடயம் காசி பாகவதர்
குளத்தூரான் பாகவதர்
கூனியூர் மகாதேவ பாகவதர்
,, ராமஸுப்பன் பாகவதர்
தெக்கன் திருப்பதி ஸ்ரீநிவாஸய்யன்
கவிராஜன் அவனவன்சேரி க்ருஷ்ண பா—ர்
வர்க்கல ஜனார்தன பாகவதர்
பறக்க நாராயண பாகவதர்
,, சாமு பாகவதர்

(கு-பு) இவர்களைப் பற்றிய மற்ற விவரங்கள் யாவும் கிடைக்க வில்லை.

(பக்கம் 37)

(4) மதிலகம் சுருண 256-ஓல 1160-1005 ஆடி மாஸம் 22-ம் தேதி.

சோதி திருநாள் திருவவதாரம் செய்தருளிய தீர்ப்பாப்பூர், ஸ்ரீ வீர பாலராமவர்ம்மராய சிறவாயி மூத்த திருவடி இருன்னருளியெடத்தில் பண்டாரத்தில் நின்னும் கல்பிச்சு சென்ன பட்டணத்து நின்னும் கெவுணர் ஸாயிப்பு அவர்கள் டி மாஸம் 25-ம் தேதி கொல்லத்து வருன்ன ப்ரகாரம் எழுதி வன்னு. ஆயதினு கூடிக் காழ்ச்சக்காயிட்டு நல்லநாள் கொண்டு கொல்லத்து எழுன்னருளுகயில் பெருமாள் ஸ்ரீபத்மநாபப் பெருமாள்க்கும், தெக்கேடத்து ஸ்ரீநரசிங்கானந்த பெருமாள்க்கும் திருவாம்பாடியில் ஸ்ரீ கிட்டின சுவாமிக்கும் சேஷம் தேவன்மார்க்கும் கூடே காணிக்க பணம் 820.

(5) நீட்டு 23: பொடிவு...சேகரிப்பு 7115.

(பக்கம் 43)

கொடுத்தாட்ட ஸாதனவும், வாயிச்சுக் கேட்ட வஸ்துதையும் அறிஞ்சு இவிடெ கூடெ பாற்குன்ன திருவட்டாற்று பானப்பிள்ள அயிக்குட்டி நாராயணிக்கு சம்பளம், பல்லக்கு, அடுத்தூண், தானம், தக்ஷிண உள்பெட்ட வகைக்கும், விசாரிப்புக்காரன், பிள்ள அச்சிமார், பிள்ளரு, ஆயிம்மமாரு குட்டிகள் முதலாய பேர்க்கு சம்பளம் பதிச்சு கொடுக்கேண்டுன்னதினும் கீழிலே கணக்கு சோதன செய்யிச்சாறெ 90-ம் ஆண்டு எழுதிய பதிவு கணக்கில் திருவட்டாற்று அம்மாவியிடெ வகய்க்கு மாஸம் ஒன்

ണിനു 1029/ മാകാണിപ്പണവും, കൂടെ നില്ക്കുന്ന ആളുകൾക്കു ഓണക്കോടി വകയ്ക്കു ആണ്ടു ഒന്നിനു 150 പണവും വീതം കൊടുത്തു വന്ന പ്രകാരം കണക്കു കാണുക കൊണ്ടു അപ്രകാരം പാണപ്പിള്ള അയിക്കുട്ടി നാരായണിയുടെ വകയ്ക്കും മാസം ഒന്നിനു 1029 മാകാണിപ്പണവും ഓണക്കോടി വകയ്ക്കു ആണ്ടൊന്നിനു 150 പണവും വീതം നിത്തിയച്ചിലവില് പതിവില് കൂടി എഴുതിക്കൊടുപ്പാന് തക്കവണ്ണം നിദാനം വരുത്തണമെന്നും നാം പറഞ്ഞ പ്രകാരം നിത്തിയച്ചിലവില് സർവാധികാര്യം വിചാരിക്കുന്ന കുഞ്ചാതിച്ചപ്പിക്കു 11-ം തേതി എഴുതിയ സാതനം വന്നിരിക്ക കൊണ്ടു, ഈവക പണം പതിവില് കൂടി കൊടുപ്പിക്കേണ്ടുന്ന അവസ്ത കൊണ്ടല്ലൊ എഴുതിവന്നതിലാകുന്നു. അതിന്മണ്ണം തന്നെ താനം തക്ഷിണ പല്ലക്കു അടുത്തൂണ് ഉള്പെട്ടവകയ്ക്കും വിചാരിപ്പുക്കാരന് പിള്ള അച്ചിമാരു, പിള്ളമാരു, ആയിമ്മമാരു കുട്ടികള് മുതലായ പേർക്കു ചമ്പളം വകയ്ക്കും, ഒന്നിനു 1029 പണവും കൂട നില്കുന്ന ആളുകൾക്കു ഓണക്കോടി വകയ്ക്കു ആണ്ടു ഒന്നിനു 150 പണവും വീതം തുലാ മാസം 1-തേതി മുതല്ക്കു നിത്തിയച്ചെലവില് പതിവില് കൂടി എഴുതിച്ചു കൊടുപ്പിച്ചുക്കൊള്ളുകയും വേണം എന്നും ഇക്കാര്യം ചൊല്ലി 1006-ം ആണ്ടു വിരുച്ചിക മാസം 19-ം തേതി ദിവാന് ചേഷാപണ്ടിതര് സുബ്ബരായർക്കു നീട്ടു എഴുതിവിടു എന്നു തിരുവുള്ളമായ നീട്ടു.

(തുല്യം)

60 (6)

105-மது ராயஸம் பேஜ் 108 (பக்கம் 58)

திவானுத்யோகமாயிருன்ன ஸுப்பாராயரு ஈ ராஜ்யத்து வன்னதிண்டே சேஷம் நமுக்கு இங்கிலீஷ் முதலாய வித்யாப்யாஸவும் செய்யிச்சு பின்னத்தில் திவானுத்யோகவும் விசாரிச்சு நடன்னு வருமபோள் அயாள்க்கு சரீரத்திண்டெ அசக்தத கொண்டு உத்யோகம் வேண்டா என்னு போதிப்பிக்கயால் மாற்றி பார்ப்பிச்சிரிக்குன்னதும், ஸுப்பாராயர்க்கும் மகனும் கூடே மும்பில் மாஸம் ஒன்னுக்கு 450 ரூபா வீதம் சம்பளம் வச்சு கொடுத்து வன்னதில் ஒன்னுபாதி 225 ரூபா அடுத்தூணையிட்டு பதிச்சி கொடுப்பானுள்ளதும் ஆகுன்னு. எங்கிலும் 25 ரூபா கூடெக் கூட்டி அயாள்க்கு இப்போள் மாஸம் ஒன்னினு 250 ரூபா வீதம் அடுத்தூணையிட்டு பதிச்சுக் கொடுக்கத்தக்கவண்ணம் நாம் நிச்சயிக்க கொண்டு, அதின்மண்ணம் மேலெழுதிய ஸுப்பாராயர்க்கு மாஸம் ஒன்னினு இருநூற்றம்பது ரூபா வீதம் அடுத்தூண் வக பதிவில் கூடி எழுதிச்சு அயாளுடெ நேரத்தோளவும் கொடுப்பிச்சுக் கொள்ளுகயும் வேணும் என்னும் இக்கார்யம் சொல்லி 1013 ம் ஆண்டு துலா மாஸம் 3-ம் தேதி ஆக்டிங்க் திவான் ரங்காராயர்க்கு நீட்டு எழுதி விட்டு என்னு திருவுள்ளமாய நீட்டு.

(துல்யம்)

## 7

(பக்கம் 63)

சுருண நம்பர் 289 ஓல 172, 1013-மாண்டு ஆனி மீ 15-உ மதிலகத்துக் காணிக்கை நடவரவு வன்ன கல்லுவச்ச பதக்கம் முதல் கூட்டு வகய்க்கு ஏறடவு

ஆனி மாஸம் 15-உ ஸ்ரீ பல்பநாபதாஸ வஞ்சி பாலராமவர்ம குலச்சேகரப் பெருமாள் இருன்னருளியேடத்தில் பண்டாரத்தில் நின்னும் கல்பிச்சு பெருமாள் கொட்டாரத்தில் நித்தியச் சிலவினு வடக்கே வசத்து புத்தனுபிட்டு ஒரு மங்களாவுகெட்டி ரெங்கவிலாஸம் என்னு பேருவிளிச்சு பாலுகாச்சு கயில் பெருமாள் ஸ்ரீ பல்பநாபப் பெருமாள்க்கு காணிக்கையாக நடைக்கு வச்ச நாயகம் 1-ம் டி யில் வைரம் 1 ம், சிகப்பு 8 ம் குணில் தகட்டு வெள்ள வைரம் 1 ம் வச்சு தகட்டு பச்சப் புரமணி 1 ம் கம்பியில் கெட்டித்தூக்கியபதக்கம் 1 க்குப் பச்சப்புரமணி 33-ம் முத்து 30 ம் கம்பியில் கெட்டிய மால உள்ப்பட இடகழஞ்சு 13.

(செஷம் விட்டிரிக்குன்னு)

## 8

(பக்கம் 80)

சுருண நம்பர் 198 ஒல 1611 முதல் 1613 வரெ திருவனந்தபுரத்து வலிய தம்புரான் கல்பிச்சு நடய்க்கு வச்சு வருன்ன வகய்க்கு 1006-மாண்டு கார்த்திக மாஸம் 28-உ முதல்க்கு எழுதி வருன்ன கணக்கு.

1015-மாண்டு தை மாஸம் 1006-மாண்டு கார்த்திக மாஸம் 28-உ வலிய தம்புரான் கல்பிச்சு நடய்க்கு வச்ச வலிய அனந்தராமன் பணம் 25,000.

1009-மாண்டு தை மாஸம் 7-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூப 1,00000.

1010-மாண்டு மார்கழி மாஸம் 12-உ டி 3000
டி ஆண்டு பைங்குனி மாஸம் 16-உ டி 1000

டி ஆண்டு வைகாசி மாஸம் 24-உ டி
ரூ 100000

1011-மாண்டு மார்கழி மாஸம் 12-உ டி அனந்த வராகன் 2630.

நாளது டி-யில் கூடி கல்பிச்சு நடய்க்கு வச்ச இக்கேரிவராகன் 255.

நாளது கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் (பொடிவு)

1012-மாண்டு ஆவணி மாஸம் 23-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் (பொடிவு)

—டி—ஆண்டு மார்கழி மாஸம் 16-உ —டி—ரூபா (பொடிவு)

—டி—ஆண்டு பங்குனி மாஸம் 22-உ —டி—அனந்தராமன் பணம் ஏழு லக்ஷம்.

—டி— ஆண்டு சித்திர மாஸம் 11-உ —டி—டி— பணம் 5000.

1012-மாண்டு வைகாசி மாஸம் 27-உ மாஸக் காணிக்க நீக்கி சக்கரம் பணம் 1000

—டி ஆண்டு ஆடி மாஸம் 17-உ கல்பிச்சு பிரார்த்திச்சிருன்னதாக நடய்க்கு வச்ச அனந்தராமன் பணம் 395000.

நாளது —டி—யில் கூடெ கல்பிச்சு நடய்க்குவச்ச ரூபா 1,00,000.

1013-ம் ஆண்டு ஆவணி மீ 1-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்ரப் பணம் 1000.

புரட்டாதி மீ 21-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 1,00000.

கார்த்திக மீ 19-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச தங்க முகரம் 179.

நாளது கூடெ கல்பிச்சு நடய்க்கு வச்ச தங்க முகரம் 6.

நாளது கூடெ கல்பிச்சு நடய்க்கு வச்ச மூனிலொன்னு முகரம் (பொடிவு)

நாளது கூடெ கல்பிச்சு நடய்க்கு வச்ச கால் முகரம் (பொடிவு)

—டி— ஆண்டு பைங்குனி மீ 3-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச முகரம் (பொடிவு)

நாளது —டி—யில் கூடெ கல்பிச்சு நடய்க்கு வச்ச அரமுகரம் (பொடிவு)

(ஓல நம்பர் 1612) முன்னேட்டின்படி 1013-ம் ஆண்டு பங்குனி மீ 3-உ கல்பிச்சு நடய்க்குவச்ச கால் முகரம் 1.

—டி— ஆண்டு சித்திர மீ 28-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச முகரம் 57.

—டி— ஆண்டு ஆனி மீ 6-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1000.

—டி— ஆண்டு ஆனி மீ 15-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 1000.

—டி— ஆண்டு ஆடி மீ 18-ம் உ கல்பிச்சு நடய்க்கு வச்ச அரமுகம் 119.

1019-ம் ஆண்டு ஆவணி மீ 21-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 2000.

—டி— ஆண்டு பூரட்டாதி மாஸம் 28-உ கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா தங்கக் காசு 2 ரூ. 595.

—டி— ஆண்டு கார்த்திக மாஸம் 3-ம் தியதி கல் பிச்சு நடய்க்கு வச்ச சக்ரம் பணம் 1200.

—டி— ஆண்டு கார்த்திக மாஸம் 19-ம் தியதி கல் பிச்சு நடய்க்கு வச்ச தங்கக் காசு 219.

—டி— ஆண்டு தை மாஸம் 11-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச தங்கக் காசு 363.

—டி— ஆண்டு மாசி மாஸம் 1-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச இக்கேரிவராகன் 72.

நாளது கல்பிச்சு நடய்க்கு வச்ச அரமுகரம் 93.

நாளது கல்பிச்சு கூடெ வச்ச தங்கக் காசு 103.

—டி— மாஸம் 19-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1000.

1019-ம் ஆண்டு சித்திர மாஸம் 17-ம் தியதி கல் பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 1000.

—டி— ஆண்டு ஆனி மாஸம் 16-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 3369.

நாளது—டி—யில் கூடெ கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 9000.

—டி— ஆண்டு ஆடி மாஸம் 5-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச ரூபா 1000.

1015-ம் ஆண்டு ஆவணி மாஸம் 25-ம் தியதி கல் பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1200.

—டி— ஆண்டு புரட்டாசி மாஸம் 1-ம் தியதி கல் பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1200.

—டி— மாஸம் 17-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1000.

—டி— மாஸம் 29-ம் தியதி கல்பிச்சு நடய்க்கு வச்ச சக்கரம் பணம் 1200.

ஆகெத் துக (அத்தியாயம் 5-ல் பார்க்கவும்)

(9)

பேஜ் 97 ராயஸம் (ஜீர்ணிச்சது) 319 மது (பக்கம் 81)

கொடுத்தூட்ட ஸாதனவும் வாயிச்சு கேட்டவஸ்தையும் அறிஞ்சு. ஆக்டிங் திவான் உத்தியோகத்தினு மீன மாஸம் 7-ம் தேதி முதல்க்கு தன்னெ ஆக்கியதின் மண்ணம் கார்யாதிகளும் விசாரிச்சு கணக்குகளும் ஹஜூர் கஜானவில் இருப்பு திட்டமும் நோக்குயாறெ, 7-ம் தேதிவரே சிலவு நீக்கி தேவஸ்வம் முதலாய வகையில் அனுமத்தாயிட்டு இருப்பு ஒள்ளது கூடாதெ 697643 மாகாணி முந்திரிப்பணம் ரொக்கம் இருப்பாயிட்டும் தேவஸ்வம் திங்கள் தன் சிலவு உடம, அடுத்தூண் முதலாய வகைக்கு ஈயாண்டு சிங்க மாஸம் முதல் மீன மாஸம் வரெ கஜனவில் நின்னும் கொடுக்கயும் பிரிஞ்சவகையில் ஸ்தலங்களில் நின்னும் கொடுக்குன்னதினு எழுத்து கொடுத்தயக்கையும் செய்ததுபோகெ (பொடிவு) நங்கள்க்கும் மற்று சிலவுகள்க்கும் 400067 அரம அரக்காணி பணம் கொடுப்பானுள்ளதாயிட்டும் புது முதல் வகையிலும் 1021-ம் ஆண்டுவரெ குடிச்சிக சுமதல சிலவு மிச்சம் முதலாயவகையிலும் கூடெ கும்ப மாஸம் வரெ 42203 (பொடிவு) முந்திரிப் பணம் பிரியேண்டுன்னதாயும் கண்டிரிக்குன்னப்ரகாரமும் ஈ வகையில் புது முதலில் கும்ப மாஸம்வரெ 995000 சில்வானம் பணம் தவண முடக்கம் உள்ளது, தர்க்கம் கூடாதெ பிரிஞ்சு தீருன்னதாகையால் குடிச்சிகை

யிலும் இருப்பு சுமதல உள்பெட்ட வக (பொடிவு) சில்வானம் பணம் ஒள்ளதில் திருவனந்தபுரத்து அக்ரசாலபக்கம் திங்கள் முதலாய வகைய்க்கு கெட்டிக் கொடுத்த வகையில் சிலவு மிச்சம் ஒள்ளதினு காகறிவக பதினெலு கூட்டம் கோப்பினு வில வாசி கூட்டி வக வச்சு கொடுக்கேண்டுன்னது (பொடிவு) போயிரிக்குன்ன ஆளுகளுடெயும் பேரிலுள்ள பணம் பிரியாதெ கிடக்குன்னதும் போகெ ஆவகையிலும் இரிப்பு சுமதல வகையிலும் ஏதானும் பணவும், சாகுடி போகுடி தரிசு கிடப்பு உள்பெட்ட வக (பொடிவு) சில்வானம் பணவும் இறயிலி அரயாளம் ஓலசிட்டி கூடுதல் குடிச்சிக முதலாயவகையில் 97-ம் ஆண்டு முதல்க்கு கணக்கு போதம் வருத்தி தீர்ப்பிக்கேண்டதாயிட்டு 265000 சில்வானம் பணவும், அத்ருத்கி கர்க்கம் முதலாய வகையில் 70000 சில்வானம் பணவும் கரிவும், அழுகிச் சேதவும் வகைய்க்கு வக வச்சுக் கொடுப்பானுள்ளதாயிட்டு 79000 சில்வானம் பணவும் கோர்ட்டில் நின்னு தீர்ப்பாயிட்டு (பொடிவு) 48000 சில்வானம் பணவும் ஒள்ளதினு திட்டம் வருத்தி ஜாக்கிரத செய்தால் ஏதானும் பணம் பிரியுன்னதாகெ கொண்டு ஆயதினு சட்டம் கட்டி விசாரிச்சு வருன்ன அவஸ்த கொண்டல்லோ எழுதிவன்னதிலாகுன்னு. ஈ கிடப்புகள் ஒக்கெயும் இதினு மும்பில் தன்னெ நாம் அறிஞ்சு. வீழ்ச்சயுள்ள காரியங்களும் மற்றும் ஜாக்ரதையாயிட்டு விசாரிச்சு சட்டம்கெட்டி நடத்திக்கேண்டுன்னதினுயிட்டு தன்னெ நிச்சயிச்சாக்கியிரிக்குன்னதாகெ கொண்டும் 90-ம் ஆண்டு முதல்க்கு குடிகள்க்கு கணக்கு போதம் வருத்தி

தீர்ப்பிக்கேண்டுன்னதாயிட்டு இறயிலி அரயாளம் ஓலச்சிட்டி முதலாயவகையில் 265000 சில்வானம் பணவும் கோர்ட்டுகளில் நின்னும் தீர்ப்பாயிவரேண்டுன்ன இனத்தில் 48000 சில்வானம் பணவும் வகையும், கதியும், யாம்யவும் இல்லாதெயுள்ள ஆளுகளெ ஓரோ வேலைகளில் ஏற்படுத்தி நடத்திச்சிரிக்குன்ன வகையிலும், தரிசு கிடப்பு முதலாயவகையிலும் சிலவு மிச்சம் உள்பெட்ட ஜனங்களில் வகவச்சு சில வெழுதி கொடுப்பானுள்ளது போகெ ஆவகையிலும் 21-ம் ஆண்டுவரெ குடிச்சிகையிலும் அத்ருத்தி தர்க்கம் வகையிலும் ஏறிய பணவும் பிரிவானுள்ளதாயிட்டு கண்டிரிக்குன்னதும். இதின்மண்ணம் பல இனங்களிலும் பணங்கள் பிரிஞ்சு வருவானுள்ள காரியங்களில் தஹசீல்தாரன்மார் முதலாய உத்யோகஸ்தன்மார்க்கு யாதொரு தால்பர்யமில்லாதெயும் ஹஜூரில் நின்னும் அதினு தக்கபோலெ அப்போழப் போள் வேண்டுன்ன தாக்கீதுகள் செய்து நேரே பிரிவானுள்ளது பிரிப்பிக்கயும், வகவச்சு கொடுப்பானுள்ளது கொடுக்கயும், தீரே வகயும், கதியுமில்லாதெ குறவு எழுதுவானுள்ளது குறய்க்கயும் செய்யாதெயும் இரிக்குன்ன காரணத்தால் ஏறிய பணம் பிரிவானும், வகவச்சு கொடுப்பானும் மற்றும் ஒள்ளதாயிட்டு காணுன்னதும் ஆகையாலும், இப்போள் எழுதி வன்னிரிக்குன்னதில் தன்னெயும் தேவஸ்வங்கள் உடமக்காறருள்ப்பெட்ட வகைய்க்கு கொடுப்பான் கண்டிரிக்குன்ன துகையிலும் அதிகம் 20000 சில்வானம் பணம் வரையும் பிரியேண்டும் வகையில் முதல் காணுன்னது கூடாதெயும், மீன மாஸம்

தவணைக்குள்ள பணம் முதலில் சேர்த்திட்டில்லாத தும் ஆகையால் ஆ மாஸத்தெ பணவும், குடிகள்க்கு கணக்குபோதம் வருத்திக் கொடுத்து ஒல சிட்டி முத லாயவகையிலும் 1021-ம் ஆண்டுவரெ குடிச்கிகையில் எழுதி நீக்கியிரிக்குன்னது தங்களும் சுமதல சிலவு மிச்சம் முதலாய விவரங்களும் நல்லதுபோலே சோத னசெய்து ஆவகையிலும் வகையும் கதியும் யாம்யவும் இல்லாதெயுள்ள ஆளுகளுடெ பேரிலுள்ள சுமத லைக்கு அவரே ஆக்கிய உத்யோகஸ்தன்மாரெக் கொண்டும் முறபோலெ (பொடிவு) கோர்ட்டிலேள் பிச்சிரிக்குன்ன கார்யங்கள்க்கு சீம உத்தியோகஸ் தன்மார் முகாந்திரம் அயப்பானுள்ள ஆதாரம் முத லாயது அயய்க்காழிகையால் தீர்ப்பாக்குன்னதினு தாமஸம் வன்னிரிக்குன்னதாயி கோர்ட்டுக்கார் (பொடிவு) கொண்டு ஆவக கணக்காதாரம் முதலா யது வேகத்தில் கொடுப்பிச்சயச்சு தீர்ச்ச செய்யிச்சு ஆவகையிலும் முதலுள்ள பணங்கள் கொண்டு மேலெழுதிய சிலவுகள்க்கு திகயுன்னதாயிட்டு கண் டிரிக்குன்னதினல் இக்கார்யத்தினு (பொடிவு) பணம் வஸூலாக்கிக்கெயும் தன் சிலவு, மராமத்து உள்ப் பெட்ட சிலவினு எழுதியிரிக்குன்ன பணம் அதிக மாயிட்டு காணுன்னதாகெயால் அதில் கூடியே கழியூ என்னுள்ளது மாத்ரம் சிலவாக்கயும் செய்து தேவஸ் வம், திங்கள் உடம அடுத்தூண் உள்ப்பெட்ட (பொடிவு) பணவும், முடக்கும் தீர்த்து கொடுப்பிச்சு அடியந்திரங்கள்க்கொன்னினும் வீழ்ச்சயும், ஆவ லாதிக் கிடையும்வராதெ சட்டம் கெட்டி நடத்திச்சு கொள்ளுகையும் வேணம். இக்கார்யம் சொல்லி

1022-ம் ஆண்டு இடவ மாஸம் 10-ம் தேதி ஆக்டிங் திவான் லிங்கய்யன் கிருஷ்ணராயருக்கு நீட்டு எழுதி விடு என்னு திருவுள்ளமாய நீட்டு

(துல்யம்)

(10) 397 (பொடிவு) ராயஸம் (பக்கம் 10)

கொடுத்தூட்ட ஸாதனவும், வாயிச்சுகேட்டவஸ்தையும் அறிஞ்சு. மாவேலிக்கரெ பார்க்குன்ன பாதிரி பீட்டு க்ராமரென்னு பறயுன்ன வியாகரண புஸ்தகம் மலயாளத்தில் ஒண்டாக்குன்ன வகைய்க்கு சிலவினில்லாய்கையால் ஆயதினும் ஏதெங்கிலும் கொடுப்பிக்கேணமென்னு அபேக்ஷிச்சிரிக்குன்ன தின்மண்ணம் செய்யானுள்ளதாகுன்னு என்னு ரெஸிடெண்டு சிபார்சி செய்திரிக்குன்னப்ரகாரவும், ஆவகைய்க்கு பண்டாரவகையில் நின்னும் 1000 ரூபாய் கொடுப்பான் நிச்சயிச்சதில் 500 ரூபா இப்போள் ஆலப்புழ கச்சவடம் வகையில் நின்னும் கொடுக்குன்னதினு மேஸ்டர் க்ராப்போர்ட்டினு எழுத்து கொடுத்தயச்சிரிக்குன்னதும் சேஷம் ரூபா புஸ்தகவேல தீர்னிட்டு கொடுப்பிப்பானுள்ளதும் அக கொண்டு ஈ வகைய்க்கு 500 ரூபா கொடுப்பிச்சிரிக்குன்னதினு ஏழுவிலேக்கு 3500 பணம் ஒள்ளது பற்று சிட்டி கைமாறி கணக்கில் சிலவு எழுதிக்குன்னதினு நிதானம் வரணமென்னும் அல்லே எழுதி வன்னதிலாகுன்னு. அதின்மண்ணம் மேலெழுதிய வகைய்க்கு ஆலப்புழ கச்சவடம் வகையில் நின்னும் கொடுப்பிச்சிரிக்குன்ன ரூபா 500-னும் ஏழு விலேக்கு 3500 பணம் ஒள்ளது பற்றுச் சிட்டி கைமாறி கணக்கில் சிலவெழுதிக்குன்னதினு ஹுஜூர் கஜானாவில்

ச்ராப்பு கிருஷ்ண நாயக்கண்டெ பேர்க்கு எழுதியிட்டுள்ள நினவு இதினோடுகூடெ கொடுத்தயச்சிரிக்க கொண்டு அப்ரகாரம் சிலவெழுதிச்சுக் கொள்ளுகையும் வேணம் என்னும் இக்கார்யம் சொல்லி 1016-ம் ஆண்டு மிதுன மாஸம் 27-ம் தேதி திவான் சேஷா பண்டிகர் ஸுப்பாராயர்க்கு நீட்டு எழுதிவிடு என்னு திருவுள்ளமாய நீட்டு

(துல்யம்)

(11) நீட்டு (பக்கம் 106)

1002-4-16. கொடுத்தூட்ட ஸாதனவும், வாயிச்சு கேட்டவஸ்தையும் அறிஞ்சு இவிடெ குஞ்சுங்கள்க்கு பட்டாகத்தியிலெ ப்ரயோகங்களும் கரெலா முகுதர் இங்கனெயுள்ள எண்ணங்கள் சுற்றுக முதலாயதும் அப்யஸிக்குன்னதினுயிட்டு பார்ப்பிச்சிரிக்குன்ன பட்டாணி பிராம்கானு, சம்பளம் வச்சு கொடுத்திட்டில்லாத்ததினால் கார்த்திக மாஸம் முதல்க்கு மாஸம் ஒன்னினு பத்து ரூபா வீதம் நித்தியச் சம்பளமாயிட்டு பதிச்சுக் கொடுக்கத் தக்கவண்ணம் நிதானம் வரணமென்னு..................

(12) ஸ்வாதித் திருநாள் கொடுத்த ஸம்மானங்கள்க்கும் மற்றும் விபரம் பக்கம் 108 (ஹஜூர் ரேககளில் நின்னு ஸங்க்ரகிச்சது)

1 997 கர்க்கடகம் 9—திருமனஸ்ஸிலே ஜாதகம் எழுதிக்கொண்டுவன்ன கொட்டாரக்கர ஜோஸ்யன் சேகரனு 300 பணத்தினு ஒரு வீரச்ருங்லேயும் ரண்டுகூட்டம் முண்டும் ஒரு பட்டும் கொடுத்து.

2. 1000 இடவம் 30—ஸ்ரீரங்கத்து நின்னும் திருவனந்தபுரத்து வன்ன தாஸி நாகரத்தினத்தினும் அவளுடெ கூடெ வன்ன நட்டுவன்மார்க்கும் 350 ரூபாயும் ஒரு சால்வையும் ஸம்மானம் கொடுத்து.

3 1001 சிங்கம் 23—கும்பகோணத்து நின்னு வாஸுதேவாசாரியர் இவிடெ வன்னப்போள் ஸம்மானம் கொடுத்கதிண்டெ கூடெ ஒரு சால்வ கொடுத்ததினு 665 பணம்.

4. 1002 மேடம் 13—திருவனந்தபுரத்து மதிலகத்து திருவாம்பாடி மண்டபத்தில் வச்சு சாலெயில் கிராமத்தில் பத்மநாபதீக்ஷிதரெக்கொண்டு ஸ்ரீ பாகவதம் வாயன துடங்கியது ஸமாப்தமாயப்போள் பதினெட்டேகால் முழத்தில் ஒருகுத்து சுவன்ன பட்டும் 500 பணவும் ஸம்பாவன கொடுத்து.

5. 1002-மிதுனம் 12—தஞ்சாவூர் நின்னு திருவனந்தபுரத்து வன்னிரிக்குன்ன பரத நாட்டியக்காரில் பிச்சு பாகவதர் முதல்பேரெ யாத்ர பறஞ்சயச்சப்போள் ஸம்மானமாயிட்டு 250 ரூபா கொடுத்து.

6. 1004-விருச்சிகம் 4—சோதி ஆட்டத்திருநாளினு வெடிக்கெட்டினு கம்பத்தில்கேறி பாணவித்ய நடத்திய திருவிதாங்கோட்டு பரமேச்வரன்பிள்ளெ ஆசானு ஒரு வீரச்ருங்கல கொடுத்து.

7. 1004 சிங்கம் 21—திருநெல்வேலியில் நின்னு வெங்கு அய்யர் என்னொரு கவிராயன் இவிடெ வன்னு பார்த்து கவித உண்டாக்கி அத்தேகத்தினு ஸம்மானமாயிட்டு ரண்டு வீரச்ருங்கல கொடுக்குன்னதினு 500 பணம் சில விட்டு.

8. 1004 தனு 27—சோளதேசம் கிருஷ்ண சாஸ்திரிகள் திருவனந்தபுரத்துவன்னு தர்க்கம் முதலாய சாஸ்திரங்களில் பிரஸங்கம் செய்க கொண்டு. சாஸ்திரிகள்க்கு ஸம்மானமாயிட்டு 490 பணத்தில் ஒரு சால்வையும், 1260 பணவும் கொடுத்து.

(9) 1004 கும்பம் 11—கர்னல் மோரிஸன்டெ ஆளாயிட்டு வடக்கன் மயதீன் என்னவன் சீனத்து வேலையில் ரண்டு ஸங்கீதப்படம் ?) கொண்டுவன்னது கொட்டாரம் வகைக்கு வாங்கிச்சு 3085 பணம் கொடுப்பிச்சு

10. 1004 கும்பம் 11—திருச்செந்தூர் நடடுவனும், தாஸி ராமனாத மாணிக்கம் முதல்பேரும் இவிடெ வன்னதினு சேஷம் ராமநாதமாணிக்கத்திண்டெ நாட்டியம் கண்டு. அவர்க்கு கீழில் ஏதுப்ரகாரம் ஸம்மானம் கொடுத்திரிக்குன்னு என்னு கணக்கு சோதன செய்யிச்சாறெ, ராமநாத மாணிக்கம் முதல்பேருக்கு 93-ம் ஆண்டு சித்திர மாஸத்தில் கஜனவில் நின்னும் 1000 பணம் செல்லம் வகையில் கெட்டிவன்னு முடிக்கினும் வீரசங்கலக்கும் கூடெ கொடுத்திரிக்குன்னது கூடாதெ, நித்தியச் செலவில் நின்னும் ரண்டுகுத்து சுவனன பட்டும் 150 பணவும் கருவேலப்புரையில் நின்னும் ஏழுமுழத்தில் ஒருபட்டும் ஒரு சந்த்ரக்காவிச் சேலயும் கொடுத்திரிக்குன்ன ப்ரகாரம் கணக்கு காணுக கொண்டு இப்போள் ஆள் அதிகம் கூடெ வன்னிரிக்குன்னதினால் இனமாயிட்டு 1400 பணம் கொடுது.

11. 1004 மீனம் 20—“மாளயவித” என்னகப்பல் சங்குமுகத்தினு ஸமீபத்து வச்சு காற்றுமறுத்து

கரய்க்குச்சேர்ன்னு சேதப்பெட்டுப்போக கொண்டு ஆ கப்பலில் நின்னு ஸாமானங்கள் சேதம் வராதெ கரய்க்கிறக்கிச்சுக் கொடுத்திரிக்குன்னதினும் வச்சு ஸூக்ஷிக்குன்னதினு புரகெட்டிய வகய்க்கும் செலவாய 1549 அரே அரக்கால் பணம் கப்பல் காரனோடு வாங்கிக்குன்னது ராஜ்யத்தெ மனஸ்ஸினு போராத்ததாக கொண்டு கணக்கில் செல வெழுதி.

12. 1004—இடவம் 8—கொட்டாரத்தில் வாயிக்குன்ன தர்மபுரம் மடம் வக விசாரம் வைத்தியலிங்கம் பண்டாரத்தினே கொண்டு வாஸிஷ்டம் கிரந்தம் எழுதிச்சதினு வீரச்ருங்கலயும் இருமாயி பணவும் ஸம்மானிச்சு.

13. 1005 கும்பம் 14-திருச்செந்தூர் தாஸி ராம நாதமாணிக்கத்திண்டெ வக முதல் கார்யங்கள் கோழித்தோட்டத்து வச்சு மோட்டிச்சுக் கொண்டு போயது கிட்டாத்தது கொண்டு 2100 பணம் கொடுத்து யாத்ர அயச்சு.

14. 1005 மீனம் 1— இங்கிலீஷ் புஸ்தகம் எழுதுன்னதினு ஆக்கியிருன்ன சென்ன பட்டணத்து கன்னி முதலிக்கு மாஸம் ஒன்னினு 105 பணம் வீதம் அனுவதிச்சு.

15. 1005 மிதுனம் 14—கொட்டாரத்தில் கூடெ பார்க்குன்ன துதிக்காட்டு குஞ்ன்டெ பவனத்தில் செலவு கழிக்கேண்டுன்னதினு வகயில்லாதெ புத்திமுட்டாயித் தீர்ன்னிரிக்குன்ன ப்ரகாரம் ஸங்கடம் போதிப்பிச்சதினு மாஸம் ஒன்னினு 60 இடங்கழி நெல்லுவீதம் கொடுக்கான் கல்பிச்சு.

16. 1007 மகரம் 18—மைஸூர் ராஜ்யத்து நின்னும் வன்ன வீணக்காரன் சந்தராமனும் முகுந்த ராமனும் ஆயிரம் பணம் விலய்க்கு நாலு வீரச்ருங்கல கொடுத்து

17. 1009 சிங்கம் 17—தஞ்சாவூரில் நின்னும் வன்ன தாஸி மங்கம்மாள் ஹிந்துஸ்தானியிலும் கன்னடத்திலும் நல்ல வண்ணம் பாடியது கொண்டு 300 ரூபா இனம் கொடுத்து.

18. 1009 விருச்சிகம் 28—அஞ்சுதெங்கில் பார்க்குன்ன பிரான்சிஸ் மேஸ்திரியெயும், தஞ்சாவூர் சித்திரக்காரன் ராமஸ்வாமி நாயிக்கனேயும் கொண்டு ஒரு படம் எழுதிச்சதினு 1050 பணம் இனம் கொடுத்து.

19. 1009 மகரம் 10—மைஸூரில் சிருங்கேரி மடத்தில் நின்னு வன்ன யோகி நாராயணனு திரிச்சு போயப்போள் 200 ரூபா ஸம்மானம் கொடுத்து.

20. 1009 மிதுனம் 27—தஞ்சாவூரில் நின்னு இவிடெ வருத்திய நட்டுவன் வடிவேலுவிண்டெ மகள் ஒரு பெண்ணினெ தஞ்சாவூர் வச்சு கல்யாணம் கழிப்பிக்குன்னதினு (ஏழே அரைக்கால் விலய்க்கு) 700 கும்பனி ரூபா கொடுத்து.

21. 1010 சிங்கம் 21—தஞ்சாவூர் நின்னுவன்ன ரங்கய்யர் பாகவதர்க்கும், "ஸரபத்து" (ஸ்வரஜித்து) வாத்தியம் வாயிக்குன்ன பட்டாணி ஸெய்யது ஸாலிமானும் ரண்டு வீரசங்கலேயும், ரண்டு சால்வையும் இனம் கொடுத்து.

22. 1010 கன்னி 18—மைஸூரில் നിന്നു வன்ன ஸிம்ஹாத்ரி சாஸ்திரிகள்க்கு 595 பணத்தினு ஒரு மஞ்ச சால்வ ஸம்மானிச்சு.

23. 1010 கன்னி 18—கொட்டாரத்தில் ஸாரங்கி வாயிச்சு வன்ன தஞ்சாவூர் சிந்தாமணி என்ன ஆளினு மாஸம் ஒன்னுக்கு 150 பணம் சம்பளம் பதிவுவச்சு கொடுக்குன்னதினு கல்பிச்சு.

24. 1010 துலாம் 4—கொட்டாரத்தில் பாடிவன்ன தஞ்சாவூர் வல்லபராயர்க்குமாஸம் ஒன்னினு 50 பணம் வீதம் சம்பளம் பதிவு வச்சு கொடுக்கான் கல்பிச்சு.

25. 1010 தனு 21—தஞ்சாவூர் நின்னும் திருவனந்தபுரத்து வன்னு பார்த்த தாஸி நீராள் என்னவள் திரியே போகுன்னது கொண்டு இனமாயிட்டு (ஏழே அரைக்கால் விலய்க்கு) 350 ரூபா கொடுத்து.

26. 1010 தனு 21—ஹைதராபாதில் நின்னு திருவனந்தபுரத்து வன்னு பார்த்த கிருஷ்ணப்ப சாஸ்திரிகள்க்கு (ஏழே அரைக்கால் விலைக்கு) 100 ரூபா கொடுக்குன்னதினு கல்பிச்சு

27. 1010 தனு 25—காளஹஸ்தியில் நின்னு வன்ன சிவராம சாஸ்திரிகள்க்கு 490 பணத்தினு ஒரு சால்வ வாங்கி ஸம்மானிச்சு.

28. 1010 கர்க்கடகம் 21—கல்லிக்கோட்டநின்னும் வன்ன ஹிந்துஸ்தானி நாட்டியக்காரர்க்கு சம்பளம் பதிவு வச்சு கொடுத்திட்டில்லாய்க கொண்டு ஆயதில் பாகீரதி முதலாய தாஸிமார் பேரு மூன்னினும் நட்டுவன்மார் முதலாய மேளக்காரு அஞ்சி

னும் இப்ரகாரம் எட்டுபேர்க்கும் கூடெ மாஸம் ஒன்னினு 40 பூவராகனு 25 பணம் விலய்க்கு 1000 பணம் வீதம் பதிவில் கூட்டிக் கொடுக்குன்னதினு கல்பிச்சு.

29 1011 கன்னி மாஸம் 9—தஞ்சாவூர் நின்னு வன்ன நட்டுவன் வடிவேலுவினும், சின்னய்யாவினும், தித்திக்காரன் பழனியாண்டி என்னவனும் கூடெ இனமாயிட்டு 700 ரூபாயும், தஞ்சாவூர் நின்னு வன்ன தாஸி கனகமாலா என்னவள்க்கு வழிச்செலவினயிட்டு 50 ரூபாயும் உள்ப்பெடெ ஏழு விலேக்கு 5250 பணம் கொடுக்குன்னதினு கல்பிச்சு.

30. 1011-5-22—தந்தம் கொண்டு ஸ்வரஜித்து வாத்தியம் தீர்த்த கடச்சில் வேல நாராயணனு ஒற்றக் கண்ணி வீரச்ருங்கல கொடுத்து.

31. 1011-5-22—குவாலியர் தேசத்து நின்னும் வன்னு பாடிய லக்ஷ்மணதாஸ் முதலாய மூன்னு பேர்க்கு மூன்னு வீரச்ருங்கலேயும், ஸ்வரஜித்து வாத்தியம் பணிசெய்த ஆசாரி நாவாயிக்குளம் கொச்சு குஞ்சினு ஒரு வீரச்ருங்கலேயும் கொடுத்து.

32. 1012 சிங்கம் 24—தஞ்சாவூர் தாஸினி என்னவன் கிருஷ்ண படம் முதலாயி ஏதானும் சித்ரங்கள் எழுதிகொண்டுவன்னு காணிச்சதில், ஆ வேலேக்கு நல்ல பரிசயம் உள்ளவனகையால் அயாளெ மாஸம் ஒன்னுக்கு 45 ரூபா வீதம் சம்பளம் கொடுத்து இவிடெ நியமிச்சு.

33. 1012 துலாம் 16—ரெஸிடெண்டு முகாந்திரத்தில் வருத்தி ஏல்பிச்ச மைக்ரொஸ்கோப் கண்

ணடி ஒன்னுக்கு 300 ரூபாயும் ஆ கண்ணடியுடெ விவரம் எழுதியிரிக்குன்ன புஸ்தகம் ஒன்னுக்கு அன்பத்திரண்டர ரூபாயும், க்பாமெரா அப்ஸ்கியூர என்ன கன்னடி ஒன்னுக்கு 42 ரூபாயும், கண்ணடி பெட்டகம் பொதிஞ்சுவன்னஈயத்தினு ஒருரூபா நாலணயும், பங்காளத்து நின்னும் வருத்தி ஏல்பிச்ச கடுதாஸு புக்கினு ரூபா 468 அணு 5, பை 6-ம் கொச்சியில் நின்னு வருத்தி ஏல்பிச்ச "பிடில்" வாத்யவும் பெட்டியும் வகைக்கு விலெ ரூபா 50-ம், நாட்டு பிட்டில் வாத்தியம் ஒன்னுக்கு விலெ ரூபா 10--ம், கொல்லத்து ச்ராப்பு வசம் வாங்கிச்சு கொட்டாரம் வகையில் ஏல்பிச்ச "சருகு முந்தாணி" ஒன்னுக்கு 637 பணவும் கொடுக்குன்னதினு கல்பிச்சு.

34. 1013-3--16 கொல்லத்து நின்னு வன்ன கச்சவடக்காரன் ருஸ்தும்ஜி பக்கல் நின்னும் ஒரு ஸங்கீதப்பெட்டி 250 ரூபா கொடுத்து வாங்கி.

35. 1013-11-26—கும்பகோணம் வாஸுதேவாசாரியர் வன்னு கண்டு வித்யா ப்ரஸங்கம் நடத்தியதினு ஸம்மானமாயி ரண்டு வீர ச்ருங்கலெயும் ஒரு சரப்பொளியும் ஒரு ஜோடி சால்வையும் கொடுத்து.

36. 1014 சிங்கம் 26—சீமையில் நின்னு வன்ன ஆரம் ரோப்பீஸினு சீனவேல முதலியதில் பரிசயம் உள்ளது கொண்டு 1013 ஆடி ஒன்றும் தேதி முதல் மாஸம் ஒன்னுக்கு 15 ரூபா வீதம் சம்பளம் கொடுக்குன்னதினு கல்பிச்சு.

37. 1016-3-20 அப்பீல் கோர்ட்டில் நாலாம் ஜட்ஜி விரஸ்வாமி நாயிக்கன் முகாந்திரம் சென்ன

பட்டணத்தில் நின்னும் கொட்டாரம் வகைக்கு "ஸங்கீத நாழிக மணி" வருத்தியதினு 385 ரூபா செலவாக்கி.

38. 1016—11—27 ரெஸிடெண்டு சிபார்சுப்ரகாரம் மாவேலிக்கர பார்க்குன்ன பாதிரி பீட்டு என்ன ஸாயிப்பினு மலயாள வியாகரண புஸ்தகம் எழுதுன்னதினு 1000 ரூபா இனும் கோடுத்து.

39. 1018 சிங்கம் 22—புக கப்பல் வகைக்கு 1000 கும்பனி ரூபா அர்பத்து நாடன் கம்பெனிக்கு கொடுக்குன்னதினு கல்பிச்சு.

40. 1018 கன்னி 7—முஞ்சிர மடத்தில் பாவட்டி சாமியார்க்கும், கொட்டாரத்தில் பார்க்குன்ன மேரு கோஸாயிக்கும் கொடுத்த பல்லக்கிலும், கோத்துலாயம் வக அம்பாரியிலும் கெட்டுன்னதினு ரண்டாயிரத்தி நாநூற்றி அருபத்தி நாலே முக்கால் பணம் கொடுக்குன்னதினு கல்பிச்சு.

41. தெக்கேத் தெருவில் வச்சு குதிர வித்யகாணிச்ச பிரஞ்சுகார்க்கு ரண்டுபதக்கனும் ஒரு மோதிரவும், கொடுத்ததினு விவரம் ஆகெ செலவு 52793¼ பணம்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

(13) மதிலகம் சுருணை நம்பர் 194?; ஓல நம்பர் 186.
தியதி இல்லை

## பாட்டு

இந்தனைமோடிதானென்னடீ-என்ஸ்வாமிமீதில்
இணங்குவதே லக்ஷம் பொன்னடி
மத்தக ஜராஜன் ராமவர்ம குலசேகரன்மேல் (இத்தனை
கொங்கையில் ஜவ்வாது பூசடி—வஸந்தகால கோகிலம்
போலே வார்த்தை பேசடி
செங்கை வளைமின்ன வீசடி—உனைபகைத்த
திருவாயாரெயெல்லாம் ஏசடி
தங்கமே மய்பல் கிடச்சால் பங்கமே பொங்குமே நல்ல
துங்கமதனும் ரதியும் துயிந்ததுபோலவே துய்ய (இத்தனை)
காதில் ரத்னப்பணி பூட்டடி
மதிநுதலில் கஸ்தூரிதிலகம் தீட்டடி
துதிக்கும் தம்புரு மீட்டடி
தோடி கல்யாணி ராகமிசை பாடிக் கட்டடி (இக்தனை)
கோதையே! மலர்க்கோதையே! வேதையே சொல்லினைப்
புஷ்ப
சீதநிற மெத்தையின் மேல் நீ தயவாக சேராமல் (இத்தனை)
ஸுந்தரன் சேர்த்தாலத்தாரென்
டில்லிவரைக்கும் துலங்கிய கீர்த்திக்குபேரன்
குந்தரக்குழலார் சேர்குமாரன்
மார்த்தாண்டவர்ம சேகரன் மருகதீரன்
செந்தமிழோருக்குகந்த சிவிகை கவிகை
தந்த மணிதீபன் பூயல் ராமவர்ம குலசேகரன் மேல்
(இத்தனை)

(இது ஸ்ரீஸ்வாதித்திருநாள் மகாராஜாவைப் புகழ்ந்து எழுதிப்பட்ட ஒரு தமிழ் பாட்டு. இயற்றியவர் ஊர், பெயர் காலம் முதலிய விவரங்கள் தெரியவில்லை.)

MADURAI UNIVERSITY LIBR
9 NOV 1972